பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | சித்திரை 18, திங்கட்கிழமை 01.05.2017 | கதிர் 176

Facial, Straightening, Bleaching, Face Massaging, Threading
வெலா சலூன்
WELLA Hair Dressing
Ladies & Gents
இல.8, நவீன சந்தை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 077 658 4453, 021 205 4116

# எமது மக்களுக்கு ஏற்பில்லாத தீர்வை ஒரு போதும் ஏற்கோம்!



## அடித்துக் கூறுகிறார் சம்பந்தன்

கொழும்பு, மே 01

எமது மக்களுக்கு ஏற்பில்லாத தீர்வை நாங்கள் ஒரு போதும் ஏற்கமாட்டோம்; ஏற்கவும் முடியாது; ஏற்கப் போவதுமில்லை; அது உறுதி. தீர்வு முன்வைக்கப்பட்ட பின்னர் அதனை எமது மக்களிடம் சமர்ப்பிப்போம். எமது மக்களின் ஆலோசனைகளை நாம் பெறுவோம். மக்களின் கருத்துக்களுக்கு உட்பட்டுத்தான் நாங்கள் இறுதி முடிவெடுப்போம். இப்போ கிட்டியுள்ள வாய்ப்பை நாங்கள் உதாசீனம் செய்யக்கூடாது. இப்படிப்பட்ட வாய்ப்பு இதற்குப் பின்னர் வரும் என நாங்கள் எதிர்பார்க்கவும் முடியாது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பக்கம் 18 >>>





மட்டக்களப்பு – கருதாவளையில் நடைபெற்ற தந்தை செல்வாவின் 40 ஆவது ஆண்டு நினைவு தின விழாவில்...

ஐ.நா.,அமெ. உட்பட சர்வதேசம் - யாரும் எம்மைக் கைவிடாதமையால்

# ஈழத் தமிழர் அரசியல் இன்று திருப்பு முனையில்!



## நம்பிக்கையுடன் சுமந்திரன் அறிவிப்பு

மட்டக்களப்பு, மே 01

ஐ.நா.சபை, அமெரிக்கா உட்பட சர்வதேசம் எவையும் எங்களைக் கைவிடாதமையால் ஈழத்தமிழர் அரசியல் இப்பொழுது திருப்பு முனையில் வந்து நிற்கிறது. அதையிட்டு நாம் மகிழ்ச்சி கொள்ள முடியும் என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தந்தை

பக்கம் 18 >>>

# இன்று மே தினம்

கொழும்பு, மே 01

இன்று மே தினம். அதனை ஒட்டி வடக்கு, கிழக்கிலும், மலையகத்திலும், தேசியரீதியிலும் மே தினப் பேரணிகளும், கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

## தேசிய ரீதியில் கூட்டங்கள்

வடக்கு, கிழக்குத்தமிழர்தாயகத்துக்கு வெளியே, கொழும்பிலும் நாட்டின் ஏனையபலபகுதிகளிலும் மொத்தமாக 17 கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன எனவும், இவற்றுள் அதிகப்படியாக 11 கூட்டங்கள் கொழும்பில்நடைபெறவுள்ளன எனவும் தெரியவருகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மே தினக் கூட்டம் அந்தக் கட்சி

பக்கம் 18 >>>


## தமிழர் தாயகப் பிரதேசத்தில்

யாழ்ப்பாணம், மே 01

போருக்குப் பின்னர் தமிழர் தாயகத்தில் இன்று பல்வேறு இடங்களில் மே தினப் பேரணிகளும் கூட்டங்களும் இடம்பெறவுள்ளன. அரசியல் கட்சிகளும் தொழிற்சங்கங்களும் சமூக மட்ட அமைப்புக்களும் கூட்டாகவும் தனித்தனியாகவும் இந்த நிகழ்வுகளை ஏற்பாடுசெய்துள்ளன.

பக்கம் 03 >>>

அளப்பு அருணாசலம்



இன்டைக்கும் உழைப்பாளரை மறந்து போட்டு தங்கடை அரசியல்தான் பேசுவினம்...

### ஜனாதிபதி, பிரதமருடன் ஜே.வி.பி. பேசும்

உத்தேசபுதியஅரசமைப்புக் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் விரிவான பேச்சுக்களில் ஈடுபடப் போவதாக ஜே.வி.பி. அறிவித்துள்ளது. (உ)

# கேப்பாபிலவு மக்கள் இன்று ஒப்பாரிப் போர்!

முல்லைத்தீவு, மே 01

தொழிலாளர்தினமான இன்றைய நாளைத் தாங்கள் ஒப்பாரிப் போராட்டமாக முன்னெடுக்கப் போகிறார்கள் எனக் கேப்பாபிலவில் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தெரிவித்துள்ளனர்.

கேப்பாபிலவு மக்களின்நில

பக்கம் 18 >>>

முல்லையில் காணாமல் போனோரின் உறவுகள்

# மே நாளை துக்க தினமாக அனுஷ்டிக்கவும் தீர்மானம்

முல்லைத்தீவு, மே 01

சர்வதேச தொழிலாளர் தினத்தை தாங்கள் துக்க தினமாக அனுஷ்டிக்கப்போகிறார்கள் என முல்லைத்தீவு மாவட்ட காணாமற்போனோரின் உறவினர்கள் அறிவித்துள்ளனர்.

தாங்கள் 54 நாள்களாகப் போராட்டம் நடத்திவருகின்ற

பக்கம் 18 >>>

# முன்னாள் புலிப் போராளிகளை தமிழரசுக் கட்சி உள்வாங்கும்!

மட்டக்களப்பு, மே 01

யுத்தகாலத்தில்சரணடைந்த அல்லது படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர், புனர்வாழ்வு அளிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களைத் தமது கட்சியில் இணைத்துக்கொள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சி தீர்மானித்துள்ளது.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்திலேயே

பக்கம் 18 >>>

# இலங்கை வரும் இந்தியப் பிரதமருடன் ஒப்பந்தங்கள் எவையும் கைச்சாத்தாகா!

## ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவிப்பு

கொழும்பு, மே 01

உத்தியோக பூர்வ அழைப்பின் பேரில் இந்த மாதம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச வெசாக் தினக் கொண்டாட்டத்தில் மட்டுமே பங்கேற்பார். வேறு எந்தவொரு உத்தியோகபூர்வ நடவடிக்கையிலும் ஈடுபட மாட்டார்.

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

நாட்டின் சில பகுதிகளை சொந்தமாக்கிக் கொள்ளும் வகையில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கு இந்தியப் பிரதமர், இலங்கை வருகிறார் என சில இணையத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் பல்வேறு போலிப் பிரசாரங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த அனைத்துப் பிரசாரங்களும் அரசுக்கு எதிரான சிலரால் முன்னெடுக்கப்படும் போலிப் பிரசாரங்களாகும்.

அனைத்து நாடுகளும் இன்று இலங்கையுடன் நட்புறவுடன் செயற்பட்டு வருகின்றன. இதன்மூலம் இலங்கையை ஒரு அபிவிருத்தி அடைந்த நாடாகக் கட்டியெழுப்ப முடியும்.



இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் அனைத்து இனங்கள் மத்தியிலும் இருக்க வேண்டிய சமாதானம், ஐக்கியம் மற்றும் நம்பிக்கையை தகர்ப்பதற்கு அடிப்படைவாத சக்திகள் முயற்சித்து வருகின்றன. இது குறித்து மக்கள் உண்மையான தெளிவுடன் செயற்பட வேண்டும்.- என்றார்.

மட்டக்களப்பு, ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.







# முள்ளிக்குளத்தில் சமய வழிபாட்டை அடுத்து தமது காணிகளைப் பார்வையிட்டனர் மக்கள்

மன்னார் - முள்ளிக்குளத்தில் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் இருந்து நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்ட காணிகளுக்குள் பத்து வருடங்களின் பின்னர் தமது காணிக்குள் மக்கள் நேற்றுக் கால்பதித்துள்ளனர்.

முள்ளிக்குளம் பரலோக மாதா ஆலயத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற திருப்பலியை அடுத்து மக்கள் தமது நிலங்களைப் பார்வையிட்டனர்.

இந்தநிலையில், முள்ளிக்குளத்தில் மக்கள் வசிப்பதற்காக தற்காலிக வீடுகளை அமைத்து கொடுப்பதற்கு மீள்குடியேற்ற அமைச்சு முன்வந்துள்ளது.

மன்னார் - முள்ளிக் குளத்தில் கடற்படையினர் வசமுள்ள பொது மக்களின் 27 வீடுகள் தவிர்ந்த ஏனைய காணிகள் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

காரைநகர், மே 01

காரை சலஞ்சேர்ஸ் விளையாட்டுக் கழகம் காரைநகர் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் போட்டிகளின் இறுதிப் போட்டிகள் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் காரை சலஞ்சேர்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் தலைவர் பு.பிரவீனன் தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக பிரபல தொழிலதிபர் சண்முகம் சிவஞானமும் சிறப்பு விருந்தினராக காரைநகர் பிரதேச செயலர் ஈ.தயாரூபன், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக ஓய்வு நிலை கிராம அலுவலர் இ.திருப்புகலூர் சிங்கம் யாழ். பல்கலைக்கழக ஆங்கில விரிவுரையாளர் திருமதி வீ.யோகரத்தினம், ஜே/47 கிராம அலுவலர் இராசதுரை ஆகியோரும் கலந்து கொள்வர்.

# பஸில் மீதான விசாரணைகள் அடுத்தடுத்துத் தொடர்கின்றன



கொழும்பு, மே 01

முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு எதிரான மற்றுமொரு மோசடி வழக்குத் தொடர்பில் நிதி மோசடி விசாரணை பிரிவு, விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

ஷெரடன் என்ற ஹோட்டல் திட்டத்தில் பணம் முதலீடு செய்வது தொடர்பில் விசாரணை நடவடிக்கைக்காக பஸில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமான திருக்குமார் நடேசன் கடந்த 27 ஆம் திகதி பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவுக்கு அழைக்கப்பட்டிருந்தார்.

குறித்த நிறுவனத்தில் பஸில் ராஜபக்ஷவுக்கு நெருக்கமான வர்த்தகர் ஒருவரே பணம் முதலீடு செய்துள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

இந்த ஹோட்டல் திட்டத்துக்காக 9 பில்லியன் ரூபா முதலீடு செய்யப்பட்டுள்ளது. திருக்குமார் நடேசனுக்கு நெருக்கமான வர்த்தகர் அரசின் உயர் மட்டத்தில் பதவி வகித்த ஒருவராவார். அத்துடன் அவர் ஐக்கிய தேசிய கட்சியின் மாகாண சபை உறுப்பினராவார்.

வர்த்தகருக்கு இந்த பணம் எவ்வாறு கிடைத்ததென்பது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், அந்த பணம் டுபாய் சைப்பிரஸ், மொரிஷியஸ் ஆகிய நாடுகளின் கணக்குகளில் வைப்பிலிடப்பட்டுள்ளது.

பணம் வைப்பிலிடப்பட்டுள்ள முறை தொடர்பில் பொலிஸ் நிதி மோசடி விசாரணை பிரிவு மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. குறித்த நிறுவனத்தின் பங்குகளில் ஒரு வீதம் திருக்குமார் நடேசனுக்குச் சொந்தமானவை என்று தெரிய வந்துள்ளது.

(ஐ)

## தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டம்

யாழ்ப்பாணம், மே 01

தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணியின் மே தினக் கூட்டம் இன்று பிற்பகல் 3 மணியளவில் சாவகச்சேரி சிவன் கோவிலடி இடம் பெறும். 2.30 மணியளவில் கைதடிச் சந்தியில் இருந்து பேரணி ஆரம்பமாகி சாவகச்சேரியைச் சென்றடைந்த பின்னர் கூட்டம் நடைபெறும் என்று முன்னணியின் தலைவர் கஜேந்திர குமார் தெரிவித்துள்ளார்.

(ஐ)



# காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள் வடக்கு மாகாண முதலமைச்சருடன் சந்திப்பு!

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை நேற்று முதலமைச்சருடைய அலுவலகத்தில் சந்தித்துள்ளனர்.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பிரிந்து போராடி வருகின்ற நிலையில், அவர்களது தனித்தனியான போராட்டங்களுக்கு இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. இந்த நிலையில் அனைத்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களையும் ஒன்றிணைத்து ஓர் அமைப்பை உருவாக்குவது தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ)

# மந்த கதியில் நகர்கின்றது அமைச்சுக்களின் செயற்பாடு!

## அமைச்சரவை மாற்றம் குறித்த தகவலே காரணம்

கொழும்பு, மே 01

அமைச்சரவை மாற்றமொன்று இடம்பெறும் என்று அரச உயர் மட்ட தகவல்கள் வெளியான நிலையில், அமைச்சுக்கள் பலவற்றின் நடவடிக்கைகள் மந்தகதியில் இடம்பெற்று வருகின்றன என்று அரசின் சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர்களின் நடவடிக்கை ஸ்தம்பிதமடைந்துள்ளதால் அமைச்சுக்களின் கீழால் உள்ள கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் என்பவற்றின் நடவடிக்கைகளும் வீழ்ச்சியடையும் நிலைமை உருவாகியுள்ளது.

தான் வகிக்கும் அமைச்சுப் பதவி பறிபோகும் என்ற சந்தேகம் உள்ளதால், அமைச்சர்களும், அதன் செயலாளர்களும் தற்பொழுது முன்னெடுத்துச் செல்லும் திட்டங்களை இடைநிறுத்தியுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த இரண்டு மூன்று மாதங்களாக வாய்ச் செய்தியாக மாத்திரம் காணப்பட்ட இந்த மாற்றம் பற்றிய விடயம், கடந்த வாரம் ஜனாதிபதி விடுத்துள்ள அறிவிப்புடன் இன்னும் அந்தச் சந்தேகம் அதிகரித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, அமைச்சரவை மாற்றங்கள் தொடர்பில் கடந்த வார அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீவிர வாக்குவாதம் இடம்பெற்றது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய அமைச்சர்கள் இதன் போது தாம் பதவியில் இருந்து நீக்கப்பட்டால், மஹிந்த ராஜபக்ஷவில் கூட்டு எதிர்க்கட்சியுடன் இணைந்து கொள்ளப் போகின்றனர் என்று எச்சரித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ விடுதலைப் புலிகளின் கனவுகளில் ஒன்று நனவாகியது

## பெருமையுடன் கூறுகிறார் அமைச்சர் ஐங்கரநேசன்

கிளிநொச்சி, மே 01

தமிழீழ விடுதலைப் புலிகளின் கனவுகளில் ஒன்று நிறைவேறியிருக்கின்றது. அந்தக் கனவை வடக்கு மாகாண விவசாய அமைச்சு நிறைவேற்றியிருக்கின்றது என்பதில், தான் பெருமை அடைகிறார் என வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

கிளிநொச்சி அறிவியல் நகரில் நிர்மாணிக்கப்பட்ட பிராந்தியக் கால்நடைப் பயிற்சி நிலையம் நேற்று முன்தினம் சனிக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:-

விடுதலைப் புலிகள் யுத்தத்தில் மாத்திரம் ஈடுபடவில்லை. கல்வி வளர்ச்சியிலும் கூடுதல் அக்கறை காட்டினார்கள். இதனாலேயே பல்கலைக்கழகம் ஒன்றுக்குரிய கட்டுமானங்களை உருவாக்கும் நோக்கில் அறிவியல் நகரை உருவாக்கி கட்டநிர்மாணப்பணிகளையும் முன்னெடுத்திருந்தார்கள்.

இப்போது அறிவியல் நகரில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் இயங்கி வருகிறது. நாங்களும் பண்ணையாளர்களுக்கும், எமது கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் அறிவூட்டும் நோக்கில் பிராந்திய கால்நடை பயிற்சி நிலையம் ஒன்றை நிர்மாணித்திருக்கிறோம்.

அந்தவகையில் விடுதலைப் புலிகளின் கனவுகளில் ஒன்று இன்று நிறைவேறியிருக்கிறது. அதை எமது திணைக்களம் செய்து முடித்திருப்பதையிட்டு நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

விடுதலைப் புலிகள் பல் மருத்துவப் பயிற்சி நிலையம் ஒன்றை நிர்மாணிக்க ஆரம்பித்திருந்தார்கள். அரைகுறையாக இருந்த அந்தக் கட்டடத்தின் அத்திவாரத்தின் மீதே நாங்கள் கால்நடைப் பயிற்சி நிலையத்தைக் கட்டிமுடித்திருக்கிறோம்.

சகல வசதிகளையும் கொண்டதாக இதனை அமைப்பதற்கு ஐந்து கோடி ரூபா செலவிடப்பட்டுள்ளது. இந்நிதியை மாகாண அரசு, மத்திய அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கியுள்ளன. ஒரே தடவையில் இவ்வளவு பெருந்தொகைப் பணத்தைப் பெறுவதில் இருக்கக்கூடிய சிரமங்கள் காரணமாகவே இதன் கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்வதில் காலதாமதம் ஏற்பட்டது.

கால்நடை அபிவிருத்தியில் அதற்கான பயிற்சி மிகவும் அவசியம். எமது கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் பண்ணையாளர்களும் பயிற்சியைப் பெறுவதற்குப் பெரும் சிரமங்களின் மத்தியிலேயே கண்டியில் குண்டகசாலையில் உள்ள பயிற்சி நிலையத்துக்குச் சென்று வருகிறார்கள்.

கிளிநொச்சியில் பிராந்திய கால்நடைப் பயிற்சி நிலையத்தை நாம் இப்போது அமைத்திருப்பதன் மூலம், அவர்கள் சிரமங்கள் இல்லாமல் பயிற்சிகளை இனிமேல் இங்கேயே பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். - எனவும் தெரிவித்தார். (ம)

# வகுப்புக்களைப் புறக்கணித்தால் மகாபொல நிறுத்தப்படும்

## மாணவரை எச்சரிக்கிறது மானியங்கள் ஆணைக்குழு

கொழும்பு, மே 01

போராட்டங்களில் பங்கேற்பதற்காக வகுப்புக்களைப் புறக்கணிக்கும் பல்கலைக்கழக மாணவர்களுக்கு வழங்கப்படும் மகாபொல புலமைப் பரிசிலை இடைநிறுத்துமாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, பல்கலைக்கழகங்களுக்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போராட்டங்களில் பங்கேற்பதற்காக மாணவர்கள் வகுப்புக்களைப் புறக்கணிப்பதால் பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கைகள் வீழ்ச்சி கண்டுள்ளதாகவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு கூறுவதாகக் குறிப்பிடப்பட்டுகின்றது.

இதேவேளை, மானியங்கள் ஆணைக்குழுவின் இந்த நடவடிக்கைக்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடும் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது.

மாலபேதனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடும் மாணவர்களை இலக்கு வைத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் இணைப்பாளர் லஹிரு வீசேகர குற்றம் சுமத்தியுள்ளார். (ம)

# போதையில் வாகனம் செலுத்துவோரை கைதுசெய்ய விசேட நடவடிக்கை

கொழும்பு, மே 01

மே தினமான இன்று மது போதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்கு விசேட பொலிஸ் நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

பொது மக்களின் பாதுகாப்புக்காக இன்று சுமார் 11 ஆயிரத்துக்கும் அதிகமான பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

கொழும்பு நகரின் பாதுகாப்புக்காக மாத்திரம் சுமார் 7 ஆயிரம் பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர் என்வும் அவர் தெரிவித்தார். (ம)

# மஹிந்த மைதானத்தில் யானைகள் அட்டகாசம்

சூரியவெவ மஹிந்த ராஜபக்ஷ தேசிய கிரிக்கெட் மைதானத்தில் புகுந்த காட்டு யானை ஒன்று அந்த மைதானத்தைச் சேதப்படுத்தியுள்ளது.

மைதானத்தின் இரண்டு பாதுகாப்பு வேலிகளை உடைத்து அந்த யானை உள் நுழைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மைதானத்தின் வளாகத்தில் காணப்பட்ட பல தென்னைமரங்களை அந்த யானை சரித்துள்ளதுடன் ரசிகர்கள் நுழையும் பாதுகாப்பு வேலியையும் உடைத்துள்ளது.

மைதானத்துக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவப் பாதுகாப்பை அகற்றியதன் காரணமாகவே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகப் பிரதேசவாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

சூரியவெவ உள்ளிட்ட பல கிராமங்களுக்குக் காட்டுயானை பிரச்சினை காணப்படுவதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர். கடந்த வாரம் மாத்திரம் காட்டுயானைத்தாக்குதலில் 23 வீடுகள் சேதமடைந்துள்ளதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்துள்ளனர்.

# வித்தியா கொலை வழக்கு; ட்ரயல் அட்பார் விசாரணை?

யாழ்ப்பாணம், மே 01

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியாவைக் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்திப் படுகொலை செய்தனர் எனக் கூறப்படும் சந்தேக நபர்களுக்கு எதிராக ட்ரயல் அட்பார் முறையிலான விசாரணை ஒன்று இடம்பெறவுள்ளதாகத் தெரியவருகின்றது.

நீதிவான் நீதிமன்ற விசாரணைகள் முடிவுக்கு வந்துள்ள நிலையில், யாழ். மேல் நீதிமன்றில் சந்தேக நபர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகையைத் தாக்கல்செய்து இவ்வாறு ட்ரயல் அட்பார் விசாரணையை ஆரம்பிக்க சட்டமா அதிபர் திணைக்களம் தயாராகி வருவதாகவும் அறியமுடிகின்றது. (ம)

# பொன்சேகாவுக்கு இராணுவப் பதவி வழங்கினால் கூட்டமைப்பு எதிர்க்கும்

மட்டக்களப்பு, மே 01

போராட்டம் செய்வோரைக் கலகம் விளைவிப்போராகக் காண்பித்து, அதனை அடக்குவதற்காக சரத் பொன்சேகாவிற்கு உயர் மட்ட இராணுவப் பதவி வழங்கப்படுமாயின் அதனைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்க்கும் என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் இராணுவமயப்படுத்தப்பட்ட சூழலில் பெண்களுக்கு எதிரான வன்முறைக்ள் அதிகரித்துள்ளன எனவும் சுமந்திரன் கூறினார். (ம)

## தமிழர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று இரு இடங்களில் பிரதான மேதினக் கூட்டங்களை ஏற்பாடு செய்துள்ளது. வடக்கில் கிளிநொச்சியிலும் கிழக்கில் அம்பாறை - அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு தர்மசங்கரி விளையாட்டு மைதானத்திலும் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திற்கு முன்பாக இன்று காலை 9 மணிக்கு பேரணி ஆரம்பமாகி டிப்போ சந்திக்குச் சென்று அங்கு கூட்டம் இடம்பெறும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மேதின நிகழ்வு இன்று சாவகச்சேரி சிவன் கோயில் முன்றிலில் நடைபெறும்.

புதிய ஜனநாயக மார்ச்சிச லெனினிசக் கட்சியின் மே தினக் கூட்டம் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இலங்கை ஆசிரியர் சங்கம், யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம், கிராமிய உழைப்பாளர் சங்கம், அரச செயற்பாட்டுக் குழு, தமிழ் மக்களின் வாழ்வுரிமைக்கான செயற்பாட்டு மையம், சமூக விஞ்ஞான ஆய்வு மன்றம் ஆகிய 6 அமைப்புக்கள் இணைந்து மேதினப் பேரணியையும் கூட்டத்தையும் ஏற்பாடு செய்திருக்கின்றன. யாழ்.பல்கலைக்கழக முன்றிலில் பேரணியும் கூட்டமும் இடம்பெறும்.

ஜனநாயக தேசிய முன்னணியுடன் இண ரந்து முற்போக்குத் தமிழ்த் தேசியக் கட்சி ஏற்பாடு செய்துள்ள மேதின நிகழ்வு நல்லூர் கிட்டு பூங்காவில் இடம்பெறும்.

வடக்கு மாகாணக் கூட்டுறவாளர்களின் மே தினம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பில் இடம்பெறும். புதுக்குடியிருப்பு சிவன் கோயில் முன்றிலில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு மேதினப் பேரணி ஆரம்பமாகும். பிற்பகல் 4 மணிக்கு புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மண்டபத்தில் பொதுக்கூட்டம் இடம்பெறும்.

ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் மே தினக் கூட்டம் வவுனியா வீரபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும். இக்கூட்டத்தில் கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்வர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சமூக விழிப்புணர்வு அமைப்பு ஏற்பாடு செய்துள்ள மே தினக் கூட்டம் மாங்குளம் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்திற்கு முன்பாக இடம்பெறும். சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் கூட்டம் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில் நடைபெறும்.

மேற்படிக் கூட்டங்களை விட மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் மேதினப் பேரணிகளும் எழுச்சிக் கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

(ம-07-70-81-100-112)

# அரசியல்வாதிகளின் பிடியில் இருந்து தொழிலாளர்கள் மீண்டெழ வேண்டும்

## மேதினச் செய்தியில் யாழ்.பல்கலை. முகாமைத்துவ மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணம், மே 01

அரசியல்வாதிகளின் பிடியில் இருந்து தொழிலாளர்களை விடுவித்து அவர்களின் வாழ்வை மேம்படுத்தவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது என யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

உதிரத்தையே உழைப்பாக்கி உலகத்தையே உய்விக்கும் உழைப்பாளர்களை மே தினநாளில் தாங்கள் வணங்குகிறார்கள் எனவும் மேற்படி ஒன்றியம் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களின் உரிமைகளை வலியுறுத்தி மேற்படி மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள மேதின அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :-

உலகிற்கான உணவு, உடை, உறையுள் உள்ளடங்கிய அனைத்தையும் வழங்கும் தொழிலாளர்களின் தேவைகள் நீண்டகாலமாகப் பூர்த்தி செய்யப்படாமலேயே உள்ளது.

அரசியல்வாதிகள் முதல் முதலாளிவர்க்கம் வரை அனைவரும் தொழிலாளர்களின் உழைப்பை தங்கள் இலாபமாகவும், அதிகாரமாகவும் மாற்றி ஆடம்பரமாக வாழும் பொறிமுறையை உருவாக்கி சுகபோக வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

ஒவ்வொரு முறையும் தொழிலாளர் உரிமைக்காக அனுஷ்டிக்கப்படும் மேதினம் தேர்தலுக்கான வாக்குச்சேகரிப்பின் முன்னோட்டமாகவே நடாத்தப்படுகின்றது. தொழிலாளர்களாகிய நீங்கள் விழித்துக் கொள்ளும் வரை இந்த இழிநிலை தொடரும்.

எனவே, உங்கள் உரிமைக்கான நாளில் உங்களது சுபீட்ச வாழ்விற்காக பிரார்த்திப்பதோடு கீழ்வரும் கோரிக்கைகளையும் முன்வைக்கின்றோம்.

1. தமிழர் உரிமைக்கான நிரந்தர தீர்வு கால இழுத்தடிப்பின்றி வழங்கப்படல் வேண்டும்.

2. ஆக்கிரமிப்பிற்குட்பட்டிருக்கும் நிலங்கள் மற்றும் கடற்பரப்புக்கள் விடுவிக்கப்பட்டு விவசாயம், மீன்பிடி மற்றும் இதர தொழிலாளர்களின் தொழில்கள் பாதுகாக்கப்படல் வேண்டும்.

3. பல்கலைக்கழக கல்வி முறைகள், தொழில்சார் கல்விக் கட்டமைப்பாக மாற்றப்படல் வேண்டும்.

4. அரசியல் நன்மைகளுக்காகத் தகுதியற்றவர்களுக்குத் தரப்படும் வேலைவாய்ப்புகள் பட்டதாரிகளுக்கு வழங்கப்படல் வேண்டும்.

5. வடக்கு, கிழக்கு கடற்பிராந்தியங்களில் தெற்கு மீனவர்களின் பிரசன்னம் தவிர்க்கப்படல் வேண்டும்.

6. அரசியல் மற்றும் அதிகாரப்பிரயோகத்தைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்கில் இடம்பெற்று வரும் அத்துமீறிய குடியேற்றங்கள் உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## தொழிலாளர்களை மறந்து அரசியல் திருவிழாவாகும் மேதினம்

இன்று மேதினம். தொழிலாளர்களைச் சிறப்பிக்கும் நாள்.

உழைக்கும் மக்களின் உயர்வைப் போற்றும் நாள். மேதினியின் மேன்மக்கள் உழைப்பாளிகளே. அவர்களின் உன்னதத்தை மதிக்கும் மேன்மையான நாளாக இது அமைகின்றது.

'உழைக்கும் தொழிலாளர்களே! ஒன்றுபடுவோம் வாருங்கள்!' - என்பதே மேதினம் நமக்குத் தரும் உரிமை முழக்கமாகும்.

உழைப்பாளர்களின் சக்தியை - ஒற்றுமையை - அதன் வலிமையை - ஓங்கி ஒலிக்கச் செய்ய வேண்டிய இந்நாள், இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுக் கிடக்கும் அவல நிலையைக் காண்கிறோம். உழைப்பாளிகளின் ஐக்கியத்தைப் பலப்படுத்த வேண்டிய இத்தினத்தை, அரசியல் கட்சிகள், அமைப்புகள், கூட்டுக்கள் தங்கள் புஜபலபராக்கிரமத்தைக் காட்டும் அரசியல் கோமாளித்தன மேடையாக மாற்றியிருக்கின்றமை இன்று கண்கூடு.

ஏழை - பணக்காரன், ஆள்பவன் - ஆளப்படுபவன், ஒடுக்குபவன் - ஒடுக்கப்படுபவன், சுரண்டுபவன் - சுரண்டப்படுபவன் என்று வர்க்க முரண்பாடுகள் இன்று உலகெங்கும் பரந்து வியாபித்துக் கிடக்கின்றன. இந்த முரண்பாடுகளில் பாதிக்கப்பட்டுக் கிடக்கும் தரப்பின் நியாயத்தை உலகுக்கு எடுத்தியம்பி, நியாயம் உரைத்து, நீதியை மீட்பதற்காகவே மேதினம் போன்ற உரிமைத் தினங்கள் பின்பற்றப்படுகின்றன; கொண்டாடப்படுகின்றன.

ஆனால், இன்று அவை நோக்கம் கெட்டு, அரசியல் சுயலாபங்களுக்கான பொது நிகழ்வாகிவிட்டன.

நம் நாட்டில், அரசியல் கட்சிகள் தமது ஆள்பலத்தை நிரூபிக்கும் தேசிய நாளாக இதனை மாற்றிக் கொண்டு விட்டமை வேதனைக்குரியது.

நாடு முழுவதிலும் இன்று மேதின ஊர்வலங்களும், மேதினப் பேரணிகளும், நிகழ்வுகளும் நடக்கப் போகின்றன.

இவை முடிந்த பின்னர், இந்த நிகழ்வுகளினால் தொழிலாளர்களுக்குக் கிட்டிய நன்மைகள், சாதகங்கள் என்ன என்று ஒரு தடவை சீர்தூக்கிப் பாருங்கள். வேதனைதான் மிஞ்சும்.

இந்தப் பூமிப் பந்தையே இயக்கிக் கொண்டிருக்கும் உழைப்பாளர்களின் நிலைமையை உயர்வுபடுத்துவதற்கான, எந்த ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இந்நிகழ்வுகளில் எடுக்கப்பட்டிருக்க மாட்டா.

மாறாக, தத்தமது மேதினக் கூட்டங்களில், பேரணிகளில் திரண்ட மக்கள் கூட்டம் பற்றியும், அக்கூட்டங்களில் தோன்றிய அரசியல் தலைவர்கள் பேசிய அரசியல் கருத்துகள் பற்றியும் மட்டுமே மக்கள் மனதில் நிறுவையிடப்படும் - அல்லது அளவிடப்படும் - சூழ்நிலையே எஞ்சுகிறது.

நாளாந்தம் வியர்வை சிந்தி, இந்த மேதினியை மேம்படுத்திய உழைப்பாளி - தொழிலாளி - தனக்குரிய மே நாளிலும், அவர்களின் உழைப்பில் பிழைப்பு நடத்தும் அரசியல்வாதிகளுக்காகவும், அரசியல் தலைமைத்துவத்துக்காகவும் வீதியில் நின்று, வியர்வை சிந்தி, ஆர்ப்பரித்து, கோஷமிட்டு, வெறுங்கையுடன் வீடு திரும்பும் அவலமே நடந்தேறுகிறது; தொடர்கிறது.

இலங்கையின் இரண்டு பிரதான அரசியல் தரப்புகள் இன்றைய மேதின நிகழ்வை - தொழிலாளர் தின எழுச்சி நாளை - தங்களின் அரசியல் பலத்தைக் காட்டுவதற்கான நிகழ்வாக மாற்றியிருக்கின்றன என்பது வெளிப்படை.

ஆளும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பிரதான தரப்பான சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கண்டியிலும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான கூட்டு எதிரணி கொழும்பு காலி முகத்திடலிலும் பல பத்தாயிரங்களில் ஆள்களைத் திரட்டித் தமது அரசியல் செல்வாக்கை வெளிப்படுத்திக் காட்டக் கங்கணம் கட்டி நிற்கின்றன. மறுபுறம் கொழும்பில் ஐ.தே.க. தன் பலத்தைக் காட்டி நிற்கும்.

நாடு முழுவதிலும் இருந்தும் மக்களைக் கொண்டு, வந்து தத்தமது மேதின அரங்குகளில் கொட்டிக் குவித்துக் காட்டி, அதன் மூலம் தமது அரசியல் வலிமையை உணர்த்த முடியும் என்பது அத் தரப்புகளின் நிலைப்பாடு. அதனால் எல்லாப் பிரதான தரப்புகளுமே ஆளாளுக்கு இரண்டாயிரம் பஸ்கள் வரை பதிவு செய்து ஒதுக்கி வைத்திருக்கின்றன என்றும் தகவல்.

தொழிலாளியின் உழைப்பின் சக்தி குறித்து ஒரு விளக்கம் - வியாக்கியானம் - உண்டு.

*'வியர்வை சிந்தி உழைக்கும் மனிதனின் உழைப்பு சக்தி பொருளாக மாறுகின்றது. அந்தப் பொருள்களில் இருந்து ஒரு பண்ட உலகம் தோன்றுகின்றது. அந்தப் பண்ட உலகத்தில், உழைப்பவனுக்கு, அவனால் உருவாக்கப்படும் பொருள் அந்நியமாகின்றது. அவனது ஆக்கம், அவனது படைப்பு, அவனுக்கே அந்நியமாகி, அவனிடமிருந்து புறம்பாகி, பண்டமாகி, பணமாகி, லாபமாகி, இன்னொருவனின் செல்வமாகின்றது. முதலாளித்துவப் பொருள் உலகில் உழைக்கும் மனிதன், தனது ஆக்கத்தைத்தானே இழக்கும் பரிதாபமும், முதலாளியம் வலுவாகும் அநீதியும் இப்படியே கட்டவிழ்ந்து தொடர்கின்றன.'* - என்பது உண்மை.

உழைப்பவனுக்கு அவனது உழைப்பு அந்நியமாகி, வேறொருவனின் சொத்தாக மாறுவது போல, தொழிலாளர்களின் உரிமைகளுக்கான இன்றைய மேதினம் கூட, தொழிலாளரின் நலனுக்குப் புறம்பாகி, அரசியல்வாதிகளின் வலுவை வெளிப்படுத்தும் அரசியல் திருவிழாவாக மாற்றப்பட்டிக்கின்றது.

தொழிலாளர் தினம், தொழிலாளர் உயர்வுக்கான விடயங்களை மட்டும் கவனிப்பதாக முன்னெடுக்கப்பட வேண்டுமே தவிர, அரசியல் கட்சிகளின் நோக்கங்களை எட்டுவதற்கான அரசியல் திருவிழாக்களாக மாற்றப்படக் கூடாது. அது நடக்குமா? அது சாத்தியமா?

# முஸ்லிம்களுக்கு விமோசனம் நல்லாட்சி அரசில் இல்லை!

## சாடுகிறார் மஹிந்த

நல்லாட்சி அரசில் முஸ்லிம் மக்களுக்கு ஒரு போதும் விமோசனம் கிடைக்கப்போவதில்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் முஸ்லிம் பிரதிநிதிகளுடன் மேதினம் தொடர்பில் நடத்திய விசேட சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பத்து வருடங்கள் நாட்டை நான் ஆட்சி செய்தேன். எனது காலத்தில் இனவாதம் எப்போதும் தலை தூக்கவில்லை. 2012 ஆம் ஆண்டு சம்பிக்க ரணவக்கவே புர்கா மற்றும் ஹலால் பிரச்சினையை ஆரம்பித்து வைத்தார்.

2014ஆம் ஆண்டு தேர்தல் வருவதை அறிந்து கொண்டு அவ்வருட நடுப் பகுதியில் அளுத்கம கலவரத்தைத் திட்டமிட்டுச் செய்துள்ளார்கள்.

ஆட்சி மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கும் ஒருவரே ஞானசார தேரரை ஏவிவிட்டு கோட்டாபயவை பொதுபலசேனாவின் அலுவலகத்திறப்புக்கு அழைத்து மாயையான தோற்றம் ஒன்றை உருவாக்கி முஸ்லிம்களை எம்மிடம் இருந்து பிரித்தார்.

இன்று நாட்டில் முஸ்லிம் விரோதச் செயற்பாடுகள் எமது ஆட்சிக் காலத்தில் இல்லாத அளவு அதிகரித்து விட்டன. முஸ்லிம்களை எம்மீது ஏவிவிட்டு அவர்களை எம்மிடம் இருந்து பிரித்த பேயை இன்று அவர்களின் தேவைகளுக்காகப் பயன்படுத்துகிறார்கள்.

இந்த நல்லாட்சி அரசு முஸ்லிம்களிடம் எம்மை எதிரிகளாகச் சித்திரித்து முஸ்லிகளின் இருப்பை இன்று கேள்விக்குள்ளாக்கி வருகின்றது. எம்மை எதிரியாகப் பார்த்து முஸ்லிம்கள் தங்கள் இருப்புக்களை இழந்துவிடக்கூடாது.

அளுத்கம கலவரம் தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு ஒன்றை அமைத்து விசாரணை செய்தால் அளுத்கம கலவரத்தின் சூத்திரதாரிகள் யார் என்பது வெளிச்சத்துக்கு வரும்.

இல்லாவிட்டாலும் கூட உண்மை ஒருநாள் வெளியே வரும். அதனைப் பலநாள்கள் ஒழித்து வைக்கமுடியாது. உண்மை வெளிவரும் நாளில் இந்த நாட்டு முஸ்லிம்கள் தங்கள் தலையில் கையை வைப்பார்கள்.

உண்மையான துரோகிகள் யார் என்பதையும், அவர்களுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்து ஆட்சிப் பீடம் ஏறியவர்கள் யார் என்பதையும் அப்போது அவர்கள் உணர்ந்து கொள்வார்கள். - என்றார். (எ)

# கட்சியிலிருந்து மஹிந்தவை விரட்டியடிக்க ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படலாம்!

## எச்சரிக்கிறார் துமிந்த திஸாநாயக்க

கொழும்பு, மே 01

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சுதந்திரக் கட்சியிலிருந்து துரத்தியடிப்பதற்கான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டி வரலாம் என்று விவசாயத்துறை அமைச்சர் துமிந்த திஸாநாயக்க எச்சரித்துள்ளார்.

மேதின வைபவங்களை முன்னிட்டு சுதந்திரக் கட்சி சார்பில் கண்டி மாநகரில் பேரணியும், பொதுக்கூட்டமும் நடைபெறவுள்ளன.

இதற்கிடையே முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவான கூட்டு எதிர்க்கட்சி சார்பில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான மேதினக் கூட்டம் கொழும்பு காலிமுகத்திடலில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ளபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மேதினக் கூட்டம் நிறைவடைந்தவுடன் சுதந்திரக் கட்சியின் மத்திய குழு உடனடியாகக் கூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்போது காலிமுகத்திடலில் நடைபெறும் மேதின வைபவங்களில் கலந்து கொள்ளும் சுதந்திரக் கட்சியின் அனைத்து அரசியல்வாதிகளுக்கும் எதிராகக் கட்சியின் மத்திய குழுவால் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும்.

எந்தவொரு நபரையும் கட்சியிலிருந்து இடைநிறுத்துவதற்கு அல்லது வெளியேற்றுவதற்கான அதிகாரம் மத்திய குழுவுக்கே உண்டு.

அந்த வகையில் காலிமுகத்திடல் மேதின நிகழ்வுகளில் கலந்து கொண்டால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும் மத்திய குழுவால் நடவடிக்கை எடுக்கப்படும். அதில் எந்தத் தயக்கமோ, கருணையோ காட்டப்பட மாட்டாது. - என்றார். (எ)

# வில்பத்து வர்த்தமானி பிரகடனம் குறித்த பிரச்சினைகளைக் கையாள சுயாதீன குழு

வில்பத்து பாதுகாக்கப்பட்ட வனாந்தர வர்த்தமானிப் பிரகடனம் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்கென சுயாதீன குழு ஒன்றை நியமிக்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முடிவு செய்துள்ளார் என்று மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு அறிவித்துள்ளது.

அந்தக் குழுவில் உள்ளடங்கும் வகையில் பெயர் குறிப்பிட்ட பிரதிநிதி ஒருவரை தந்துதவுமாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிஷாத் பதியுதீனிடம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர் கோரியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சின் செயலாளர் ஆர்.செனவிரத்ன கையெழுத்திட்டு அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே இவ்வாறு கேட்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்தில் கடந்த மாதம் 31 ஆம் திகதி நடைபெற்ற உயர்மட்டச் சந்திப்பை அடுத்து இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது என அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வில்பத்து பாதுகாக்கப்பட்ட வனாந்தர வர்த்தமானியில் மறிச்சுக்கட்டி பிரதேசமக்களின் 4030.525 ஹெக்ரெயர் விஸ்தீரணம் கொண்ட காணி கையகப்படுத்தப்பட்டதை அடுத்து, அமைச்சர் ரிஷாத் பதியுதீன், தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி, ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் உட்பட ஜம் இய்யதுல் உலமா, முஸ்லிம் சபை, முஸ்லிம் சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் முஸ்லிம் சமூக நல அமைப்புக்கள் ஆகியன ஜனாதிபதியின் செயலாளருடன் உயர் மட்ட சந்திப்பை நடத்தி உண்மை நிலைவரங்களை எடுத்துரைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (எ)




வெகக் கட்டுப்பாட்டை பேணுவோம்.

விபத்தற்ற பயணமே விருப்பத்துக்குரிய பயணம்!

வளர்ப்பு மிருகங்கள் வீதிகளில் கட்டாக் காலிகளாக அலைந்து திரிவதைத் தவிர்ப்போம். அவற்றைக் கட்டி வளர்ப்போம். அவை மூலம் ஏற்படும் விபத்துக்களால் அவற்றுக்கும் பிரயாணிகளுக்கும் ஏற்படும் அசௌகரியத்தைத் தடுப்போம்.

சுற்றுச் சூழலுக்கு அமைவாக உரிய வேகக் கட்டுப்பாட்டை பேணுவோம்.

தகவல் : சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை / மாநகரசபை, யாழ்ப்பாணம்.


## நாளை

02.05.2017
செவ்வாய்க்கிழமை

நட்சத்திரம் : புனர்பூசம் மு.ப. 10.50 வரை
திதி : ஸப்தமி பி.இ. 2.41 வரை

சுபநேரம் : 10.27 – 11.57 வரை
இராகுகாலம் : 2.57 – 4.27 வரை

## மாங்குளத்தில் மே தின பேரணி

சமூக விழிப்புணர்வுக்கான அமைப்பின் ஏற்பாட்டில் மேதின நிகழ்வுகள் இன்று திங்கட்கிழமை வடக்கின் மைய நகரமான மாங்குளம் பகுதியில் இடம்பெறும் என்று அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் நா.தேவ கிருஷ்ணன் தெரிவித்தார்.

இதேவேளை வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் மீனவர்கள் ஆகியோர் இணைந்து நடத்தும் புரட்சிகர மேதினப் பேரணி மாங்குளத்தில் அமைந்துள்ள தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அலுவலகத்துக்கு முன்பாக பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகி மாங்குளம் மகா வித்தியால மைதானத்தைச் சென்றடையும். அங்கு பிற்பகல் 3 மணிக்கு பொதுக்கூட்டம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டின் ஜனநாயக வெற்றிக்கு தொழிலாளருக்கும் பங்கு உண்டு

## மேதினச் செய்தியில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 01

மனித உழைப்பால் உருவாக்கப்பட்ட மேற்கட்டுமானமானது, மனித உழைப்பின் பெருமைமிக்க உன்னத தன்மை முன் மண்டியிட்ட வரலாற்று ரீதியான நிகழ்வை நினைவுகூரும் முகமாகக் கொண்டாடப்படும் சர்வதேசதொழிலாளர்தினத்தை முன்னிட்டு மே தினத்தைக் கொண்டாடும் உலக வாழ் சகோதர தொழிலாளர் சமூகத்துக்கு மரியாதை செலுத்தியே இந்த செய்தியை வெளியிடுகிறேன்.

-இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்டுள்ள மேதினச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மக்களை சங்கிலிகளால் பிணைத்து, அவர்களைத்தமது உடமையாகக் கருதி முதலாளித்துவ வர்க்கத்தினர் செயற்பட்ட காலம் முதல் தொழிலாளர் உரிமைகளை வென்றெடுப்பதற்காக ஒரே மேசையில் அமர்ந்து முதலாளி வர்க்கத்துடன் பேரம் பேசக்கூடிய தற்போதைய காலம் வரை தொழிலாளர்கள் கடந்து வந்த பாதையானது அவர்கள் சிந்திய இரத்தத்தாலும், வியர்வையாலும், கண்ணீராலுமே உருவாக்கப்பட்டது என்பதைச் சர்வதேச தொழிலாளர் தினம் எமக்கு நினைவூட்டுகின்றது. எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க அவர்களால் மே தினம் விடுமுறை தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது முதல் இலங்கை வாழ் தொழிலாளர் சமூகத்துக்குதாம் வென்றெடுத்த வெற்றிகளை சீர்திருத்திப் பார்க்கக் கிடைக்கும் வாய்ப்பாகவே அமைகின்றது எனலாம்.

இத்தகைய நீண்டகால போராட்டப் பாதையில் புடம்போடப்பட்டு, நவீன ஜனநாயக சமூகக் கட்டமைப்பிலும் முக்கியமான சக்தியாகச் செயற்படும் தொழிலாளர் வர்க்கம் நாட்டில் ஜனநாயகத்தை வெற்றி பெறச் செய்யும் போராட்டத்திலும் முக்கிய பங்கினை வகித்தனர் என்பதையும் நினைவு கூற விரும்புகிறேன்.

நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல், பொருளாதார சுபீட்சத்தை அடைதல் உள்ளிட்ட நாடு எதிர்நோக்கியிருக்கும் சவால்களை வெற்றி கொள்ளும் செயற்பாடுகளிலும் தொழிலாளர் சமூகத்தின் மீது சுமத்தப்பட்டுள்ள பொறுப்பு கைவிட முடியாததாகும். தொழிலாளர்கள் தமது உரிமைகளையும், வரப்பிரசாதங்களையும் மேலும் பலப்படுத்திக்கொள்ளும் அதே சமயம், நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரச் செயன்முறை மற்றும் உலகின் புதிய போக்கு ஆகியவற்யையும் அறிந்து தெரிந்து, பொறுப்பு மிக்கதொரு சமூக சக்தியாக செயற்படுவார்கள் என நான் நம்புகிறேன்.

1917 ஆம் ஆண்டு நிகழந்த உன்னத ரஷ்ய புரட்சியின் வெற்றிகரமான நூற்றாண்டு பூர்த்தியடையும் இவ்வாண்டில் கொண்டாடப்படும் மே தினமானது, பலமான உந்துசக்தியை எம் அனைவருக்கும் பெற்றுக் கொடுத்து. அந்த உற்சாகத்துடன் இன்று மேதினத்தைக் கொண்டாடும் உலகவாழ் தொழிலாளர்களோடு நானும்



இணைந்து கொள்வதோடு, மனித சமூகத்தின் சுதந்திரத்துக்காகவும், தொழிலாளர் வர்க்கத்தின் உரிமைகளுக்காகவும் தமது வியர்வையையும் கண்ணீரையும் சிந்திப் போராடிய, குரல்கொடுத்த, உயிர்த்தியாகம் செய்த அனைத்து தொழிலாளர் சகோதரர்களுக்கும் எனது கௌரவமான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். - என்றுள்ளது.

## காணாமல் ஆக்கப்பட்டோரது விடுதலையை வலியுறுத்தி கிளிநொச்சியில் மே தின நிகழ்வு

கிளிநொச்சி, மே 01

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது விடுதலையை வலியுறுத்தும் வகையில் வடமாகாணத்துக்கான தமிழ்த் தேசிய மே நாள் கிளிநொச்சியில் நடைபெறவுள்ளது.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்தின்போது உறவினர்களின் கண் முன்னே இராணுவத்தால் கூட்டிச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட மற்றும் பல்வேறு சந்தர்ப்பங்களில் இராணுவத்தாலும் இராணுவத்துணை ஒட்டுப் படைகளாலும் பிடித்துச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டவர்களது விடுதலையை வலியுறுத்தி அவர்களது உரிமைகளைப் பிரதிபலிக்கும் வகையில் இந்த முறை கிளிநொச்சியில் வடமாகாணத்துக்கான தமிழ்த் தேசிய மே நாள் இடம்பெறவுள்ளது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோயில் முன்றிலில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் காணா மல் ஆக்கப்பட்டோரது உணர்வுக ளை வெளிப்படுத்தும் ஊர்திப் பவனிகளுடன் கூடிய தமிழ்த் தேசிய மே நாள் ஊர்வலம் ஏ-9 வீதி வழியாக கிளிநொச்சி நகர் டிப்போச் சந்தியைச் சென்றடைந்து அங்கு சிறப்பாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் மே தினக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

(ஐ)

# தேசிய ஒற்றுமை, நல்லிணக்கத்துக்கு உணர்வுபூர்வமாகப் பணியாற்றுங்கள்!

## மே தினச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

தொழிலாளர் வர்க்கத்தினர் தேசிய அபிவிருத்திக்காகச் சிறப்புடன் பணியாற்றும் அதேவேளை, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை அடைந்து கொள்வதற்காக உணர்ச்சி பூர்வமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் மேதினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

சர்வதேச தொழிலாளர் தினம் என்பது தொழிலாளர் வர்க்கத்தினரின் வெற்றிக்கு வரவேற்பைப் பெற்றுக்கொடுப்பதற்கும், உலகவாழ் மக்களின் பொருளாதார மற்றும் சமூக உரிமைகளைப் பாதுகாப்பதற்காகவும் தியாகங்களைச் செய்த தொழிலாளர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கும் கிடைக்கப் பெற்றுள்ள ஒரு சந்தர்ப்பமாகும்.

தற்போதைய நிலைக்கு இலங்கையைக் கொண்டு வருவதற்காகப் பல வருடகாலமாக தொழிலாளர் வர்க்கத்தினர் முக்கிய பங்களிப்புச் செலுத்தியுள்ளனர்.

எமது நாடு தற்போது வரலாற்றில் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்துள்ளது. எனவே, தேசிய அபிவிருத்திக்காக சிறப்புடன் பணியாற்றும் அதேவேளை, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கம் என்பவற்றை அடைந்து கொள்வதற்காக உணர்ச்சி பூர்வமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றுமாறும் தொழிலாளர் வர்க்கத்திடம் நான் வேண்டிக்கொள்ள விரும்புகிறேன்.

தொழிலாளர்களின் முயற்சிகளை நினைவுகூருவதற்கான ஒரு சந்தர்ப்பமாக மே தினத்தை அமைத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கின்றேன். - என்றுள்ளது.

(ஐ)

## சுதந்திர கட்சியின் மே தினப் பேரணி கண்டியில்

*ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் மேதினப் பேரணி இந்த முறை கண்டியில் இடம்பெறவுள்ளது.*

*இதற்காக நாடு முழுவதும் உள்ள சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்கள் இன்று கண்டியில் ஒன்று கூடவுள்ளனர்.*

*யாழ். மற்றும் கிளிநொச்சியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் ஆயிரக் கணக்கான இளைஞர் யுவதிகள் மற்றும் கட்சி ஆதரவாளர்கள் கண்டியில் இடம்பெறவுள்ள சுதந்திர கட்சியின் மே தினக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-21)*

# சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் மேதினம்

சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பின் மேதினம் கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு நடத்தப்படவுள்ளது.

இது தொடர்பில் அமைப்பின் அமைப்பாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முருகேசு சந்திரகுமார் விடுத்துள்ள அறிக்கையில்-

உழைப்பாளர்களின் நாளான இன்று நாம் எங்களுடைய உரிமைகளை வலியுறுத்தி ஒன்று கூடியிருக்கின்றோம். உழைப்புக்கான அங்கீகாரம் முதல் கௌரவமாக வாழ்வதற்கான அடிப்படை உரிமைகள் வரையில் அனைத்து உரிமைகளுக்காகவும் நாங்கள் ஒன்றுதிரண்டிருக்கிறோம். சமத்துவம், சமூக நீதி என்ற வகையில் அனைவரையும் சமநிலையில் வைத்து நோக்கும் பாரம்பரியத்தை உருவாக்குவதற் காக இந்த நாளில் நாம் உறுதியெடுத்துக் கொள் வோம். இந்தக் கூட்டுத் திரட்சியான அரசியற் பலமே எமது மெய்யானவிடுதலைக்கும் அனைத்து உரிமைகளுக்கும் வழியை ஏற்படுத்தும்.

பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து 2017 மே நாளை கிளிநொச்சியில் சமத்துவம், சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு நடத்துகிறது.

★ சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் உரிமைகள் விரைந்து வழங்கப்பட வேண்டும்.

★ பல்லினச் சமூகங்களின் இருப்பையும் அந்தஸ்தையும் உறுதிப்படுத்தும் வகையில் அரசியல் சாசனம் திருத்தப்பட வேண்டும்.

★ அந்நிய சக்திகளுக்கு வளங்களைப் பகிர்ந்து கொடுப்பதையும் அந்நிய சக்திகளிடம் பணிந்து நடப்பதையும் அரசாங்கம் தவிர்க்க வேண்டும்.

★ காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய பிரச்சினைக்கு உரிய தீர்வினை விரைவில் காண வேண்டும். இதற்கான காலஎல்லை வகுக்கப்படுவது அவசியம்.

★ மக்களின் காணிகளில் இருக்கும் படையினர் காலதாமதமில்லாமல் வெளியேற வேண்டும். அத்துடன் சிவில் வெளியிலிருக்கும் இராணுவப்பிரசன்னம் தவிர்க்கப்படுவது அவசியமாகும்.

★ பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன் அனைவருக்குமான வேலை வாய்ப்புச் சூழலை உருவாக்க வேண்டும்.

★ உழைப்பாளர்களுக்கான அடிப்படை உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்பட வேண்டும். அவர்களுடைய வாழ்க்கை மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

★ அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். அந்தக் குடும்பங்களின் நல்வாழ்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்படுவது அவசியமாகும்.

★ போரால் பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும்.

★ நாட்டின் வளர்ச்சிக்கும் மக்களுடைய முன்னேற்றத்துக்கும் ஏற்ற சுய பொருளாதாரக் கொள்கை வகுத்துச் செயற்படுத்தப்பட வேண்டும்.- என்றுள்ளது.

(ஐ)

# ஊடகவியலாளர் சிவராம் படு கொலையின் உண்மையை வெளிக்கொண்டு வாருங்கள்!

## மட்டக்களப்பில் நடந்த நினைவு நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு



வெல்லாவெளி, மே 01

நாட்டில் ஏற்பட்டுள்ள ஜனநாயக மாற்றத்தால் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் உண்மைகள் வெளிக் கொணரப்பட வேண்டும்.-இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தெரி வித்தார்.

படுகொலை செய்யப்பட்ட மூத்த ஊடகவியலாளர் தர்மரட்ணம் சிவராமின் 12 ஆவது நிணைவேந்தல் நிகழ்வில் ஈகைச்சுடரேற்றி வைத்து உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் வாலசிங்கம் கிருஷ்ணகுமார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டார்கள்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்-

சிவராம் பல விடயங்களைப் பற்றி எழுதியிருந்தபோது அவருடைய சிந்தனையுடைய கூர்மையை அன்று எழுத்துக்களால் காட்டினார். அவரின் எழுத்தின் கூர்மையை அவரால் எழுதப்பட்ட கட்டுரையால் எல்லோரும் அவதானித்தார்கள். அதை எல்லோரும் புகழ்ந்து பேசினார்கள். சிவராமின் எழுத்துத் திறமையை பல பெரியார்கள், புத்திஜீவிகள் புகழ்ந்து பேசியமையை நான் காதால் கேட்டிருக்கின்றேன்.

அவருடன் தனிப்பட்ட ரீதியில் பேசும் போதும், கருத்துக்களை, சிந்தனையை பரிமாறிக் கொள்ளும்போது அவர் சொல்லும் கருத்துக்களில் இருந்து அவருடைய சிந்தனையுடைய ஆழம், அழுத்தம், அதனுடைய சரிவு எல்லாம் புலப்படும். சிவராம் சாதாரண மனிதரல்லர். அவர் திறமைசாலி. அவர் உயிரோடு இருந்திருந்தால் ஊடகத்துறையில் பெரியதொரு இடத்தைப் பிடித்திருப்பார்.

எங்கள் சமுதாயம் பல ஊடகவியலாளர்களை இழந்திருக்கின்றது. சிவராம், நடேசன், சுகிர்தராஜன் போன்றவர்களை இழந்திருக்கின்றது.பல்வேறு காரணங்களின் நிமித்தம் சமூகம் சம்பந்தமாக சமூகத்தில் பிரபல சம்பவங்கள் நிகழ்ந்த போது அந்தச் சம்பவங்களை வெளிக் கொண்டு வருவதற்காக, அந்தச் சம்பவங்களின் உண்மைகளை மறைக்காமல் இருப்பதற்காக அவர் பல உண்மைகளை எழுதியதன் மூலம் அவர் கொலை செய்யப்பட்டார்.

திருகோணமலையில் 2006 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐந்து மாணவர்கள் கொலை செய்யப்பட்டபோது அக் கொலைச் சம்பவத்தை மூடி மறைப்பதற்காக பல முயற்சிகள் நடைபெற்றன. அந்த மாணவர்கள் தம்வசம் வைத்திருந்த குண்டுகளின் நிமித்தம் கொலை செய்யப்பட்டார்கள் எனும் சம்பவத்தை மாற்றியமைக்க முனைந்தார்கள்.அப்பாவி மாணவர்களைச் சுட்டுக் கொன்ற விடயத்தை பத்திரிகை மூலம் வெளிக்கொண்டு வந்தார்கள். இதன் நிமித்தம் சுகிர்தராஜன் கொலை செய்யப்பட்டார்.

சிவராமின் கொலை சம்பந்தமாக இன்னும் உண்மைகள் அறியப்படவில்லை.உண்மைகள் அறியப்பட வேண்டியவை தான் என்று நான் அவசியமாக நினைக்கின்றேன்.ஏனென்றால் பல்வேறு விதமான திறமையான ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டிருந்த போது அவர்கள் ஏன் கொலை செய்யப்பட்டார்கள்...? எதற்காக அவர்களைக் கொலை செய்தார்கள் ...? அந்த கருமங்கள் வெளிவர வேண்டியது சமூகத்தில் உள்ள அத்தியாவசியமான தேவையாகும் என்று நான் கருதுகின்றேன். இவ்வாறான நிகழ்வுகள் இனி மேலும் இந்த நாட்டில் இடம் பெறக் கூடாது.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டார். எக்லியகொட காணாமல் ஆக்கப்பட்டார். இந்தச்சம்பவங்களின் விசாரணைகள் இன்று நடைபெறுகின்றன.உண்மையான முயற்சிகள் நடைபெறுகின்றன. அவர்களின் பிரேதங்கள் தோண்டியெடுக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

ஒரு காலகட்டத்தில் இந்த நாட்டில் யாரும் சுதந்திரமாக சிந்திக்கவில்லை. சுதந்திரமாக செயற்பட முடியாது. சுதந்திரமாக எழுத முடியாத நிலமை இருந்தது. இன்று அந்த நிலமை மாறியிருக்கின்றது.

ஆனால் நாட்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை வரவேற்கின்றோம். சிவராம் நாட்டில் இன்று உயிரோடு இருந்திருந்தால் இன்றைய அரசியல் சூழ் நிலையில் அவர் பாரிய பங்களிப்பை செய்திருப்பார்.

ஊடகவியலாளர்கள் பலமாக இருக்கவேண்டும். ஊடகப் பணியை துணிவாக ஆற்ற வேண்டும். சுதந்திரமாகச் செயற்படுவதற்கு நாங்கள் எவ்விதமாக உதவலாமோ அவ்வாறு உங்களுக்கு உதவுவதற்கு நாங்கள் பின்னிக்கமாட்டோம்.-என்றார்.

(ஐ)

## சு.கவின் மே தின பேரணிக்கு அம்பாறையில் இருந்து 5000 பேர் பங்கேற்பர்

அம்பாறை மாவட்டத்திலிருந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கண்டியில் நடைபெறவுள்ள இலங்கை சுதந்திரக் கட்சியின் மே தின பேரணியில் இம்முறை சுமார் 5 ஆயிரம் பேர் கலந்து கொள்ளவுள்ளனர் என அம்பாறை மாவட்ட சுதந்திரக் கட்சியின் மத்திய குழுவின் பொருளாளரும், அக்கரைப்பற்று பிரதேச அமைப்பாளருமான ஐ.எச்.ஏ. வஹாப், நேற்று ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார்.(ச)

# ஏறாவூர் வாவிக்கரை குப்பை மேட்டை சுற்றுலா மையமாக மாற்ற நடவடிக்கை!

### கிழக்கு முதலமைச்சர் தெரிவிப்பு



ஏறாவூர்,மே 01

குப்பைகள் கொட்டப்பட்டு வந்த ஏறாவூர் வாவிக் கரையோரத்தில் கிழக்கு மாகாண சுற்றுலாத் தகவல் மையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனக் கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சின் அதிகாரிகளும் நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்று இது தொடர்பில் பார்வையிட்டனர். அதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் சேகரிக்கப்படும் குப்பைகள் அனைத்தும் கொடுவாமடு திண்மக் கழிவு முகாமைத்துவ நிலையத்துக்கு தற்போது கொண்டு செல்லப்பட்டு வருகின்றது. இந்நிலையில், ஏறாவூர் வாவிக்கரையோர குப்பை மேட்டை மக்களுக்குப் பயனுள்ளதாக மாற்றும் வகையிலேயே, அங்கு கிழக்கு மாகாண சுற்றுலாத் தகவல் மையத்தை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏறாவூர் ஆலிம் வாவிக்கரை பூங்காவுக்கு அருகில் இந்த மையம் அமையவுள்ளது. இது கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததாக அமையும். தற்போது அங்கு கிரவல் மண் இட்டு செப்பனிடும் பணி முன்னெடுக்கப்பட்டுள்ளது .-என்றார். (ச)

# 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து கூட்டமைப்பு மே தினம் அனுஷ்டிப்பு!

அம்பாறை,மே 01

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மே தினக் கூட்டம் நான்கம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நடத்தப்படவுள்ளது எனக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் தெரிவித்தார்.

மே தினம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'வாருங்கள் தமிழர்களே! தோள் கொடுப்போம் தொழிலாளர்களுக்கு', 'தமிழ் மக்களின் உரிமையை உறுதிப்படுத்துவோம்', 'இலங்கையில் பாரபட்சமின்றி சமத்துவம், சமாதானம் ஏற்பட உழைப்போம்', 'தொழிலாளர்களின் வாழ்வு வளம் பெற கை கொடுப்போம்' என்ற நான்கம்சக் கோரிக்கைகளை முன்வைத்தே இந்த மே தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்துக்கு யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலிருந்து கட்சி உறுப்பினர்கள், தொண்டர்கள், ஆதரவாளர்கள் என சுமார் 5 ஆயிரம் பேர் கலந்துகொள்ளவுள்ளனர். இவர்களின் போக்குவரத்துக்காக 25 பஸ்களுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.-என்றார். (ச)

# வேலை வாய்ப்பு வர்த்தமானி அறிவித்தல் அடுத்த மாதம்!



மட்டக்களப்பு,மே 01

வேலையற்ற பட்ட தாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் அடுத்த மாதம் வெளியிடப்படும்.

இன்னும் மூன்று வாரங்களுக்குள் அமைச்சரவையில் இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவுக்கு நேற்றுமுன் தினம் சனிக்கிழமை வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மட்டக்களப்பு வேலையற்ற பட்டதாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இதன்போது கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ச)

# கடந்த இரண்டு தசாப்த காலத்தில் தெற்காசிய நாடுகள் சிறந்த அபிவிருத்தி

## உலக வங்கியின் புதிய அறிக்கை தகவல்

கொழும்பு, மே.01

தெற்காசிய நாடுகள், கடந்த இரண்டு தசாப்த காலத்தில் சிறப்பான அபிவிருத்தியை அடைந்திருக்கின்றன. உலக வங்கி வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக இந்த பிராந்தியத்தில் சர்வதேச வர்த்தகத்தைப் பெருமளவில் ஈர்க்கக் கூடியதாக அமைந்துள்ளது.

இருப்பினும் இந்தச் செயற்பாடுகளுக்கு தெற்காசிய நாடுகளில் உள்ள துறைமுகங்களில் நிலவும் குறைபாடுகள் இதன் முன்னேற்றத்துக்குப் பெரும் தடையாக இருக்கின்றன என்று அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கொள்கலன்களைக் கையாளும் பணியில் உயர்வான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சில நாடுகள் முயற்சித்துள்ளன. இருப்பினும் பொதுவாக இந்த நடவடிக்கைளில் தாமதங்கள் காணப்படுகின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தொழில்நுட்பம் மற்றும் செலவுகள் அதிகரித்துள்ளன. இந்தியா மற்றும் பாகிஸ்தான் நாடுகளில் கொள்கலன்களை கையாளும் துறைமுகங்கள் உயர்வான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன.

இலங்கையும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (எ)

# நாடு திரும்பினார் கோட்டா!

சிங்கப்பூர் பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் புலமைப் பரிசில் பெற்றுக் கொண்டு, கற்கைநெறி ஒன்றைத் தொடர்ந்த கோட்டாபய வார இறுதியில் நாடு திரும்பியுள்ளார். பாதுகாப்புத் தொடர்பான ஒரு மாத கால கற்கைநெறியைப் பூர்த்தி செய்து அவர் நாடு திரும்பியுள்ளார்.

இதேவேளை, சீனா பாதுகாப்பு நிறுவனம் ஒன்றில் ஓராண்டு கற்கை நெறி ஒன்றைக் கற்பதற்காக அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கற்கை நெறியில் பங்கேற்பது தொடர்பில் இன்னமும் அவர் இறுதித் தீர்மானம் எடுக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் ரேடர் வலையமைப்புடன் அமெரிக்க கண்காணிப்பு நிலையம்!

## ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு, மே.01

கொழும்பில் ஆறு ஏக்கர் நிலப்பரப்பில் உயர் திறன்கொண்ட 'ரேடர்' வலையமைப்புடன்கூடிய கண்காணிப்பு நிலையம் ஒன்றை அமெரிக்கா அமைக்கவுள்ளதாக, ஆங்கில ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அந்தத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொழும்பு நகரில், கொள்ளுப்பிட்டிப் பகுதியில் பிரிட்டன் தூதரகத்துக்குச் சொந்தமான ஆறு ஏக்கர் காணியை அமெரிக்கா கொள்வனவு செய்திருப்பது, இலங்கை உள்ளிட்ட பல நாடுகளின் புலனாய்வு அமைப்புகளின் கவனத்தை ஈர்த்துள்ளது.

அந்த இடத்தில் அமெரிக்கா, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய ஐந்து நாடுகளின் புலனாய்வு அமைப்புகள் கண்காணிப்பு நிலையம் ஒன்றை அமைக்கவுள்ளமையே இதற்குக் காரணமாகும்.

உயர் தொழில்நுட்ப 'ரேடர்' கண்காணிப்பு வலையமைப்பு மற்றும் தகவல் பரிமாற்றக் கருவிகள் பொருத்தப்பட்டு இந்தக் கண்காணிப்பு நிலையம் அமைக்கப்படவுள்ளது.




இது பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தும் என்று ஆசியப் பிராந்தியத்தில் உள்ள பல நாடுகள் கவலையை வெளிப்படுத்தியுள்ளன.

இதேவேளை, கொழும்பு துறைமுகம், கொழும்பு கோட்டை, காலிமுகத்திடல் போன்ற கொழும்பின் முக்கிய வணிகப் பகுதியின் மையத்தில், இந்தக் கண்காணிப்பு மையம் அமையவுள்ளது தொடர்பில் சீனாவும் இந்தியாவும் மிகவும் கவலையடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா இந்தப் பிராந்தியத்தைக் கண்காணிக்கும் 'ரேடர்' வலையமைப்பை உருவாக்கினால், தாமும் அது போன்ற மையங்களை அமைக்க இந்தியாவும், சீனாவும் திட்டமிட்டுள்ளன என்று கூறப்படுகிறது.

இதற்கிடையே அமெரிக்கத் தூதரகத்தால் கொள்வனவு செய்யப்பட்ட காணிக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டு, அங்கிருந்த கட்டடங்கள் அழிக்கப்பட்டு, புதிய கட்டடங்களை அமைப்பதற்கான தயார்ப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தக் கட்டுமானங்கள், இலங்கையில் உள்ள ஏனைய தூதரகங்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளன.

இந்தக் கண்காணிப்பு மைய கட்டுமானத்தினால் நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதாக அமைச்சர்களிடம் வெளிநாட்டுப் புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

அதேவேளை, அமெரிக்கத் தூதரகம் கொள்வனவு செய்துள்ள காணியில், கண்காணிப்பு மையம் அமைக்கப்படவுள்ளது பற்றி இலங்கை பாதுகாப்பு செயலர் கருணாசேன ஹெட்டியாராய்ச்சி கூறுகையில் - 'அங்கு அவர்கள் என்ன செய்யத் திட்டமிட்டுள்ளார்கள் என்று நான் அறியவில்லை' என்று தெரிவித்துள்ளார். - என்றுள்ளது.

# இந்திய இராணுவம் மீண்டும் இலங்கைக்கு வரும் சாத்தியம்!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர கூறுகிறார்

முஸ்லிம் தீவிரவாதிகளை ஒழிப்பது என்ற போர்வையில் இந்திய இராணுவம் மீண்டும் இலங்கைக்குள் நுழையும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இது தொடர்பில் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எரிபொருள் பாவனையில் இந்தியா உலகின் மூன்றாம் இடத்தில் உள்ளது. இந்த எரிபொருளை அடிப்படையாக வைத்தே அந்த நாடு இலங்கைக்குள் நுழைந்து முக்கிய பகுதிகளைக் கைப்பற்றுவதற்கு முற்படுகின்றது.

திருகோணமலையில் இருக்கின்ற 99 எண்ணெய்க் குதங்களையும் இலங்கை, இந்தியாவுக்குக் கொடுத்துவிட்டது.

இப்போது இந்தியா அதைச் சுற்றியுள்ள முழு நிலத்தையும் இலங்கையிடம் கேட்டுக் கொண்டிருக்கின்றது. இலங்கையும் கொடுப்பதற்குத் தயாராகிவிட்டது.

சீனா போன்ற நாடுகளைச் சமாளிப்பதற்கு இந்தியாவுக்குத் திருகோணமலைத் துறைமுகம் தேவைப்படுகின்றது.

தற்போதைய எண்ணெய்க் குதங்களில் எரிபொருளை இந்தியா களஞ்சியப்படுத்தத் தொடங்கியதும் இந்தியாவின் போர்க் கப்பல்கள் திருகோணமலைத் துறைமுகத்துக்குத் தொடர்ச்சியாக வரும்.

இந்த எண்ணெய்க் குதங்களுக்கு முஸ்லிம் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் இருக்கின்றது என்று கூறிப் பாதுகாப்பு என்ற போர்வையில் இந்திய இராணுவத்தைத் திருகோணமலையில் நிறுத்துவதற்கான திட்டம் ஒன்று இந்தியாவிடம் உண்டு.

இது இலங்கைக்கு மிகவும் ஆபத்தான ஒரு திட்டமாகும். இதை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உடன் தடுத்து நிறுத்த வேண்டும். மக்கள் இது தொடர்பில் தெளிவு பெற வேண்டும். எமது வளங்களை வெளிநாட்டு சக்திகள் சுரண்டுவதைத் தடுப்பதற்கு அனைவரும் முன் வர வேண்டும். - என்றார். (எ)

# இலங்கை கடற்படைக்கு இந்திய ஆழ்கடல் கப்பல்கள்



இந்தியாவின் ஆழ்கடல் அவதானிப்புக் கப்பல்கள் இரண்டு இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்படவுள்ளன.

கடற்படையின் பணிகளை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் இந்தியாவின் கோவா நகரில் உள்ள கப்பல் கட்டுமான நிலையத்தில் தயாரிக்கப்படும் ஆழ்கடல் அவதானிப்புக் கப்பல்களை இலங்கைக்கு வழங்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடல் பாதுகாப்பு, கடல் உயிரின பாதுகாப்பு, கடல் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் ஆழ்கடலில் இடம்பெறும் கடத்தல் மற்றும் கொள்ளைச்சம்பவங்களை தடுத்தல் போன்ற விடயங்களுக்கு இந்தக் கப்பல்கள் பெரிதும் உதவும்.

இந்த இரண்டு கப்பல்களின் கட்டுமான பணிகள் அங்கு நிறைவடையும் நிலையில் உள்ளன.

இந்தக் கப்பல்களில் காணப்படும் வசதிகள் மற்றும் தொழில்நுட்ப வழி முறைகள் இலங்கை கடற்படைக்கு மிகுந்த உதவியாக அமையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மோடியின் இலங்கைப் பயணம்: விழிப்புடன் புலனாய்வு அமைப்புகள்!

## கொழும்பு ஆங்கில ஊடகம் தகவல்

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைப் பயணத்தை முன்னிட்டு, புலனாய்வு அமைப்புகள் உச்ச விழிப்பு நிலையில் செயற்படுகின்றன என கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொழும்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி சர்வதேச வெசாக் கொண்டாட்டங்களை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கவுள்ளார்.

இதனை முன்னிட்டு இந்திய, பாதுகாப்பு முகவர் அமைப்புகள், இலங்கையுடன் நெருக்கமாக இணைந்து, பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன.



இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் பயணத் திட்டத்தைக் குழப்பும் வகையில், கொழும்பில் பெரிய எதிர்ப்புப் போராட்டங்களை கூட்டு எதிரணியினர் நடத்தக் கூடும் என்று புலனாய்வு அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இந்தநிலையில், இந்தியப் பிரதமரின் பயணத் திட்டத்தைக் குழப்பும் வகையிலான போராட்டங்கள் இடம்பெறாதிருப்பதை உறுதிப்படுத்தும் வகையில், மோடியின் பயணத்துக்கு முன்னதாக, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு முக்கிய பொறுப்பு அளிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. - என்றுள்ளது. (எ)

# 40 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் கடந்த நான்கு மாத காலத்தில்

இலங்கையில் கடந்த 4 மாதங்களில் சுமார் 40 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் டெங்கு நோய்க் கட்டுப் பாட்டுப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

அந்தவகையில் ஏப்ரல் மாதத்தின் முதல் 21 நாள்களில் 7 ஆயிரத்து 23 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்று டெங்கு நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

2017ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் 39 ஆயிரத்து 313 டெங்கு நோயாளர்கள் நாடளாவிய ரீதியில் இனங்காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, 2016 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத காலப் பகுதிக்குள் 16 ஆயிரத்து 661 டெங்கு நோயாளர்களே நாடளாவிய ரீதியில் அடையாளங் காணப்பட்டனர் என்று சுகாதார அமைச்சின் டெங்கு நோய்க் கட்டுப் பாட்டுப் பிரிவின் தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## ஒருதொகை வல்லப்பட்டைகளுடன் இந்தியப் பிரஜைகள் இருவர் கைது!



ஒருதொகை வல்லப்பட்டைகளுடன் இந்தியப் பிரஜைகள் இருவர் கட்டு நாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியப் பிரஜைகள் இருவரும் யூ.எல். 121 என்ற விமானத்தில் சென்னைக்குப் பயணிப்பதற்காக விமான நிலையத்துக்குச் சென்றிருந்த போதே இவ்வாறு கைது செய்யப்பட்டனர் என்று விமான நிலையச் சுங்கப் பிரிவின் ஊடகப் பேச்சாளர் தர்மசேன கஹந்தவ கூறினார்.

அவர்களின் பயணப் பொதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 கிலோகிராம் வல்லப்பட்டைகள் இதன் போது கைப்பற்றப்பட்டுள்ளன.

அவற்றின் பெறுமதி சுமார் 20 லட்சம் ரூபா. இவ்வாறு கைப்பற்றப்பட்ட வல்லப் பட்டைகள் அரசுடைமையாக்கப் பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட இருவரிடமும் தண்டம் அறவிடப் பட உள்ளது என்று சுங்கப் பிரிவின் ஊடகப்பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## தினசரி ராசி பலன் 01.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத்திங்கள் 18 ஆம் நாள் சஷ்டித்திதி. இரவு 10.32 மணி வரை. பின்னர் ஸப்தமி. நட்சத்திரம்: திருவாதிரை காலை 6.37 மணி வரை. அதன்மேல் புனர்பூசம் பி.இ. 5.15 மணி வரை. பின்னர் பூசம். அமிர்தயோகம் பி.இ. 5.15 மணி வரை. பின்னர் அசுபயோகம். ராகுகாலம்: காலை 7.28 மணிமுதல் 9.01 மணி வரை. சுபநேரம்: பகல் 11.54 மணிமுதல் 1.24 மணி வரை. இன்று சஷ்டி விரதம். திவசம் செய்யவேண்டிய திதி: சித்திரைமாத வளர்பிறை சஷ்டி. பிறந்த நட்சத்திர வழிபாடு: புனர்பூசம்.

### 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். அளவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். வெளியூர்ப்பயணங்கள் செலவுகளை உண்டுபண்ணும்.

**ரிஷபம்:** யோகமான நாள். பணபலம் அதிகரிக்கும். திட்டமிட்டபடி தொழிலகத்தை விரிவாக்குவார்கள். புதிய வீடு, காணி வாங்கும் யோகம் சிலருக்கு உண்டாகும்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. புதிய கிளைகளைத் தொடங்கும் முயற்சிகள் வெற்றிபெறும். புதிய வீட்டுக்குக் குடி புகும் சந்தர்ப்பம் உண்டாகும்.

**கடகம்:** கவலையான நாள். பணவரவு குறையும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் வருமானமும், லாபமும் குறையும். உத்தியோகத்தர்கள் மேலிடத்தவர்களின் அதிருப்திக்கு ஆளாக நேரிடும்.

**சிம்மம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு வரவேற்பு அதிகரிக்கும்.

**கன்னி:** சம பலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். புதிய முயற்சிகளைத் தள்ளிப் போடவும்.

**துலாம்:** சுபீட்சமான நாள். தனலாபம் பெருகும். குடும்பத்தில் சந்தோஷம் நிறைந்து சுபீட்சம் உண்டாகும். செய்யும் தொழில் சுறுசுறுப்பாக நடந்து வருமானத்தைப் பெருக்கும்.

**விருச்சிகம்:** சலனம் மிகுந்த நாள். தனவரவு குறையும். மனதில் இனம் புரியாத சஞ்சலம் உண்டாகும். குடும்பத்தில் அமைதி குன்றும். மனம் குழப்பமடையும்.

**தனுசு:** சம பலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் முயற்சிகள் தடைப்படும். அலைச்சல்களால் உடலும், மனமும் சோர்வடையும்.

**மகரம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வியாபாரம் முன்னேற்றமடையும். சகோதர உறவு வலுப்பெறும். இதுவரை பிரிந்து இருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள்.

**கும்பம்:** மகிழ்ச்சியான பலன்கள் காணப்படுகின்றன. தனலாபம் அதிகரிக்கும். பிரிந்திருந்த குடும்பங்கள் ஒன்று சேரும் வாய்ப்பு உண்டாகும். திருமணமாகாதோருக்கு அதற்கான சந்தர்ப்பம் உண்டாகும்.

**மீனம்:** துன்பமான நாள். பணவருவாய் குறையும். குடும்பத்தில் குழப்பநிலை உண்டாகும். செய்யும் தொழிலில் இடையூறுகள் உண்டாகும்.

சந்திராட்டமநாள்: விசாகம் 4 ஆம் கால், அனுசம், கேட்டை ஆகிய நட்சத்திரங்களில் உதயமானோருக்கு இந்நாளில் சுப கருமங்கள் மேற்கொள்வது உகந்ததல்ல.

# எதிர்காலத்தில் தண்ணீர் யுத்தம் ஏற்படும் அபாயம்!

## சிக்கனமாகப் பயன்படுத்துமாறு வலியுறுத்துகிறார் யாப்பா




நாட்டைப் பிடிப்பதற்காகவும் வேறு காரணங்களுக்காகவும் எதிர்காலத்தில் போர் இடம்பெறப்போவதில்லை. மாறாக நீரைப் பெற்றுக்கொள்வதிலேயே எதிர்காலத்தில் யுத்தம் ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே நீரை விரயம் செய்யாது சிக்கனமாகப் பாவிக்க வேண்டும் என்று அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

பொல்கஹவெல, பொத்துஹெர மற்றும் அளவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் திட்டத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு பொத்துஹெர பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீரைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படும் பிரச்சினை பொலிஸ் நிலையம் வரையில் சென்றுள்ளதை தற்போதே அவதானிக்க முடிகிறது. மத்திய கிழக்கிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் சென்றவர்கள் அனைவரும் போர் காரணமாக அங்கு செல்லவில்லை. மத்திய கிழக்கில் நீர் இல்லாததாலேயே அவர்களில் சிலர் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ளனர்.

தற்போது வடமேல் மாகாணத்தில் மாஓயாவை அண்மித்த பிரதேசங்களில் நீருக்கான தட்டுப்பாடு அதிகரித்துள்ளது. எனவே, குடிதண்ணீர் பெறும் மாஓயாவைப் பாதுகாக்கும் வேலைத்திட்டங்களையும் முன்வைக்க வேண்டும். கடந்த காலங்களில் மாஓயாவிலிருந்து அதிகளவான மணல் அகழப்பட்டது. அதனால் தற்போது அங்கு மணல் இல்லை. அங்கு மணல் அகழப்படுவதை சிறிது காலத்துக்கு நிறுத்த வேண்டும்.

நீர் பாவனை தொடர்பில் பழமையான முறைகளையே பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்தும் அந்தப் பழைய முறைகளுக்கு இணங்க செயற்பட முடியாது. அத்துடன் நீரைப் பயன்படுத்தும்போது அதனை வீணாக்காது பயன்படுத்துவதற்கான புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். நீருக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டால் அதற்கு எவராலும் உரிய தீர்வு முன்வைப்பது கடினம். பவுஸர் மூலம் நீர் வழங்கினாலும் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாது.

தற்போது நீர் பிரச்சினை மாத்திரமல்லாது குப்பை பிரச்சினையும் ஏற்பட்டுள்ளது. மனித சமூகம் தமது வாழ்க்கை முறையை மாற்றிக்கொள்கின்ற போதுதான் இவ்வாறான சகல பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. ஆகவே, இந்தப் பிரச்சினைகளுக்கு சமூகமும் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளது.-என்றார். (எ)

# தண்ணீர்க் கட்டணத்தை இனி அதிகரிக்க வேண்டி வரலாம்!

## நீர்வழங்கல் அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

குருநாகல், மே.01

தண்ணீர்க் கட்டணத்தை எதிர்காலத்தில் அதிகரிக்கவேண்டிய நிலை ஏற்படுவதாக நீர் வழங்கல் அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

குருநாகலில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நீர் வழங்கல் முகாமைத்துவ திணைக்களத்துக்கு திறைசேரியால் நிதி வழங்கப்படுவதில்லை.

இந்தநிலையில், தமது கடனை தாமே செலுத்த வேண்டும் என்று திறைசேரி தெரிவிக்கின்றது. இதனை நுகர்வோர் புரிந்து கொள்ள வேண்டும்.

தண்ணீர்க் கட்டணத்தை அதிகரிக்க முயற்சிக்கும் போது, பெரிய அநீதி இழைக்கப்படுவதாக மக்கள் கருதுகின்றனர்.

ஆனால், நீர் வழங்கல் திணைக்களத்தை பொருளாதார ரீதியாக பலப்படுத்த வேண்டுமாயின், தண்ணீர்க் கட்டணத்தில் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் விரைவில் தீர்மானத்துக்கு வரவேண்டும். -என்றார். (எ)



## அன்பு சிறுவர் இல்லத்துக்கு புலம்பெயர் உறவால் நிதியுதவி



புலம்பெயர்ந்த தாயக உறவுகளினால் உதவி வழங்கும் செயற்திட்டத்தின்கீழ் முல்லைத்தீவு, முத்தையன்கட்டு பிரதேசத்தில் அமைந்துள்ள 'அன்பு' சிறுவர் இல்லத்துக்கு அவர்களின் மதியநேர உணவுச் செலவைபூர்த்திசெய்யும் வகையில் 15 ஆயிரம் ரூபாநிதி அண்மையில் வழங்கப்பட்டுள்ளது.

ஜனநாயக மக்கள்விடுதலை முன்னணியின் சுவிஸ் கிளை உறுப்பினர் விஜயநாதன் ரட்ணகுமார் தனது தந்தையாரான வைத்திலிங்கம் விஜயநாதனின் ஓராண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முதியோர் மற்றும் சிறுவர்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக்கொடுப்பதற்காக அனுப்பிவைக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்படி உதவி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்)இன் பொருளாளரும், வடமாகாணசபை உறுப்பினருமான க.சிவநேசன்(பவன்) மற்றும் கட்சியின் செயற்குழு உறுப்பினர் (முல்லைத்தீவு மாவட்டம்) கனக தவராசா ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

## வெளிநாட்டு கைக்குண்டுடன் ஒருவர் கைது!

கொழும்பு, மே.01

கைக்குண்டு ஒன்றை வைத்திருந்த பிரஜை ஒருவர் அம்பலாங்கொடை, பொல்வத்தை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்குக்கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அம்பலாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். அம்பலாங்கொடைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர். (எ)



# உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்!

கை.பேரின்பநாயகம்

## என்பதே மே தின உரிமை முழக்கம்

இன்று உலக தொழிலாளர் தினம்

குடியானவர்கள் பிரபுக்கள் என்ற இரு வர்க்கம் மானிய முறைக் காலத்தில் உலக ரீதியில் பரந்திருந்தது. ஆண்டான் அடிமை வாழ்க்கை முறையைத் தழுவியதாக இருந்தது.

பிரபுக்கள் குடியானவர்களின் வயல்களுக்கூடாக குதிரையில் சென்று வேட்டையாடும் உரித்தும் அதிகாரமும் பெற்றிருந்தனர். குடியானவர்கள் வாரத்தில் 5 நாளுக்கு மேல் பிரபுவின் கோதுமை வயலில் தொழில்புரிந்தனர்.

இந்த ஐரோப்பிய நடைமுறை இலங்கையின் மானியமுறை சமூக அமைப்பை ஒத்திருந்தது.

இராஜகாரிய முறைமை கைத்தொழில்ப் புரட்சியோடு மானியமுறை பொறிமுறை ஒழிந்தது. முதலாளி, தொழிலாளி என்ற வர்க்கப் பிரிவுகள் தோன்றின. தொழிலாளர்களது உரிமைகள் மறுக்கப்பட்டு அடிமைகள் போல் வேலை வாங்கப்பட்டனர்.

இங்கிலாந்தில் ஒரு நேர உணவுக்காக சிறுவர்கள் பத்தொன்பது அல்லது இருபது மணித்தியாலம் வரை தொழிற்சாலைகளின் புகைக் கூண்டில் வேலை செய்ய வேண்டி இருந்தது. அதாவது தொழிற்சாலை இயந்திரம் தொடர்ந்தும் வேலை செய்ய சிறுவர்கள் புகைக் கூண்டினுள் சென்று சுத்தம் செய்தனர். இது ஒன்றே போதும் தொழிலாளர்கள் நிலையை எடுத்துக் காட்டி; விளக்க.

இங்கிலாந்து ஜேர்மன் போன்ற ஐரோப்பிய நகரங்களிலும் துறைமுகங்களிலும் தொழிலாளரது நிலை பரிதாபமாக இருந்தது. அதேபோல் ஐக்கிய அமெரிக்காவின் ஐம்பெரும் ஏரிப் பகுதிகள் மற்றும் கீழ்க் கரையோரப் பட்டினங்கள், துறைமுகங்கள் மிசூறி மிசிசிப்பி நதிப் படுக்கையின் பருத்தி வயல்களில் தொழிலாளர்களது நிலை ஐரோப்பிய தொழிலாளர் நிலையில் சற்றும் குறைந்திருக்கவில்லை.

மே தினக் கோரிக்கைகள் போதிய ஜீவனோபாயத்துக்கான சம்பளம், எட்டு மணித்தியால வேலை நேரம், தொழிலாளர்களது வேலை நேரப் பாதுகாப்பு மற்றும் அவர்களது சமூக நலனும் மேம்பாடும் போன்ற பிரதான கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தன.

நீண்ட காலமாக நீர்தாட்சியமாக நடத்தப்பட்ட தொழிலாளர் தமது



புரட்சியை அமெரிக்காவிலேயே ஆரம்பித்தனர். இது சிக்காக்கோ புரட்சி என அழைக்கப்பட்டாலும் அது உண்மையில் 'பொஸ்ரன்' நகரத்திலேயே ஆரம்பமானது.

இங்கு நெசவுத் தொழிற்சாலைகள் இருந்ததுடன். ஐக்கிய அமெரிக்காவின் சிறந்த துறைமுகம் இருந்தது. துறைமுகத் தொழிலாளர்களது புரட்சியானது பொஸ்ரன் துறைமுகத்தை அதிர வைத்தது. கப்பல் சரக்குகளை இறக்க மறுத்தமையுடன் கப்பல்களில் வந்திருந்த 'கொள்கலன்களில்' இருந்த தேயிலை சரக்குகள் பெட்டி பெட்டியாக துறை முகத்துள் கொட்டப் பட்டன. இதுவே வரலாற்று ஆசிரியர்களால் 'பொஸ்ரன் தேநீர்' விருந்தென்று அழைக்கப்பட்டது.

தொழிலாளர்கள் பலர் ஈவிரக்கமின்றிச் சுட்டுக் கொல்லப்பட்டனர். இருந்த போதும் அமெரிக்க நகரங்கள் எங்கும் மே முதல் நாள் புரட்சி 'சுனாமி' போல் வேகமெடுத்துப் பரவியது.

அமெரிக்கக் கைத்தொழில் நகரங்களான சிக்காக்கோ, டிற்றொயிற் போன்ற கைத்தொழில் மையங்கள் ஆட்டம் கண்டன. அரசின் இராணுவ அடக்குமுறை பலரைக் கொன்றது.

''உலகத் தொழிலாளரே ஒன்று சேருங்கள்!'' என்ற கோஷம் உலகத் தொழிலாளரை ஒன்றிணைத்தது 1848 இல் கார்ல் மாக்ஸ் என்ற ஜேர்மனிய தத்துவ ஞானி தனது லண்டன் கூட்டாளி ஒருவருடன் இணைந்தெழுதிய வர்க்கப் புரட்சி பற்றிய நூலிலேயே இந்த வாசகம் இருந்தது. இன்று வரை தொழிலாளர் இயக்கங்களின் இரத்த நாளங்களுக்கு வலுச் சேர்க்கும் வாசகமாக அமைந்து விட்டது.

எழுதிய மூலதனம் (டாஸ்கபிட்டல்) என்ற நூலை ஜேர்மனியில் இருந்து நாடு கடத்தப்பட்ட இந்தத் தத்துவ ஞானி ஒரு சட்ட வல்லுநர்.

'ஏங்கல்ஸ்' என்ற நண்பரது துணையோடு லண்டன் மாநகரம் மாக்ஸை வறுமை வாழ்வைத் தந்து அடைக்கலத்தைக் கொடுத்தது.

இந்த மகா வாக்கியம் மே தினப் புரட்சியை வெற்றி வாகை சூட வைத்தது. எட்டு மணி நேர வேலை அமெரிக்க முதலாளிகளாலும் ஆளும் வர்க்கத்தாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

ஐரோப்பிய நாடுகளும் ஏனைய கைத்தொழில் நாடுகளும் மே தினப் பிரகடனத்துக்கு கட்டுப்பட்டன. தொழிலாளர் கோரிக்கைகள், உரிமைகள், உலக அங்கீகாரத்தைப் பெற்றன.

கார்ல் மாக்ஸின் தத்துவம் முதலாளித்துவ நாடுகளின் அரசுகளினால் ஏற்றுக் கொள்ளப்படாத போதும் செஞ்சட்டையாளர்களின் போராட்டத்தை தமக்குரியதாக்கி உலக ரீதியில் அரசுகள் மே தினத்தைக் கொண்டாடி வருவது அவதானிக்கப்பட வேண்டும்.

இது ஒரு முரணியல் வர்க்க முரண்பாடு, சுரண்டல் கூலிக் கொள்கை எனப் பலதையும் ஆராய்ந்த (டாஸ் கபிட்டல்) இப்பொழுது பொருளியல் ஆய்வாளர்களால் சிலாகிக்கப்படவில்லை. இருந்த பொழுதும் கார்ல் மாக்ஸின் கூலிக் கொள்கை மோல்தஸ் போன்ற பழம் பொருளாளர்களால் மட்டுமன்றி பின்னையவர்களாலும் இன்றுவரை ஏற்றுக் கொள்ளப்படுகிறது. கார்ல் மாக்ஸ், பழம் பொருளாளரில் ஒருவராகக் கருதப்படுகிறார்.

சோவியத் ஒன்றியத்தின் பிதாமகரான 'லெனினின்' மாக்சிய சிந்தாந்த அடிப்படையில் தனது புரட்சியியல் போராட்டச் சிந்தனைகளை சேர்த்து 1921 ஆம் ஆண்டு ரூசியாவில் தொழிலாளர் ஆட்சியை அமைக்க மே தினப் போராட்ட வெற்றியும் உந்து சக்தியாக அமைந்ததென்பதில் தவறில்லை.

''உலக தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்! நீங்கள் சாதிக்க இன்னும் இருக்கின்றன!''.




பொன்.வேணு கிருஷ்ணா

சிரியா கான் ஷேக்கௌன் (Khan Sheikhoun) இல் விஷவாயுத் தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்படும் சம்பவத்தில் ஊடக பிரசாரங்களுக்கு இருக்கும் ஒரு மிகப் பெரும் தடை என்னவென்றால், அத்தாக்குதலின் நிலைப்பாட்டிலிருந்து வரும் குற்றச் சாட்டுக்களின் முற்றுமுழுதான சாத் தியமற்ற தன்மையாகும். ஓர் ஈவிரக்க மற்ற ஆட்சிக்கு தலைமை தாங்கும் அசாத், அவரது சொந்த மக்களுக்கு எதிரான பல குற்றங்களுக்கு பொறுப்பா னவர் தான். ஆனால் சிரியாவின் பிர தான நகரங்கள் அனைத்தின் மீதும் அவரின் படைகள் மீண்டும் கட்டுப் பாட்டை எடுத்துள்ள நிலைமைகளின் கீழும் மற்றும் ட்ரம்ப் நிர்வாகத்தின் உயர்மட்ட அதிகாரிகளே இந்த உள் நாட்டுப் போரில் அநேகமாக அசாத் தப்பிப்பிழைத்து விடக்கூடும் என்பதை யும், சிரியாவில் அமெரிக்காவின் இலக்கு ISIS ஐ அழிப்பது தானே தவிர, சிரிய தலைவரை தூக்கியெறிவதல்ல என் பதை ஒப்புக் கொண்டுள்ள நிலைமை யில், அசாத் அதுபோன்றவொரு தாக்கு தலில் ஈடுபட அங்கே சாதாரணமாக எந்தக் காரணமும் இல்லை.

ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்க குண்டுகள் மற்றும் ஏவுகணைகளால் ஏற்பட்ட உயிரிழப்பு எண்ணிக்கைக்கான உள்நோக்கத்தைத் தீர்மானிப்பது ஒன் றும் சிரமமில்லை. அது ஒட்டுமொத்த மாக மத்திய கிழக்கில் அதன் மேலாதிக்க நிலைப்பாட்டை பேணுவதற்காக அமெரிக்க ஏகாதிபத்திய உந்துதலின் ஒரு பிரிக்கவியலாத பாகமாக உள்ளது, இந்த முயற்சியில் ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் இப்போது உயிரிழந் துள்ளனர் மற்றும் ஈராக், சிரியா, யேமன், லிபியா, சோமாலியா மற்றும் ஏனைய நாடுகளும் இரத்தக்களரியான குழப் பங்களுக்குள் மூழ்கடிக்கப்பட்டுள்ளன.

இந்தத் தீவிரமடைந்து வரும் இரத்த ஆறு, ஒபாமா நிர்வாகக் கொள்கைகளின் ஒரு தொடர்ச்சியையும் மற்றும் அதன் மிக மோசமான அம்சங்களின் தீவிரப் பாட்டையும் என இரண்டையும் பிரதி நிதித்துவம் செய்கிறது

வெளியுறவு விவகாரங்களுக்கான குழுவின் மிகாஹ் ஜென்கொ நடத்திய ஒரு கணக்கீட்டின் படி, ட்ரம்ப் வெள்ளை மாளிகைக்குள் நுழைந்ததில் இருந்து டிரோன் ஏவுகணைத் தாக்குதல்களின் கால அளவு, சராசரியாக 5.4 நாள்களுக்கு ஒரு தாக்குதல் என்பதிலிருந்து 1.8 நாள்களுக்கு ஒன்றாக, மும்மடங்கு அதிகரித்துள்ளது.

அமெரிக்கக் குண்டுவீச்சு மற்றும் ஏவுகணைத் தாக்குதல்களுக்கான விதி முறைகளை வரையறுக்கும் செயற்பாடு களுக்கான விதிமுறைகள் (Rules of engagement) யேமன் மற்றும் சோமா லியாவில் கணிசமான அளவிற்கு இலகு வாக்கப்பட்டுள்ளன, இவ்விரண்டு விடயங்களிலுமே ஜனாதிபதி ட்ரம்பின் நிர்வாக நடவடிக்கைகளால் செய்யப் பட்டன. யேமனில் குறைந்தபட்சம் 30 இல் ஒரு பெரிய படுகொலை, இந்த ஆட்சிமாற்றத்தை அடுத்து உடனடியாக நடந்ததாகும், மேலும் ஒபாமாவின் கீழ் பென்டகனால் தொடங்கப்பட்டு, ட்ரம்பின் கீழ் உறுதிப்பட்டு, நூற்றுக் கணக்கான அமெரிக்கச் சிறப்புப் படை நடவடிக்கையாளர் இப்போது சோமா லியாவில் நிலைநிறுத்தப்பட்டுள்ளனர்.

ஈராக் மற்றும் சிரியாவில் ஈடுபடுத் தப்பட்டுள்ள மிகப் பெரியளவிலான அமெரிக்கப் படைகளைப் பொறுத்த வரையில், ட்ரம்ப் நிர்வாகம் அச்செயல் பாடுகளுக்கான விதிமுறைகளை தளர்த்தும் அல்லது ஒட்டுமொத்தமாக அவற்றை அழிக்கும் கண்ணோட்டத்தில் அவற்றை மீளாய்வு செய்யும் இறுதி கட்டங்களில் உள்ளது. ஏற்கனவே, வான் வழித் தாக்குதல்களுக்கு தலைமையங் கள் உத்தரவிடுவதில்லை கள அதிகாரி களே உத்திரவிடும் வகையில் முடிவெ டுக்கும் நிகழ்முறையில் கட்டளை பிறப்பிப்பதற்கான பதவியிடங்கள் கீழ் நோக்கி குறைக்கப்பட்டுள்ளன. கடந்த பல மாதங்களாக அதிகரித்து வரும் உயிரிழப்பு எண்ணிக்கை, "கட்டுப்பாடு களைத் தளர்த்தும்" ட்ரம்பின் கட்டளை யைப் பென்டகன் நிறைவேற்றுகையில் இன்னும் மேற்கொண்டு விண்ணைத் தொடும்.

மொசூலில் மார்ச் 17 பெரிய படு கொலைகள் மற்றும் அமெரிக்கக் குண்டு வீச்சால் ஏற்பட்ட பல ஏனைய பேரழிவு களைக் குறித்து பென்டகன் இந்த வாரம் உத்தியோகபூர்வ விசாரணை ஒன்றைத் தொடங்கியது. இந்த சம்பவங் கள் "குறைந்தபட்சம் இப்பிராந்தியத் திலும் மற்றும் உலகெங்கிலும் நமது பிம்பம் மீது ஒரு எதிர்மறைத் தாக்கத்தைக்" கொண்டிருப்பதை பென்டகன் செய்தித் தொடர்பாளர் கேணல் ஜோசப் ஸ்க்ரொக்கா ஒப்புக் கொண்டார். வேறு வார்த்தை களில் கூறுவதானால், அமெரிக்க ஏகாதி பத்திய குற்றங்களை அம்பலப்படுத்து பவர்கள், பயங்கரவாதிகள் செய்யும் அதே வேலையைத்தான் செய்து கொண் டிருக்கிறார்கள்!

சர்வதேச பொது மன்னிப்பு அமைப்பு மற்றும் Airwars இன் அறிக்கைகள், மத்திய கிழக்கில் அமெரிக்க வெளியுறவுக் கொள்கையின் முழுமையான குற்றகர குணாம்சத்தை அடிக்கோடிட்டு காட்டு கின்றன. அவை அசாத்-விரோத மற்றும் ரஷ்ய-விரோத விஷமப் பிரசாரத்தில் சம்பந்தப்பட்டுள்ள அனைவரையும் ஏகாதிபத்தியத்தின் பிரசாரகர்களாக அம்பலப்படுத்துகிறது.

ஹிரோஷிமாவுக்கு பிந்தைய மிகப் பெரும் குண்டு போடப்பட்டதை சம்ப வமே இல்லை என்பதைப் போல ஊட கங்களும், அரசியல் ஸ்தாபகங்களும் நடத்துகின்றன

இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஹிரோஷிமா மற்றும் நாகாசாகியை அழிப்பதற்குப் பயன்படுத்திய அணு குண்டுகளுக்குப் பிந்தைய மிகப்பெரும் குண்டை வியாழக்கிழமையன்று (13. 04.207) அமெரிக்க இராணுவம் போட் டிருந்தது. அதற்குப் பின் இருபத்து நான்கு மணி நேரம் கடந்து விட்டிருந்த நிலையிலும் கூட, எந்த ஒரு அளவு கோலின் படியும் ஒரு பெரும் உலக சம் பவமாக இருக்கக் கூடிய இந்த அபிவி ருத்தியானது, முக்கியத்துவம் அற்ற ஒன்றாக அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஊடகங்களால் நடத்தப்பட்டது.

இந்த 22,000 பவுண்டு பெரிய வெடி மருந்து வான் வெடிகுண்டு (MOAB) பயன்படுத்தும் முடிவு அசாதா ரணமான வகையில் திடீரென ஒரு கணத்தில் எடுக்கப்பட்டதைக் குறித்தும் எந்தக் கவலையும் வெளிப்படுத்தப்பட வில்லை. பாகிஸ்தான் எல்லையில் உள்ள ஆப்கானிஸ்தான் மாகாணத்தின் மீது குண்டுவீசும் நடவடிக்கையில் இருந்து ஒதுங்கிக் கொள்ளுமாறு தான் கேட்டுக் கொள்ளப்படவில்லை என் பதை வியாழக்கிழமையன்று ட்ரம்ப் சுட்டிக் காட்டினார். வெள்ளிக்கிழமை யன்று, ஆப்கானிஸ்தானில் உள்ள அமெரிக்கத் தளபதி இந்த ஆயுதத்தைப் பிரயோகிக்கும் முடிவு அவருடையதே என்று கூறினார்.

**"அத்தனை குண்டுகளின் தாய்" குண்டு**

வெள்ளிக்கிழமை(14.04.2017) மாலை அமெரிக்கச் செய்தி ஒளிபரப்பு களின் நேரத்திற்கெல்லாம், "அத்தனை குண்டுகளின் தாய்" குண்டு போடப்பட் டதை குறித்து கிட்டத்தட்ட எந்தக் குறிப்புமே அங்கே இல்லாமல் போய் விட்டது. இத்தகையதொரு நிகழ்வு பாராட்டப்படுகிறது அல்லது அலட்சியத் துடன் கையாளப்படுகிறது என்பது இத்தகைய ஆயுதங்களின் பிரயோகம் உலகெங்கிலும் அமெரிக்க ஏகாதிபத்தி யம் நடத்துகின்ற சாதாரண நடவடிக்கை களின் பகுதியைப் போல் அல்லது இன் னும் மோசமாய் அதுவே "புதிய இயல்பு" என்பதாக கையாளப்பட இருக்கிறது.

வெள்ளிக்கிழமையன்று அமெரிக்கா வின் முக்கிய செய்தித்தாள்கள் இந்தத் தாக்குதலைப் பாராட்டின அல்லது ஒரு தலையங்க மெவுனத்தைப் பராமரித் தன. ஐரோப்பிய ஊடகங்களும் எந்த எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை.

தாக்குதலுக்கு அமெரிக்கா மிரட்டல் விடுப்பதற்கு மத்தியிலும், இந்த நட வடிக்கைக்கான நோக்கங்கள் அரசியல் ரீதியானவை என்பது தெளிவுபடத் தெரிகிறது.

சிரியா, ஈரான், வட கொரியா, ரஷ்யா, சீனா மற்றும் அத்தனை பிற இப்போதைய அல்லது வருங்கால எதிரிகளுக்கும் விளங்கச் செய்வதே இந்தக் குண்டுவீச் சின் நோக்கமாய் இருந்தது



இந்தக் குண்டுவீச்சு குறித்து ஜேர்மன், பிரெஞ்சு, அல்லது பிரிட்டிஷ் அரசாங் கத் தலைவர்கள் எந்த ஒரு அறிக்கையும் விடுக்கவில்லை, பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த ஜேரிமி கோர்பின் மற்றும் ஜேர்மன் "இடது" கட்சி உள்ளிட இடது என்று சொல்லப்படுகின்ற அர சியல் தலைவர்களும் கட்சிகளும் கூட அதேபோல் வாய்மூடி இருந்து கொண் டன.

அமெரிக்காவின் ஜனநாயகக் கட்சி யைச் சேர்ந்த முன்னிலை அங்கத்தவர்கள் -செனட்டின் சிறுபான்மைப் பிரிவு தலைவரான சார்லஸ் சூமர் மற்றும் அவையின் சிறுபான்மை பிரிவு தலை வரான நான்சி பெலோசி தொடங்கி கட்சியின் "இடது அணி"யாகச் சொல்லப் படுவதன் பேர்னி சாண்டர்ஸ் வரையி லும்- எவருமே எதுவும் கூறவில்லை.

"போர்க்களத்தில் சரியான இலக்குக்கு எதிராய் தந்திரோபாய ரீதியாக பயன்படுத் துவதற்குச் சரியான சமயமாக அது இருந்தது"

முன்னர் ஒருபோதும், 2003 ஈராக் படையெடுப்பின் போதும் கூட, பயன் படுத்தியிராத அளவுக்கான தீவிரமான ஆயுதத்தைப் பயன்படுத்துகின்ற முடி வானது உடனடி இராணுவ கருதிப் பார்த்தல்களின் அடிப்படையிலான ஒரு தந்திரோபாயமான ஒன்று மட்டுமே என வெள்ளிக்கிழமை அன்று ஆப் கானிஸ்தானுக்கான அமெரிக்கப் படைத் தளபதி ஜெனரல் ஜோன் நிக்கல்சன் ஊடகங்களிடம் தெரிவித்தார். "போர்க் களத்தில் சரியான இலக்குக்கு எதிராய் தந்திரோபாயரீதியாக பயன்படுத்து வதற்கு சரியான சமயமாக அது இருந் தது" என்று அவர் தெரிவித்தார்.

இந்தக் கூற்று அபத்தமானதாகும். கிழக்கு ஆப்கானிஸ்தானின் குகைகளில் ஒளிந்திருக்கின்ற பரிதாபகரமான ஆயுத வலிமை கொண்டிருக்கின்ற ஒரு சில நூறு கெரில்லாக்களுக்கு எதிராக இத் தகைய ஓர் ஆயுதத்தைப் பயன்படுத்து வதற்கு, முழுக்க இராணுவக் கோணத் தில், எந்த அறிவுநியாயமும் அங்கே இருக்கவில்லை. சிரியா மீதான ஏவுக ணைத் தாக்குதல், சிரிய ஆட்சிக்கு ஆதரவு தருவதை நிறுத்துமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு வெளியுறவுச் செயலர் றெக்ஸ் ரிலர்சன் காலக்கெடு விதித்தமை ஆகியவற்றை ஒட்டியும், வடகொரியாவுக்கு எதிராக உடனடியான ஒரு வலிந்த இராணுவத்

அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் உலக ளாவிய நலன்களின் பேரில் அமெரிக்க இராணுவம் பிரயோகப்படுத்தத்தக்க வன்முறைக்கு எந்த எல்லையும் கிடை யாது என்பதை சிரியா, ஈரான், வட கொரியா, ரஷ்யா, சீனா மற்றும் அத்தனை பிற இப்போதைய அல்லது வருங்கால எதிரிகளுக்கும் விளங்கச் செய்வதே இந்தக் குண்டுவீச்சின் நோக்கமாய் இருந்தது. MOAB க்கு அடுத்தபடியாக அணு ஆயுதங்களின் பயன்பாடு தான் இருக்கும், அந்த நட வடிக்கையையும் எடுப்பதற்கு, தான் தயாராகவே இருப்பதான செய்தியை அனுப்புவதற்கே பென்டகன் நோக்கம் கொண்டிருந்தது.


இந்த அரசியல் நோக்கங்களை வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல் வெள்ளிக் கிழமையன்று MOAB தாக்குதலைப் பாராட்டி வெளியிட்டிருந்த ஒரு தலை யங்கத்தில் சுருங்க வெளிப்படுத்தியி ருந்தது என அது எழுதியது:

"GBU-43 நிலைநிறுத்தப்பட்டிருப் பதை வட கொரியாவிலுள்ள ஏவுகணை ஏவும் கூட்டம் கவனித்திருக்கும் என்று நாம் அனுமானிக்கலாம். வட கொரியா வின் அணுஆயுத உற்பத்திச் சாலை மீது அமெரிக்கா ஒன்றைப் போட வேண் டும் என்று யோசனை கூறுவதற்கெல் லாம் நாம் போகாமல் இருக்கலாம். ஆனால் ஒரு வார இடைவெளியில், அமெரிக்கா தனது எதிரிகளின் "மூர்க்கத் தனத்திற்கு" எதிராக பதிலுக்கு நெருக்குவதை அதன் நலன்களுக்கு உட்பட்ட ஒன்றாகவே கருதுகிறது என்பதை கிம் ஜோங் உன், விளாடிமிர் புட்டின், பஷார் அசாத், ஜி ஜின்பிங் மற்றும் ISIS தலைவரான அபு பக்கர் அல்-பக்தாதி -அவர் எங்கே ஒளிந்திருந்தாலும்- ஆகியோர் கற்றுக் கொண்டுள்ளனர்."

'வொஷிங்டன் போஸ்ட்' இந்தக் குண்டு வீச்சுக்கு உள்பக்கத்தில் தான் இடம் ஒதுக்கியிருந்தது என்பதோடு அதனை தலையங்கத்தில் நேரடியாக வும் பேசவில்லை. ஆயினும் கடந்த இரண்டு வார காலத்தின் சமயத்தில் ட்ரம்ப்பின் வெளியுறவுக் கொள்கை தலைகீழாக்கங்களுக்கு அரசியல் ஸ்தா பகம் அளித்திருக்கும் பொதுவான ஏற்பை "தலைகீழ் மாற்றங்கள் வரவேற் கப்படுகின்றன" என்ற தலைப்பிலான ஒரு தலையங்கத்தில் வார்த்தைகளில் விவரித்தது.

(கேள்வி தொடரும்...)

# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.





132

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### *வன்னி மீட்புச் சமர்: ஓயாத அலைகள் III*

தமது முயற்சிகள் முறியடிக்கப்பட்டு பெரும் உயிர்ச் சேதத்தைச் சந்தித்த போதும் இராணுவத் தலைமை, விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ள வேண்டும் என்ற வெறியிலும் குறுட்டு நம்பிக்கையிலும் தனது படை நடவடிக்கைகளைத் தொடர்ந்தது. ஏப்ரல் மாதம் 4 ஆம் நாள் மீண்டும் இத்தாவிலில் புலிகளின் நிலைகள் மீது ஆக்ரோஷமான தாக்குதலைத் தொடர்ந்தது. கடைசி முயற்சி போன்று ஆனையிறவுப் படை முகாமிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் படையணிகளை நகர்த்தி ஒரே நேரத்தில் இத்தாவில் மீது படையெடுப்பை நிகழ்த்தியது. ஆனையிறவிலிருந்து முன்னேறிய பிரதான படையணியை கேணல் விதுஷாவின் தலைமையிலான மாலதி படையணியைச் சேர்ந்த போராளிகள் எதிர்கொண்டு தாக்கினர். இது எதிரியின் ஆறாவது தடையுடைப்புப் போர் நடவடிக்கையாகும். ஏற்கனவே நிகழ்ந்த தாக்குதல்களினால் புலிப்படை ஆள் பலத்தை இழந்து, மனோபலம் குன்றி, பலவீனம் அடைந்திருக்கலாமென எதிரி தவறாக மதிப்பீடு செய்திருந்தான். அந்தப் போலி நம்பிக்கையுடன் பொருதிய எதிரிக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. பீரங்கி, மோட்டார் சூட்டாதரவுடன் எமது முன்னணிக் காப்பரண்களைத் தகர்த்து இரு முனைகளில் முன்னேறிய எதிரிப் படைகளைச் சுற்றி வளைத்து வீராவேசத்துடன் போரிட்டனர் பெண் புலி வீராங்கனைகள். முன்னேறிய இராணுவத்தினரை ஒரு முற்றுகைப் பொறி வியூகத்துக்குள் சிக்க வைத்துக் களமாடிய எமது போராளிகளின் போர்த் திறனும் துணிச்சலும் எதிரியைத் திகைப்பில் ஆழ்த்தின. காலை தொடங்கி இரவு வரை நீடித்த அந்தக் கொடும் சமரில் இரு தரப்பிலிருந்தும் கொட்டப்பட்ட குண்டுகள் இத்தாவில் பகுதியை அதிரவைத்தன. இறுதியில், பலத்த உயிரிழப்புடன் சிங்களப் படையணிகள் பின்வாங்கின. அன்றைய நாள் வாங்கிக் கட்டிய அந்தப் பலத்த அடி ஐந்து நாள்களுக்கு எதிரியை ஓய்வெடுக்கச் செய்தது.


தோல்விக்கு மேல் தோல்வியாக ஏற்பட்டு வரும் பின்னடைவுகளைச் சிங்களப் படைத்துறைத் தலைமையால் சகித்துக் கொள்ள முடியவில்லை. இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினுள் தரையிறங்கி ஊடுருவி புலிப் படையணிகள் இத்தாவில் என்ற சிறு கிராமத்தில், நான்கு கிலோமீற்றர் நீளமும் ஒன்றரைக் கிலோமீற்றர் அகலமுமான ஒரு துண்டு நிலத்தில், நாற்



கட்ட வடிவமான பாதுகாப்புப் 'பெட்டி' அமைத்து, அதற்குள் இருந்தபடியே அசுர பலத்துடன் இராணுவம் ஏவிவிட்ட மூர்க்கத்தனமான தாக்குதல்களை வெற்றிகரமாக முறியடித்து வரும் அதிசயத்தைப் படைத்துறைத் தலைமையால் நம்ப முடியவில்லை. இந்தப் பின்னடைவுகளுக்குப் புலிகளின் வீரத்தையும் போர்த் திறனையும் காரணமாகக் கற்பிக்க விரும்பாத படைத் தலைமை, தனது தாக்குதல் தளபதிகளின் கோழைத்தனத்தால் விளைந்த வினையெனத் தப்பாகக் கணக்கிட்டது. இதனால் கள நிலைத் தளபதிகளை மாற்றியமைத்து, புதிய தாக்குதல் திட்டங்களை வகுத்து, பெரும் படை திரட்டி, ஏப்ரல் மாதம் 10 ஆம் நாளன்று இத்தாவில் மீது படையெடுத்தது சிங்கள இராணுவம்.

ஆள் பலத்தையும், படைக்கல வலுவையும் அணிசேர்த்த இராணுவத்தினர் இதுவரை பிரயோகிக்காத பெரும் பலத்துடன், கொடிகாமத்திலிருந்து முன்னேறி இத்தாவிலில் அமைந்த எமது நிலைகள் மீது மும்முனைத் தாக்குதலைத் தொடுத்தனர். அன்று காலை 6:30 மணியளவில் பீரங்கிகளின் முழக்கத்துடன் சமர்க்களம் திறந்தது. கண்டி வீதியோரமாக ஒரு முனையில் முன்னேற முயன்ற இராணுவத்தைக் கேணல் துர்க்கா தலைமையிலான சோதியா படையணி எதிர்கொண்டது. அடுத்த இரு முனைகளிலும் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிகள் சிங்களப் படைகளுடன் மோதின. இதுவரை காணாத ஒரு கொடூரமான சமரை அன்றுதான் இத்தாவில் மண் கண்டு கொண்டது. மூலை முடுக்கெல்லாம் வீழ்ந்து வெடித்த குண்டு மழைக்குள் நின்றபடி, இரும்பு யானைகளில் சவாரி வந்த சிங்களத் துருப்புகளை அசாத்தியமான துணிவுடன் எமது ஆண், பெண் போராளிகள் எதிர்த்துப் போராடினார்கள். புலிகளின் வீரத்துக்குப் பறைசாற்றும் மயிர்க்கூச்செறியும் பல நிகழ்வுகளும் இந்தச் சமரில் இடம்பெற்றன. எமது நிலைகளை எதிரி கைப்பற்றுவதும் பின்பு பின்வாங்கி ஓடுவதும், மீண்டும் முயற்சிப்பதும் அது முறியடிக்கப்படுவதுமாக சிங்களப் படைகள் மேற்கொண்ட பகீரத முயற்சிகளை எல்லாம் புலிப் படைகள் முறியடித்தன. காலை தொடங்கிய சமர் நள்ளிரவு வரை, கிட்டத்தட்ட 18 மணிநேரம் வரை நீடித்தது. எதிரி தனது முழுப் பலத்தையும் பிரயோகித்தும் புலிகளின் பாதுகாப்புப் 'பெட்டியை' அசைத்து விட முடியவில்லை. மறுநாள் காலையும் இராணுவம் மேற்கொண்ட இன்னொரு முயற்சியையும் எமது போராளிகள் வெற்றிகரமாக முறியடித்தனர். சிங்கள இராணுவத்தின் ஆணவம் இத்தாவில் மண்ணில் உடைத்தெறியப்பட்டது. ஆள் பலத்தையும் ஆயுத பலத்தையும் விட ஆன்ம பலமே வெற்றியை நிர்ணயிக்கும் சக்தி என்பதை இத்தாவில் சமர் மூலம் எதிரிக்கு உணர்த்தினர் எமது வீரர்கள். நெஞ்சுரத்தின் நினைவழியாக் காவியமாக இத்தாவில் கள மண்ணில் ஒரு சரித்திரத்தைப் படைத்தார்கள் எமது மண்ணின் மறவர்கள்.

இத்தாவில் சமர் ஆனையிறவின் தலைவிதியை நிர்ணயித்தது. இத்தாவிலில் எட்டுத் தடவைகள் பலப் பரீட்சைகள் நடத்தி, பெருந்தொகையில் உயிரிழப்பையும் ஆயுதத் தளபாட அழிவையும் சந்தித்து, மனம் தளர்ந்த சிங்களப் படைகள் முடங்கிய களப்புறநிலையைக் கருத்தில் எடுத்த தலைவர் பிரபாகரன், ஆனையிறவுப் பிரதான முகாம் மீதான தாக்குதலுக்கு உத்தரவிட்டார். தலைவரின் உத்தரவுக்காகத் தயார் நிலையில் காத்திருந்த புலிப் படை அணிகள் கேணல் தீபனின் வழிநடத்தலில் ஆனையிறவுப் படைத் தளம் மீதான இறுதித் தாக்குதலைத் தொடுத்தனர். ஏப்ரல் மாதம் 18 ஆம் நாள் பிற்பகல் முகாவில் பகுதியில் தொடங்கிய சமர், சிங்கள இராணுவத்தின் வலுவான எதிர்ப்புகளையும் முறியடித்து ஒரு சில நாள்களில் ஆனையிறவின் சுற்றுப் புறப் பிரதேசங்களை புலிகள் வசமாக்கியது. ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி, முற்றுகைச் சமரின் இறுதி நாளன்று, ஆனையிறவின் அனைத்துப் பாதைகளையும் அடைத்து மூடி, இயக்கச்சித் தளம் மீது புலிப் படை பாய்ந்து முன்னேறியது. சரணடைவது அல்லது தப்பியோடுவது என்ற சங்கடமான தெரிவுக்குத் தள்ளப்பட்ட சிங்கள இராணுவம் தப்பியோட முடிவெடுத்தது. பாதைகள் மூடப்பட்ட நிலையில் கிளாலி நீரேரி ஊடாகவும், நீரேரிக் கரை வழியாலும் சிதறி ஓடிய இராணுவம் மீது படகுகளில் இருந்தும் தரையில் இருந்தும் எமது போராளிகள் தாக்குதலை நிகழ்த்தினர். பிணமாக விழுந்தவர்களையும், காயமடைந்து கதறியவர்களையும் விட்டு விட்டு, ஏனைய படையினர் தலைதெறிக்கத் தப்பி ஓடிப் பிழைத்தனர். அன்று, ஆனையிறவு கூட்டுப் படைத் தளம் விடுதலைப் புலி வீரர்களிடம் வீழ்ச்சியடைந்தது. பிரபாகரனின் தாக்குதல் திட்டத்தின் மூலோபாயக் குறிக்கோள் நிறைவு பெற்றது. தமிழீழ விடுதலைப் பாதையில் அமைந்திருந்த தடைக்கல் உடைத்தெறியப்பட்டது. ஆணவம் பிடித்த சிங்கள இராணுவம் அவமானத்துடன் தலைகுனிய, புலிகளின் போராற்றல் கண்டு உலகம் வியப்படைந்தது. 2000 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 23 ஆம் நாள் காலை ஒன்பது மணியளவில் ஆனையிறவு மீட்கப்பட்ட வெற்றிச் சின்னமாக, அங்கு புலிக் கொடி ஏற்றப்பட்டது. வரலாற்றுப் புகழீட்டிய ஆனையிறவுச் சமரின் ஒருங்கிணைப்புக் கட்டளைத் தளபதி கேணல் பானு, சமர் முனைத் தளபதிகள், போராளிகள் புடை சூழ தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார்.



எவராலும் வெற்றி கொள்ள முடியாத பலம் பெற்றது என அமெரிக்க இராணுவ நிபுணர்களால் கருதப்பட்ட ஆனையிறவுக் கூட்டுப் படைத்தளம் விடுதலைப் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தமை தமிழீழ போரியல் வரலாற்றில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியது. ஆனையிறவில் புலிகள் ஈட்டிய வெற்றியுடன் படைவலு மேலாதிக்கத்தை சிறிலங்கா இராணுவம் இழந்தது. இராணுவச் சமச்சீர் வலு நிலையை (Balance of Military Power) விடுதலைப் புலிகள் இயக்கம் பெற்றுக் கொண்டது.

(தொடரும்...)

காலைக்கதிர்



# கொள்கை விளக்கம் தர இயலாதவர் ‘சொல்லை’க் காட்டி மிரட்ட முற்படுகிறார்

## சுமந்திரனின் அறிக்கைக்கு ஈ.பி.ஆர்.எல்.எவ்

*ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அண்மையில் கருத்து வெளியிடும் போது "மாவை சேனாதிராசாவுக்கு மண்டை வறண்டு கறையான் தின்று விட்டதா...?" என்று கூறியிருந்தார். இதேபோன்று அந்தக் கட்சியின் செயலாளர் சிவசக்தி ஆனந்தன் எம்.பி. கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனை 'ஹிட்லர்', 'முசோலினி' என்று சர்வாதிகாரிகளுடன் ஒப்பிட்டு பகிரங்க நிகழ்வு ஒன்றில் உரையாற்றியிருந்தார்.*

*இவர்களின் கூற்றுக்களுக்கு இலங்கை தமிழரசுக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் எம்.பி.கண்டனம் தெரிவித்திருந்தார். அந்த கண்டனத்தில் "மண்டை" என்ற சொல் குறித்து சுரேஷ் பிரேமச்சந்திரனுக்குத் தான் அதிகம் தெரியும் என்றும் சுமந்திரன் குறிப்பிட்டிருந்தார். சுமந்திரனின் அந்தக் கண்டனத்துக்கு ஈ.பி. ஆர்.எல்.எவ் விளக்கம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு:*

கொள்கை அடிப்படையில் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்காமல் சொல்லைக் கொண்டு பதிலளித்திருக்கின்றமை அவரது சுய முரண்பாட்டை தமிழ் மக்களுக்கு நன்கு வெளிப்படுத்தி இருக்கிறது. இந்த வாய்ப்பை எமக்கு அளித்தமைக்காக ஈழ மக்கள் புரட்சிகரவிடுதலைமுன்னணி அவருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

2017ஆம் ஆண்டு நடைபெற்ற ஐ.நா.வின் 34ஆவது கூட்டத்தொடரில் 30 - ஒன்று தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கக் கூடாது என்று கூட்டமைப்பின் 11 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கையெழுத்திட்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திற்கு கடிதம் அனுப்பி வைத்திருந்தனர்.

கையெழுத்திட்ட அந்த 11நாடாளுமன்றஉறுப்பினர்கள் குறித்து கருத்து தெரிவிக்கையில் 'முட்டாள்கள்' என்று சுமந்திரன் விமர்சித்திருந்தார். முழு நாடுமே ஒரே தொகுதியாகக் கணிக்கப்பட்டு ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுகிறது. அதில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜனாதிபதியை நோக்கி முதுகெலும்பு இருக்கிறதா?. என்று கேள்வி கேட்டவர்தான் இந்தச் சுமந்திரன்.

சர்வதேச சமூகத்திடம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு சர்வதேச விசாரணையே வேண்டும் என்று வலியுறுத்துவதற்கு பதிலாக அரசாங்கத்துடன் இணைந்து உள்ளக விசாரணை பொறிமுறைக்கு ஆதரவளித்து அதனையே தமிழ் மக்களின் விருப்பம் என்று தனது முடிவை தமிழ் மக்களின் முடிவாக அறிவித்தவர் சுமந்திரன். மக்கள் மத்தியில் பணிபுரிபவர்களை விமர்சிப்பதற்கு அவர் அருகதை அற்றவர்.

சர்வதேச அரங்கில் - குறிப்பாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் - தீர்மான வரைவை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் திருத்தப்பட்ட வரைவு தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போது 'சர்வதேச பொறிமுறையா, கலப்பு பொறி முறையா, உள்ளக பொறிமுறையா என்ற சொற்களைப்பிடித்துக் கொண்டு தொங்க வேண்டாம்' என்றும், அரசியல் தீர்வை பொறுத்த வரையில் ஒற்றை ஆட்சியா, தன்னாட்சியா, சமஷ்டியா என்ற சொற்களைப்பிடித்துக்கொண்டு தொங்க வேண்டா மென்றும் சொல்லுக்கு முக்கியம் கொடுக்காதவர், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் தெரிவித்த கருத்தில் மட்டும் ஏன் சொல்லைப் பிடித்துக் கொண்டு தொங்குகிறார்?

தமிழ் தேசிய இனத்தின் தலை விதியை நிர்ணயிக்கக் கூடிய இடத்தில் ஒவ்வொரு சொல்லும் முக்கியமானது என்பதை இவர் உணர்ந்திருக்கிறார் என்பது மேற்படி கட்சித்தலைவரின் சொல்லைக் கையாண்டிருப்பதிலிருந்து நன்கு புலப்படுகிறது. பேச வேண்டிய இடத்தில் பேச வேண்டிய விடயத்தைப் பேச வேண்டிய மொழியில் உறுதியுடன் பேசுவதற்குத் திராணியற்றவர்.

தனது கையாலாகாத்தனத்தை மூடி மறைப்பதற்காகவே இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளதாகவே நாம் கருதுகின்றோம்.

கொள்கையை, கொள்கையால் எதிர்கொள்ள முடியாதவர், கொள்கை விளக்கம் அளிக்க முடியாதவர் சொல்லைக் காட்டி மிரட்ட முற்படுகிறார். இதன் மூலம் இவர் தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் வாழ்ந்தவர் அல்லர் என்பதனையும் அவர்களின் வட்டார வழக்கு (நாளாந்த நடைமுறை) பற்றி ஏதும் அறியாதவர் என்பதனையும் தானே ஒப்புக் கொண்டிருக்கிறார்.

மக்கள் மத்தியிலிருந்து அந்நியப்பட்டவரிடமிருந்து மக்கள் உணர்வுகளைய்யும், மக்கள் மொழிகளையும் எதிர்பார்ப்பது தவறு தான்.

தேசியப் பட்டியல் எம்.பி.யாக இருப்பதால் தன்னால் சில விடயங்களைச் செய்ய முடியவில்லை என்றும், தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் எனது செயலை புரிந்து கொள்வீர்கள் என்று சொன்னதிலிருந்தும், அவர் இன்று செயற்படும் முறையைப்பார்ப்பதிலிருந்தும், அவர் எப்படிப்பட்டவர் என்று தமிழ் சமுதாயம் நன்றாகவே புரிந்திருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மீது ஈ.பி.ஆர்.எல்.எவ் வைத்த விமர்சனம் கொள்கை சார்ந்தது. இதற்கு ஏராளமான உதாரணங்களை கொடுக்க முடியும்.

உதாரணமாக தமிழ் மக்கள் பேரவை ஏற்பாடு செய்திருந்த இரண்டு பேரணிகளின்போதும் வடக்கு கிழக்கில் நிகழ்த்தப்பட்ட ஏராளமான போராட்டங்களின் போதும், அண்மையில் கிளிநொச்சியில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டத்தின் போதும், அரசுக்கு அழுத்தம் கொடுத்தால் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வந்து விடுவார்கள் என்றும், தென்பகுதி கொந்தளிக்கும் என்றும் தமிழரசுக் கட்சியின் தலைவர் தொடர்ந்தும் கருத்துக்களை வெளியிட்டு வந்தார்.

இதே தமிழரசுக் கட்சிதான் இன்று வேறு வழியின்றி பூரண ஹர்த்தாலுக்கு தமது ஆதரவையும் வழங்கியுள்ளது என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இதன் மூலம் தமிழரசுக் கட்சியின் இரட்டை வேடம் அம்பலமாகியுள்ளமையையும் வெளிபடுத்த விரும்புகிறோம்.

மக்களின் போராட்டங்களை வழி நடத்த வேண்டியவர்கள் தமது இயலாமையை மறைப்பதற்காக மேற்கண்ட கூற்றுக்களை வெளியிடுகின்றனர். அத்தகைய தலைவர்களின் செயற்பாடுகளை மக்களின் மனோ நிலையில் இருந்தும் அவர்களின் உணர்வுநிலையிலிருந்தும் விமர்சிப்பதற்கே அந்த சொல் பயன்படுத்தப்படாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இரா.சம்பந்தனை சர்வாதிகாரி என்று தமிழரசுக் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களே பல்வேறு சான்றுகளைக் சுட்டிக் காட்டி தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்திலும் மாநாட்டிலும் பகிரங்கமாக குறை கூறியிருந்தார்கள்.

தமிழ்தேசியக்கூட்டமைப்பு என்பது நான்கு கட்சிகளின் அங்கத்துவத்தை கொண்ட ஒரு கூட்டமைப்பாகும். அப்படி இருக்கையில் எத்தகைய ஒரு கொள்கை முடிவும் அங்கத்துவ கட்சிகள் ஊடான கலந்தாய்வின்பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டும்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற குழுக் கூட்டத்தையும் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தையும்கூட்டுவதற்கே பலமான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. பல விடயங்கள் கூட்டமைப்பு அங்கத்துவக் கட்சிகளின் ஒப்புதலின்றியே எடுக்கப்பட்டுள்ளன.

கூட்டமைப்பில் தெரிவிக்கப்படுகின்ற கருத்துக்கள் தலைவரினால் செவிமடுக்கப்படுவதுமில்லை. கூட்டப்படுகின்ற கூட்டங்களில் நீங்கள் சொல்வதை சொல்லுங்கள், முடிவை நானே எடுப்பேன் என்று சொல்பவரை வேறு எந்த மொழியால் அழைப்பது? மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள், ஒரு தேசிய இனப் பிரச்சினையை தீர்க்க வேண்டியவர்கள் தனியாக மேற்கொள்ளும் முடிவுகள் சரியானதாக இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

உண்மையில் மக்கள்நலன் சார்ந்து சிந்திப்பவர்கள் ஏன் அங்கத்துவ கட்சித் தலைவர்களுடன் மனம் விட்டுப் பேச அஞ்ச வேண்டும்?

மக்கள் பிரதிநிதிகளைத் தரக் குறைவாக பேசியவர் கொள்கை அடிப்படையில் வைத்த விமர்சனத்தை சொல்லைக்கொண்டுபதிலளித்திருப்பதுவேடிக்கையாகஇருக்கிறது.

அவரின் அரசியல் அறிவு நன்கு வெளிப்படுகிறது. மீண்டும்ஒருமுறைதமிழரசுக் கட்சியினுடைய அரசியல் இயலாமையை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளித்த சுமந்திரனுக்கு எமது நன்றிகள் உரித்தாகட்டும். என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-100)

# உலகம் ஒவ்வொரு நொடியும் இயங்க மனித உழைப்புத்தான் முக்கிய காரணம்!

## வடக்கு மாகாண அமைச்சர் டெனிஸ்வரன் தெரிவிப்பு

இந்த உலகம் ஒவ்வொரு நொடியும்இயங்கமனிதஉழைப்புதான் மிக முக்கிய காரணமாக இருக்கிறது. அவ்வாறாக தமது முழுநேரத்தையும்உழைப்புக்காய் கொடுத்து தம்முடைய வாழ்வையும் உயர்த்தும் அதேவேளையில் நாட்டையும் உயர்த்துகின்றனர்.

அவ்வாறாக வாழும் இந்த உயர் வர்க்கமான தொழிலாளர் வர்க்கத்தினருக்கு இந்த நாள் எவ்வாறு உருவானது என்பது ஒரு வரலாறாக இன்றும் நினைவு கூரப்படுகிறது.

இவ்வாறு வடக்கு மாகாண அமைச்சர் பா.டெனிஸ்வரன் விடுத்துள்ளமேதினச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

ஒரு நாட்டின் முதுகெலும்புகளாக எப்போதும் தம்முடைய கடின உழைப்பால் உயர்ந்து நிற்கும் உழைப்பாளர்களின் தினமாகிய இந்த மே தினத்தில், உயர்ந்தவர்கள் அடித்தட்டுவர்க்கத்தினர் என்ற எந்தப் பாகுபாடுமின்றி நாட்டையே தோளில் சுமக்கும் உழைப்பாளர்களின்உழைப்புக்கு அங்கீகாரம் கிடைத்த மாபெரும் வெற்றியின் நன்னாள் இது.

இந்த சிறந்த தருணத்தில் உழைக்கும் வர்க்கத்தினராகிய தொழிலாளர்கள் அனைவருக்கும் எனது உளம் நிறைந்த நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் உவகை அடைகின்றேன்.

1880 ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவில் தொடங்கி, 1890 ஆம் ஆண்டு பாரிஸில் உருவானதுதான் மே தினம். அல்லது, உலகத் தொழிலாளர் தினம். அதாவது மே 1. இது எல்லா நாள்களையும்போல சாதாரண விடுமுறை நாளாக எண்ணி நம்மில் பலர் இதனைக் குறித்துப் பெரிதாகச் சிந்திப்பதில்லை. ஆனால்மற்றவிடுமுறை நாள்களைப் போல இதுவும் ஒரு விடுமுறை நாள் என்று நாம் நினைத்துவிடக்கூடாது.

மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு மாபெரும் பங்காற்றிய உழைப்பாளர்கள் முற்காலத்தில் 18 மணி நேரம் வேலை வாங்கப்பட்டனர். இதை எதிர்த்து தாங்கள் உழைக்க வேண்டிய நேரத்தை 8 மணி நேரமாக வரையறுத்து, அதற்காகப் போராடி உலக தொழிலாளர்களுக்குகிடைத்த மாபெரும் ஒரு சரித்திர வெற்றி நாளாக அவர்களது உரிமையைப் பெற்ற நாளே மே தினம்.

இவ்வாறாகஉலகம்முழுவதும் ஒருமைப்பட்டு குரல்கொடுத்து பல உயிர் தியாகங்களின் ஊடாகவும், பலதரப்பட்ட போராட்டங்களின் வாயிலாகவும் கிடைத்த இந்த மாபெரும் வெற்றியின் சரித்திர நாளில் உழைக்கும் வர்க்கமாகிய உழைப்பாளர்களே! இன்று ஒன்று திரண்டு உங்களுக்கு கிடைத்துள்ள மகத்தான வெற்றியை சந்தோஷமாய் கொண்டாடி மகிழுங்கள்.- என்றுள்ளது. (ஐ)

# மாணவர்கள் 45 லட்சம் பேருக்கு இவ்வருட இறுதிக்குள் காப்புறுதி

## கல்வி அமைச்சர் காரியவசம் தெரிவிப்பு

இந்த வருடத்துக்குள் பாடசாலை மாணவர்கள் 45 லட்சம் பேருக்கு தலா இரண்டு லட்சம் ரூபா காப்புறுதி செயற் திட்டம் வழங்கப்படும். இதற்கான கேள் விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன என்று கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

ஓட்டமாவடி மத்திய கல்லூரியின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஏற் பாடு செய்யப்பட்டிருந்த கல்வியியல் மற்றும் வர்த்தகக் கண்காட்சி நிகழ்வு களில் அதிதியாகக் கலந்துகொண்ட போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-


எல்லாச்சமூகத்தாரும் தமக்கேஉரித்தான பாரம்பரிய கலாசார விழுமிய பண்பாட்டு சிறப்பம்சங்களை பேணிப் பாதுகாத்து அதன்படி நாட்டில் வாழ்வதற்கு எல்லா உரிமைகளும் உள்ளன. கடந்த கால அர சில் இருந்ததைப் போலல்லாது வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு என்று பிரித்துப் பார்க்காது பொதுவான கல்விக் கொள் கையை வகுத்து நாம் இன ஐக்கியத்தின் பால் செயற்பட்டு வருகின்றோம்.

கல்வி அமைச்சிலே முதற் தடவையாக இன நல்லிணக்க சௌஜன்யப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கல்வியில் பெருந் தொகைச் செலவு செய்து கிழக்கு மாகாண கல்வித் தரத்தை உயர்த்தவுள்ளோம்.

அந்தவகையில் 3 ஆயிரத்து 901 அதிபர்களையும், கல்வி நிர்வாக சேவை யில் 852 அதிகாரிகளையும் நியமிக்க முடிந் தது. மேலும், ஆசிரியர்களுக்கான பயிற்சி களை வழங்கும் வளதாரிகளாக ஆயிரத்து 190 பேர் உள்வாங்கப்படவுள்ளார்கள். -என்றார்.



## நாளை மின் தடை



யாழ்ப்பாணம், மே 01

நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5.30 மணிவரை வவுனியா பிரதேசத்தில் தேக்கவத்தைப் பிரதேசத்திலும் -

மன்னார் பிரதேசத்தில் நீராவிபுரம் பிரதேசம், செட்டி யார்கட்டையடம்பன் பிரதேசம், கற்கடந்தகுளம், முருங்கன் விதைகள் உற்பத்தி நிலையம் ஆகிய இடங்களிலும் மின்சா ரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித் துள்ளார். (இ)

## கஞ்சாவுடன் 6 பேர் கைது

சட்டவிரோதமான முறை யில் உலர்ந்த கஞ்சாவை வைத் திருந்த 6 பேர் தனமல்வில, எம்பிலிபிட்டியான பிரதே சத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விஷேட அதி ரடிப்படையின் புத்தள முகாம் அதிகாரிகள் குழு ஒன்றால் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பில் சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது அவர்களிட மிருந்த 18 கிலோகிராம் உலர்ந்த கஞ்சா பொலிஸ் விஷேட அதி ரடிப்படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணை களுக்காக தனமல்வில பொலி ஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட னர் என்று பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் தெரிவித் தனர். (எ)

## இலங்கையில் பெரியளவில் தொழிலாளர் பற்றாக்குறை

### மேல் மாகாண அமைச்சர் சம்பிக்க கூறுகிறார்

கொழும்பு, மே 01

இலங்கையின் பெரும் தொழிலாளர் பற்றாக்குறை நிலவுவதாக பெருநகர மற்றும் மேல்மாகாண அபி விருத்தி அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தெரிவித் துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் சுமார் 2 லட்சம் வெளிநாட்டவர்கள் பணியாற்றுகின்றனர்.

அவர்களில் தொழில் விஸா இல்லாமல் பணியாற் றுபவர்களும் உள்ளனர். எனவே, வெளிநாட்டுப் பணியாளர்களின் வருகை தொடர்பில் ஆராய குடி யேற்ற விதிமுறைகளை கடுமையாக்க வேண்டும்.

இவ்வாறு பணியாற்றும் வெளிநாட்டுப் பணியாளர் களில், இந்தியா, பங்களா தேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைச் சேர்ந் தவர்களே அதிகமாக உள்ள னர்.-என்றார். (எ)



## ஆசிரிய உதவியாளருக்கான கொடுப்பனவு அதிகரிப்பு!

கொழும்பு, மே 01

நாடளாவிய ரீதியில் சேவையில் ஈடுபட்டுள்ள ஆசிரிய உதவியாளர்களுக்கு வழங்கப்படும் ஆறாயிரம் ரூபா கொடுப்பனவு பத்தாயி ரம் ரூபா வரை அதிகரிக்கப் பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவை கருத்திற் கொண்டு இந்தக் கொடுப்பனவை அதிகரிக்க கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் தீர்மானித் துள்ளார்.

இது தொடர்பாக சமர்ப் பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள் ளது.

இதன்படி கடந்த பெப்ர வரி முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகை யில் அதிகரிக்கப்பட்ட தொகையை ஆசிரிய உதவி யாளர்களுக்கு வழங்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

## பொறியியலாளர் கோரிக்கையை ஏற்காததே மின்சார சபைத் தலைவர் விலகக் காரணம்

கொழும்பு, மே 01

மின்சாரசபை பொறியி யலாளர்களின் கோரிக்கை களுக்கு இணங்காமையே மின் சாரசபையின் தலைவர் அனுர விஜயபால அண்மையில் பதவி விலகியமைக்கான காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சாரசபையின் பணிப் பாளர்களுக்குப் பதிலாக மின் சார பயன்பாட்டுக் கணக் காய்வை மின்சாரத்துறை அமைச்சு பொறுப்பேற்க வேண் டும் என்பதே பொறியியலா ளர்களின் கோரிக்கை.

எனினும், இதற்கு தாம் உடன்படப்போவதில்லை என்று விஜயபால அறிவித் தமையுடன், இதற்கு பொறியி யலாளர்களின் கோரிக்கை குறுகிய நோக்கம் கொண்டது என்று அவர் காரணம் கூறி யிருந்தார்.

இதன் காரணமாக பொறி யியலாளர்களுக்கு மக்கள் மத் தியில் இருந்து விமர்சனங்கள் வரலாம் என்றும் அவர் குறிப் பிட்டிருந்தார்.

இருந்தபோதும் பொறியி யலாளர்கள் கோரிக்கைக்கு மின்சாரத்துறை அமைச்சு தமது ஆதரவை வழங்கியதாகத் தக வல்கள் வெளியாகியுள்ளன. (எ)

## போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்க கொழும்பில் விரைவில் மின்சார பஸ்கள்

### தனியார் பஸ் உரிமையாளர் சங்கத் தலைவர் தெரிவிப்பு



மக்களின் பயண வசதி களை இலகுவாக்குவதற்காக வும், போக்குவரத்து நெரிசல் களுக்கு தீர்வாகவும் மின்சக்தி யில் இயங்கும் மின்சார பஸ் களை கொழும்பில் போக்கு வரத்தில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது என தனியார் பஸ் உரிமை யாளர் சங்கத் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிதி அமைச்சர் மற்றும் மாநகர மற்றும் மேல் மாகாண சபை அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் இந்த நடவடிக் கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மின்சார பஸ்கள் இலங் கைக்குக் கொண்டு வந்தவு டன் முதலாவதாக மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் கண் காணிப்புக்கு உட்படுத்தப் படவுள்ளன.

பஸ்களுக்கான முதன்மை வீதிகளில் இந்த பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபட வுள்ளன.

இதன் மூலம் பயணிகளுக் காக நெரிசல் குறைவதோடு, சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைத் துக் கொள்ளவும் முடியும்.

தற்போது வரையில் 3 வகை பஸ்கள், மாதிரிகளுக்காக சீனா வில் இருந்து இறக்குமதி செய் வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தபஸ்கள் காலை நேரத் தில் 3 மணி நேரமும், மாலை நேரத்தில் 3 மணி நேரமும் பயணிக்கின்ற நிலையில், இரவு 8 மணி முதல் 12 மணி வரை விசேட சேவை வழங்கு வதற்கு நடவடிக்கைமேற்கொள் ளப்படும்.

மேலும் சொகுசு பஸ் பயன் படுத்தப்படுவதால் கொழும்பு நகரத்துக்கு வரும் வாகனங் களின் எண்ணிக்கையை குறைத்துக் கொள்ள முடியும்.- என்றார். (எ)

## ஆயிரம் கோடி ரூபா செலவில் யாசகர்களுக்கு மத்திய நிலையம்

கொழும்பு, மே 01

கொழும்பு நகரில் யாச கத்தில் ஈடுபவர்களை முற் றாக இல்லா தொழிக்கும் வகையில் ரிதியகம பிரதே சத்தில் அவர்களுக்கான மத்திய நிலையம் அமைக் கப்பட உள்ளது. அதன் பொருட்டு முதற் கட்டமாக ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக, மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் நிஹால் ரூப சிங்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, கொழும்பில் பிச்சை எடுப்பவர்களை எதிர்வரும் ஜூன் மாதம் தொடக்கம் அம்பலாந் தோட்டை - ரிதியகம பிர தேசத்தில் உள்ள தடுப்பு நிலையத்துக்குக் கொண்டு செல்லும் நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)

# கொடநாடு பங்களாவில் இருந்த 'ஜெ'இன் பொருள்கள் கொள்ளை!

கொடநாடு பங்களா காவலாளி ஓம் பகதூரைக் கொலை செய்தனர் எனச் சந்தேகிக்கப்படும் கும்பலைச் சேர்ந்தவர்கள், அன்றைய தினம் அங்கிருந்த ஜெயலலிதாவின் 5 கைக்கடிகாரங்கள் மற்றும் விலை உயர்ந்த பளிங்கு கற்களாலான பழமைவாய்ந்த பொருள்கள் என்பனவற்றையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்

இந்தக் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய 4 பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் நீலகிரி மாவட்ட பொலிஸ் ஆணையாளர் முரளி ரம்பா ஊடகவியலாளர்களிடம் தெரிவிக்கையில்-

இந்தக் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்ட குற்றவாளிகள் 3 கார்களில் கொடநாடு பகுதிக்கு வந்துள்ளார்கள். பொலிஸார் கண்டுபிடிக்காமல் இருப்பதற்காக கார்களில் போலி இலக்கத் தகடுகளை பொருத்தி உள்ளனர்.

காவலாளி ஓம் பகதூரை கொலை செய்த அந்தக் கும்பல், மற்றொரு காவலாளியான கிருஷ்ண பகதூரை கத்தியால் குத்தியுள்ளனர். இதையடுத்து, இந்தக் கும்பல் பங்களாவின் ஜன்னல்களை உடைத்து உள்ளேபுகுந்து, அலுமாரிகளில் இருந்த 5 கைக் கடிகாரங்கள் மற்றும் விலை உயர்ந்த பளிங்கு கற்களாலான பழமை வாய்ந்த பொருள்களை கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

கூடலூரில் சந்தேகத்துக்கு இடமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 2 கார்களை பறிமுதல் செய்து நடத்தப்பட்ட விசாரணையில், கேரளாவைச் சேர்ந்த கும்பலுக்கும் இந்தக் கொலையில் தொடர்பு இருப்பது தெளிவாகத் தெரியவந்தது.

இந்த வழக்கில் முக்கிய குற்றவாளியாகச் செயற்பட்ட கனகராஜ் என்பவர் விபத்தில் இறந்துவிட்டார். ஏனையோரைக் கைதுசெய்து நடத்திய விசாரணையில், 5 கைக்கடிகாரங்களையும் கேரளாவில் உள்ள ஆறு ஒன்றில் எறிந்துள்ளமை தெரியவந்துள்ளது. அவற்றை மீட்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இந்த வழக்கில் தலைமறைவாக உள்ள 5 பேரைத் தனிப்படை பொலிஸார் தீவிரமாகத் தேடிவருகிறார்கள்.- என்றார். (ச)

# அ.தி.மு.கவை உடைக்க முயற்சிக்கிறது தி.மு.க.!

## குற்றம் சாட்டுகிறார் மத்திய அமைச்சர் ராதாகிருஷ்ணன்



நாகர்கோவில்,மே 01

அ.தி.மு.க.வை உடைத்து, சட்ட சபை உறுப்பினர்களைத் தம் பக்கம் இழுக்க தி.மு.கவினர் கடுமையாக முயற்சி செய்கின்றனர்.

-இவ்வாறு மத்திய அமைச்சர் பொன்.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவிலில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எம்.ஜி.ஆர். 1972 ஆம் ஆண்டு அ.தி.மு.க.வை உருவாக்கிய பின்னர் அந்த கட்சியை உடைக்க தி.மு.க. பல்வேறு முயற்சிகளை செய்தது. ஆனால், அவர்களால் கடைசி வரை அ.தி.மு.க.வை அழிக்க முடியவில்லை. தற்போது ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அந்தக் கட்சியில் இருந்து ஒரு சட்டசபை உறுப்பினர் கூட தி.மு.க.வுக்குச் செல்லவில்லை.

தி.மு.க.வினர் தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க பல்வேறு முயற்சிகளை தொடங்கிவிட்டார்கள். இதற்காக மீண்டும் ஒரு கூவத்தூரை உருவாக்க முயற்சி செய்கிறார்கள். தமிழகத்தில் பா.ஜ.க. புறவாசல் வழியாக காலூன்ற நினைப்பதாக தி.மு.க. குற்றம் சாட்டியது. இப்போது யார் புறவாசல் வழியாக நுழைய முயற்சிக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளலாம். ஆனால், அவர்களின் கனவு பலிக்காது. தமிழகத்தில் பா.ஜ.க. ஆட்சி விரைவில் அமையும். உள்ளூராட்சித் தேர்தலில் இதற்கான அறிகுறி தெரியும். அ.தி.மு.க., தி.மு.க. இரு கட்சிகளும் மக்களால் புறக்கணிக்கப்படும்.

தமிழகத்திலும் பா.ஜ.கவுக்கு ஆதரவு பெருகி வருகிறது. தி.மு.க., மக்கள் பிரச்சினைகளில் நீலிக் கண்ணீர் வடிக்கிறது. காவிரி பிரச்சினை, ஹைட்ரோ கார்பன், மீத்தேன் திட்டம் மற்றும் மீனவர் பிரச்சினையில் தமிழகத்துக்கு துரோகம் இழைத்தது தி.மு.க.தான். அவர்கள் செய்த துரோகத்தில் இருந்து மக்களை மீட்டெடுக்கும் முயற்சிகளை பா.ஜ.க. தான் செய்து வருகிறது. -என்றார். (ச)

# தமிழக விவசாயிகளின் இறப்பில் உள்ள உண்மையை வெளிப்படுத்த வேண்டும்!

## நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவிப்பு



வறட்சியால் விவசாயிகள் இறக்கவில்லை எனத் தமிழக அரசு தாக்கல் செய்திருக்கும் பிரமாணப்பத்திரத்தை உடனடியாகத் திரும்பப்பெற்று, இறந்துபோன விவசாயிகளைப் பற்றிய உண்மை நிலையை உச்சநீதிமன்றத்தில் தெரிவிக்க வேண்டும்.

-இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.


விவசாயிகள் இறப்புத் தொடர்பில் தமிழக அரசால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத்தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடன் வாங்கி செய்த விவசாயம் பொய்த்துப் போனதால் கடனைக் கட்ட வழியற்று நிற்கும் விவசாயிகள் மானத்தை இழந்து விடக்கூடாது என்பதால்தான் உயிரையே இழக்கத் துணிகின்றனர். அத்தகைய விவசாயப் பெருங்குடி மக்களின் மரணத்தை எள்ளி நகையாடி, இழிவுபடுத்தும் செயல்களை ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் அரங்கேற்றி வருகிறார்கள்.

விவசாயிகள் ஏழைகள் இல்லை என்றும், அவர்கள் வட்டிக்குப் பணம்விட்டு சம்பாதிக்கிறார்கள் என்றும், விவசாயிகள் எவரும் சாகவில்லை என்றும் கூறிய அமைச்சர்கள் இன்றும் அமைச்சரவையில்தான் இருக்கிறார்கள். இது விவசாயிகளை மட்டுமல்லாது ஒட்டுமொத்தத் தமிழர்களின் உணர்வுகளையுமே அவமதிக்கிறது.-என்றார். (ச)

# ஹவாலா முகவர் சுகேஷிடம் 50 லட்சம் ரூபா பறிமுதல்!



டில்லியில் கைதான ஹவாலா முகவர் சுகேஷிடம் இருந்து டில்லி பொலிஸார் ரூ.50 லட்சம் பறிமுதல் செய்துள்ளனர்.

இரட்டை இலைச் சின்னத்தைப் பெற லஞ்சம் வழங்க முற்பட்டார் என்ற சந்தேகத்தில் தினகரன் தற்போது பொலிஸ் காவலில் உள்ளார். விசாரணை பல கட்டங்களாக பரபரப்பாக நடந்து வருகிறது.

இந்நிலையில், கைதாகி இருக்கும் தரகர் சுகேஷ் ரூ. 50 லட்சத்தை பதுக்கி வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இது தினகரன் மற்றும் சுகேஷிடையே இடம்பெற்ற தொலைபேசி உரையாடல் விசாரணையில் தெரியவந்துள்ளது.

தினகரனின் வங்கிக் கணக்குகள் தொடர்பிலும் விசாரணைகளை டில்லிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# இந்திய விமானப்படை அதிகாரிகளைப் போருக்கு தயாராகுமாறு உத்தரவு!



இந்திய விமானப்படை அதிகாரிகளை குறுகிய கால, அதேவேளையில் தீவிரமான போருக்கு தயாராகுங்கள் என இந்திய விமானப்படைத் தளபதி பி.எஸ் தானோ உத்தரவிட்டுள்ளார்.

மாறிவரும் இராணுவ தேவைகளுக்காக, பாகிஸ்தானுடன் 10 நாள்கள் போருக்கும், சீனாவுடன் 15 நாள்கள் போருக்கும், தயாராகும்படி இந்திய விமானப்படை தளபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கான வழிமுறைகள், கடந்த வாரம் டில்லியில் நடைபெற்ற இந்திய விமானப் படை அதிகாரிகளின் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் போருக்கு கூர்மையான மேம்பட்ட போர் செயற்திறனுடன் தயார் நிலையில் இருக்க வேண்டும்

அதன்படி விமான பணியாளர்கள் மற்றும் ஆயுதங்கள், ஏவுகணைகள் நிரப்பிய எச்சரிக்கை ரேடார் கருவிகள் கொண்ட போர் விமானங்களைத் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# இளவரசியின் மகன் விவேக்குக்கு துணை பொதுச்செயலாளர் பதவி?



டி.டி.வி. தினகரன் கைதானதால் சசிகலாவுடன் சிறையில் இருக்கும் இளவரசியின் மகன் விவேக் ஜெயராமனை துணை பொதுச்செயலாளராக நியமிக்க சசிகலா திட்டமிட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அ.தி.மு.க பொதுச் செயலாளராக பதவி ஏற்ற சசிகலா சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்று பெங்ளூர் சிறையில் அடைக்கப்பட்டார். அதனால் கட்சியைக் காப்பாற்ற டி.டி.வி தினகரனை துணைப் பொதுச் செயலாளராக நியமித்தார்.

ஆனால், இரட்டை இலை சின்னத்தைப் பெற தேர்தல் ஆணையக அதிகாரிகளுக்கு 50 கோடி ரூபா பேரம் பேசிய வழக்கில் தினகரனும் சிக்கினார். டில்லி பொலிஸார் அவரைக் கைது செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்நிலையில்,மாலுமி இல்லாத கப்பலாக தள்ளாடும் அ.தி.மு.க.வைக் காப்பாற்ற அடுத்து தலைமைப் பொறுப்புக்கு வரப் போவது யார் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

சசிகலாவுடன் சிறையில் இருக்கும் இளவரசியின் மகன் விவேக் ஜெயராமனை துணைப் பொதுச்செயலாளராக நியமிக்க சசிகலா திட்டமிட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகி இருக்கிறது.

சசிகலாவின் அண்ணன் ஜெயராமன்-இளவரசி தம்பதியின் மகன் விவேக் ஜெயராமன். எம்.பி.ஏ. பட்டதாரியான இவர் ஜாஸ் சினிமா நிறுவன தலைமைச் செயல் அதிகாரியாக இருக்கிறார். தந்தை ஜெயராமன் மரணம் அடைந்த போது சிறுவனாக இருந்த விவேக் போயஸ் தோட்ட இல்லத்திலேயே இருப்பார். ஜெயலலிதாவுக்கு இவரை மிகவும் பிடிக்கும். விவேக்குக்கும் ஜெயலலிதா மீது அதிக பாசம் உண்டு.

வளர்ந்து தொழில் ரீதியாக உயர்ந்த போதும் கட்சியின் இளைஞர் அணியில் இணைந்து பணியாற்றியவர்.

சசிகலா குடும்பத்தில் தினகரன், திவாகரன் இடையே இடைவெளி அதிகமாக இருந்தாலும் இருவருக்கும் இடையில் பாலமாக இருப்பவர் விவேக். எனவே விவேக்கை துணைப் பொதுச்செயலாளர் ஆக்கினால் பிரச்சினை இருக்காது என்று கட்சி நிர்வாகிகளும் கூறுகிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விவேக் கரூர் மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் அமைச்சர் ஒருவர் மூலம் காய்களை நகர்த்தி வருகிறார். அவர் கடந்த சில தினங்களுக்கு முன்பு 19 சட்டசபை உறுப்பினர்களிடம் பேசி விவேக்கை ஆதரிக்க சம்மதம் பெற்றுள்ளார். மொத்தம் 30 சட்டசபை உறுப்பினர்கள் விவேக் பக்கம் இருக்கிறார்கள் எனக் கூறப்படுகிறது. (ச)

## கிர்கிஸ்தானில் நிலச்சரிவு; 24 பேர் பரிதாபமாகச் சாவு!



பிஷ்கெக், மே 01

கிர்கிஸ்தான் நாட்டில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட பெரும் நிலச்சரிவில் சிக்கி 9 குழந்தைகள் உட்பட 24 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மத்திய ஆசிய நாடான கிர்கிஸ்தானின் தெற்கு பகுதியில் சில தினங்களாக கனமழை பெய்து வருவதால் அந்தப் பகுதி முழுவதும் வெள்ளக் காடாகக் காட்சியளித்து வருகிறது. இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் உஸ்ஜென் மாவட்டத்தில் உள்ள ஓஷ் பகுதியில் திடீரென நிலச்சரிவு ஏற்பட்டது.

இதனால், அந்தப் பகுதியில் உள்ள வீடுகள் மண்ணில் புதையுண்டன. இதையடுத்து சம்பவ இடத்தில் மீட்புக் குழுவினர் மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் கிர்கிஸ்தானின் தேசிய பேரிடர் மேலாண்மை அமைச்சகம் தெரிவிக்கையில்-

கிர்கிஸ்தானின் தெற்குப் பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவில் 9 குழந்தைகள் உட்பட 24 பேர் உயிரிழந்தனர். 20இற்கும் மேற்பட்டோர் காணாமல் போயுள்ளனர். காணாமல் போனவர்களைத் தேடும் பணியை மீட்புப் படையினர் முடுக்கி விட்டுள்ளனர்.

இதேவேளை, கடந்த மாதம் அந்தப்பகுதியில் நிலச்சரிவு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது தெரிவித்துள்ளது. (எ)

## பிலிப்பைன்ஸ் - இந்தோனேசியா புதிய கப்பல் பாதை திறப்பு!

பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியாவுக்கு இடையில் உள்ள வர்த்தக உறவை வலுப்படுத்தும் நோக்கில் நேற்று ஞாயிற்றுக்கிழமை புதிய கப்பல் பாதை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.


இதன்போது பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரி கோவை இந்தோனேசிய ஜனாதிபதி ஜொகோ விடோடோ பிலிப்பைன்ஸின் டாவோ நகரில் சந்தித்துள்ளார்.

இந்தநிகழ்வின்போது கருத்துத் தெரிவித்த விடோடோ:-

'இந்தோனேசியா மற்றும் பிலிப்பைன்ஸுக்கு இடையிலான உறவுகள் கடந்த 30 வருடங்களாக வளர்ச்சியைக் கண்டுள்ளன. தற்போது திறந்து வைக்கல் பட்டுள்ள புதிய கப்பற் பாதை இரு நா களுக்கும் இடையிலா உறவை மேலும் வலுப்படுத்தும்.

இந்தப் புதிய கப்பல் பாதை மூலம் பிலிப்பைன்ஸின் டாவோ மற்றும் இந்தோனேசியாவின் வடக்கு சுலவெசி ஆகிய துறைமுகங்களுக்கு பயணிக்கச் செல்லும் நேரம் 3 நாள்களாகக் குறைவடையும்.- என்று தெரிவித்தார். (எ)

# கியூபாவில் விமான விபத்து 39 பேர் பரிதாபமாகச் சாவு!



கியூபாவின் உள்நாட்டுப் போக்குவரத்து விமானம் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை விபத்துக்கு உள்ளானதில் 39 பேர் உயிரிழந்தனர்.

கியூபா தலைநகர் ஹவானாவில் இருந்து புறப்பட்ட அந்த விமானம் வின்ராஸ் ரெராஸ் நகருக்கு அண்மையில் தரையிறங்க முற்பட்ட வேளையில் விபத்துக்கு உள்ளான தாக கியூபாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஏரோகவியோட விமான சேவை 1990 களில் கியூபாவின் இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்டது. இந்தசேவையில் அன்ரனோவ் 26, மற்றும் ஏ.ரி.ஆர் +.42-500, மில் மி -8 விமானம் உள்ளிட்ட 22 விமானங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டுச்சேவையை தொடரும் இந்த விமான நிறுவனம் கிங்ஸ்ரனில் இருந்து மொன்றிகோவுக்கான சர்வதேச விமான சேவையைமட்டும்நடத்துகின்றது. தரையிறக்குவதில் ஏற்பட்ட கோளாறு காரணமாக ஏற்பட்ட இந்த விபத்துடன் இவ் வருடத்தில் கியூபாவில் இடம்பெற்ற 5 ஆவது பெரிய விமான விபத்து இது என்று கியூபாவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தகவல் அறிந்து அங்கு சென்ற மீட்புப் படையினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

எனினும், விபத்துக்கான காரணம் தெரியவில்லை. இதுதொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## பாகிஸ்தானில் இந்துக்கோயில் சூறை; கால்வாயில் வீசப்பட்ட சுவாமி சிலைகள்!

இஸ்லாமபாத், மே 01

பாகிஸ்தானில் உள்ள சிந்து மாகாணத்தில் இந்துக் கோயில் ஒன்று நாசக்காரர்களால் சூறையாடப்பட்டுள்ளது. அங்கிருந்த சுவாமி சிலைகளை எடுத்து கால்வாயில் தூக்கி வீசிய கொடூரசம்பவம் அதிர்ச்சியையும், பரபரப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

சிந்து மாகாணத்தில் உள்ள கராச்சி நகரில் இருந்து சுமார் 60 கிலோமீற்றர் தூரத்தில் தாட்ட மாவட்டத்தில் உள்ள காரோ என்ற பகுதியில் 2 ஆயிரத்துக்கும் அதிகமான இந்து மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வழிபாட்டுக்காக இங்குள்ள ஒரு கோயிலுக்குள் நுழைந்த நாசக்காரர்கள் கோயிலை சூறையாடினர். அங்கிருந்த சுவாமி சிலைகளை உடைத்து அருகில் உள்ள கால் வாயில் தூக்கி வீசிச் சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவுசுமார் ஒரு மணியில் இருந்து நடைபெற்ற இந்த அத்து மீறல் தொடர்பாக மத அவமதிப்பு சட்டத்தின்கீழ் வழக்குப் பதிவு செய்துள்ள பொலிஸார் இதுவரை யாரையும் கைதுசெய்யவில்லை.

தங்களது வணக்கஸ்தலத்தை நாசப்படுத்தியமையுடன் தெய்வச் சிலைகளை உடைத்து கால் வாய்க்குள் வீசிச் சென்ற சம்பவம் அங்குள்ள இந்து மக்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது. (எ)

## வடகொரிய ஆயுத பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பு பேச்சு நடத்துக!

### புனித பாப்பரசர் வலியுறுத்து

வட கொரியாவின் அணு ஆயுத பிரச்சினைச் சிக்கலை தீர்க்க மூன்றாம் தர பேச்சு நடத்தப்பட வேண்டும் என்று புனித பாப்பரசர் வலியுறுத்தியுள்ளார்.

வடகொரியா தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி உலக நாடுகளை பீதியில் ஆழ்த்தி வருகிறது. அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகளை அழித்து விடுவோம் என்று மிரட்டி வருகிறது.

இந்தநிலையில், கெய்ரோவிலிருந்து விமானத்தில் பயணம் செய்த பாப்பரசர் பிரான்ஸிஸ் பயணிகளிடையே இது தொடர்பில் பேசினார். இதன்போது அவர் தெரிவித்தவை வருமாறு:-

அணு ஆயுதங்களால் ஏற்படும் பேரழிவை தவிர்க்க வேண்டும்.

வடகொரியாவுக்கும் அமெரிக்காவுக்கும் இடையேயான பிரச்சினையைத் தீர்க்க நோர்வே போன்ற மூன்றாம் தரப்பு நாடு பேச்சை நடத்த வேண்டும்.

உலகம், அழிவு தரும் அணு ஆயுத சிக்கலை எதிர்கொண்டுள்ள இந்த நேரத்தில் போர் ஏற்பட்டால் மனிதர்களில் ஒரு பகுதியினர் அழிந்து விடுவர்.

அடுத்த மாதம் ஐரோப்பாவில் இது குறித்து பேச அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பைச் சந்திக்கத் தயாராக இருக்கின்றேன்.-என்றார். (எ)

## விக்கிபீடியா இணையத்தளத்துக்கு துருக்கியில் தடை!

உலகிலேயே மிகப் பிரசித்தி பெற்ற இணையத்தளமான விக்கிபீடியா துருக்கி நாட்டில் தடை செய்யப்பட்டுள்ளது.

அந்த இணையத்தளத்தை துருக்கியில் தடை செய்தமைக்கான காரணம் என்ன என்பது குறித்து இதுவரை தகவல்கள் எவையும் வெளியிடப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள துருக்கி ப்ளொக்ஸ் குழு, பொதுமக்கள் இந்த இணையத்தளத்தைப் பார்வையிட முடியாது என்று அறிவித்திருந்தது. நேற்று முன்தினம் முதல் இது நடைமுறைக்கு வந்தது.

தொழில்நுட்ப பகுப்பாய்வு மற்றும் சட்ட இலக்கம் 5651 இற்கு அமைவான சட்ட ரீதியான கருத்தாய்வின் படி இந்த இணையத்தளம் துருக்கியில் தடை செய்யப்பட்டுள்ளதுஎனதொடர்பாடல் தொழில் நுட்ப ஆணையம் தெரிவித்துள்ளது. (எ)


# வடகொரியா அணு ஆயுத அச்சுறுத்தல்: அமெரிக்கா - சீனா முக்கிய ஆலோசனை!

வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல் தொடர்பாக அமெரிக்கா மற்றும் சீன வெளியுறவுத் துறை அமைச்சர்கள் நேற்று முன்தினம் சந்தித்து, ஆலோசனை நடத்தினர்.

உலக நாடுகளை அச்சுறுத்தும் விதத்தில் தொடர்ந்து அணு ஆயுத சோதனைகளை நடத்தி வருகிறது வடகொரியா. இதன் காரணமாக, வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்புச் சபையும், அமெரிக்காவும் 2006 ஆம் ஆண்டில் இருந்து மிகக் கடுமையான பொருளாதாரத் தடைகளை விதித்தன.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்து வரும் நிலையிலும், வடகொரியா தனது நிலையில் இருந்து பின்வாங்காமல் தற்காப்பு என்ற பெயரில் தொடர்ந்து ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. இதன் காரணமாக கொரிய தீபகற்பத்தில் பதற்றம் நீடிக்கிறது.

தென்கொரியாவும், அமெரிக்காவும்இணைந்து தங்கள் நாட்டின் மீது போர் தொடுக்க ஆயத்தமாகி வருகின்றன என்று



குற்றம் சாட்டி வரும் வடகொரியா, அமெரிக்காவை அழித்துவிடுவோம்என்று மிரட்டியுள்ளது. வடகொரியாவின் இந்த மோதல் போக்கு பெரும் சேதத்தில் போய் முடியும் என்றும், பேச்சு முயற்சிகள் வெற்றிபெறா விட்டால், பெரிய மோதல் வெடிக்கும் என்று அஞ்சுவதாகவும் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

இந்த நிலையில் ஐ.நா. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் பங்கேற்ற அமெரிக்க வெளியுறவுத் துறை அமைச்சர் டில்லர்சன்,

அணு ஆயுதங்களை கொரிய தீப கற்பத்தில் இருந்து அகற்றுவதற்காக வடகொரியாவுடன் பேச்சு நடத்தத் தயாராக இருக்கின்றன. அண்டை நாடுகள்மீது வடகொரியாவின் அணு ஆயுத அச்சுறுத்தல் உண்மை. தேவைப்பட்டால் வடகொரியாவுக்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பது தொடர்பில் பரிசீலிக்கத் தயாராக இருக் கின்றோம்- என்று கூறினார்..

இந்தக் கூட்டத்தின் இடையே, சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யியை அவர் சந்தித்தார். அப்போது, கொரிய தீப கற்பத்தில் அணு ஆயுதங்களை அகற்றுவதில் உள்ள சவால்கள் மற்றும் அதனை எதிர்கொள்வதற்காக இரு நாடுகளும் ஒத்துழைப்பு வழங்குவது தொடர்பில் இருவரும் விவாதித்தனர்.

அமைதியான தீர்வு தான் சரியான தீர்வாக அமையும் என்று வடகொரியாவின் நெருங்கிய நட்பு நாடான சீனாவின் வெளியுறவு அமைச்சர் கூறியுள்ளார்.

# அடுத்த சுற்றுக்கு முன்னேறும் தகுதியை இழந்தது பெங்களூர்!

## இதுவரை 10 ஆட்டங்களில் ஏழில் தோல்வி




ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 34 ஆவது லீக் ஆட்டத்தில் 61 ஓட்டங்கள் வித்தியாசத்தில் ரைஸிங் புனே சூப்பர் ஜயன்ட்ஸ் அணியிடம் தோல்வி கண்டது பெங்களூர் ரோயல் சலஞ்சர்ஸ்.

இதன் மூலம் இந்தத் தொடரில் 7 ஆவது தோல்வியைச் சந்தித்துள்ள பெங்களூர் அணி, அடுத்த சுற்றான 'பிளே ஓவ்' சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

புனேவில்சனிக்கிழமைநடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வென்ற பெங்களூர் அணித்தலைவர் விராட் கோஹ்லி களத்தடுப்பை தேர்வு செய்தார். இதையடுத்து துடுப்பெடுத்தாடிய புனேவின் இன்னிங்ஸை அஜிங்க்ய ரஹானேவும், ராகுல் திரிபாதியும் தொடக்கினர். திரிபாதி 11 ஓட்டங்கள் இருந்தபோது கொடுத்த எளிதான பிடியை கோஹ்லி கோட்டை விட்டார்.

இதன்பிறகு அஜிங்க்ய ரஹானே 6 ஓட்டங்களில் நடையைக் கட்ட, பின்னர் வந்த அணித்தலைவர் ஸ்டீவன் ஸ்மித், சாமுவேல் பத்ரீ பந்துவீச்சில் பவுண்டரியை விரட்டி ஓட்டக் கணக்கைத் தொடங்கினார்.

அரவிந் வீசிய 5ஆவது ஓவரில் ஒரு சிக்ஸரை விளாசிய திரிபாதி, சாஹல் வீசிய அடுத்த ஓவரில் இரு பவுண்டரிகளை விரட்டினார். புனே அணி 8.2 ஓவர்களில் 58 ஓட்டங்கள் எடுத்திருந்தபோது, திரிபாதி ஆட்டமிழந்தார். அவர் 28 பந்துகளில் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 37 ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து களம்புகுந்த மனோஜ் திவாரி பவுண்டரியை அடித்து ஓட்டக் கணக்கைத் தொடங்க, சாமுவேல் பத்ரீ வீசிய 12 ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர், இரு பவுண்டரிகளை பறக்கவிட்டார் ஸ்மித்.

சாஹல் வீசிய அடுத்த ஓவரில் மனோஜ் திவாரி ஒரு சிக்ஸரை விளாச, புனேவின் ஸ்கோர் உயர ஆரம்பித்தது. ஸ்டூவர்ட் பின்னி வீசிய 14 ஆவது ஓவரில் இரு பவுண்டரிகளை விரட்டிய ஸ்மித், அதே ஓவரில் ஆட்டமிழந்தார். அவர் 32 பந்துகளில் ஒரு சிக்ஸர், 5 பவுண்டரிகளுடன் 45 ஓட்டங்கள் எடுத்தார். இந்த ஜோடி 3 ஆவது விக்கெட்டுக்கு 50 ஓட்டங்கள் எடுத்தது.

இதன்பிறகு மனோஜ் திவாரியுடன் இணைந்தார் டோனி. இந்த ஜோடி சற்று வேகம் காட்ட, 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 157 ஓட்டங்கள் சேர்த்தது புனே. மனோஜ் திவாரி 35 பந்துகளில் ஒரு சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 44 ஓட்டங்களும் , டோனி 17 பந்துகளில் 1 சிக்ஸர், 1 பவுண்டரியுடன் 21 ஓட்டங்களும் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பெங்களூர் தரப்பில் சாமுவேல் பத்ரீ, பவன் நெகி, ஸ்டூவர்ட் பின்னி ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

> வலுவான வீரர்களைக் கொண்ட பெங்களூர் அணி, முதல் அணியாக ஐ.பி.எல். போட்டியிலிருந்து வெளியேறியிருக்கிறது.

### பெங்களூர் தோல்வி

பின்னர் ஆடிய பெங்களூர் அணியில் டிராவிஸ் ஹெட் 2 ஓட்டங்களில் நடையைக் கட்ட, அந்த அணியின் சரிவு ஆரம்பமானது. ஒருபுறம் அணித்தலைவர் கோஹ்லி போராடியபோதும், மறுமுனையில் டிவில்லியர்ஸ் 3, கேதார் ஜாதவ் 7, சச்சின் பேபி 2, ஸ்டூவர்ட் பின்னி 1 என அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால் 9.5 ஓவர்களில் 48 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது பெங்களூர்.


இதன்பிறகு வந்த பவன் நெகி 3 ஓட்டங்கள், மில்னி 5 ஓட்டங்கள், சாமுவேல் பத்ரீ 2 ஓட்டங்களில் வெளியேற, மறுமுனையில் தனி நபராகப் போராடிய கோஹ்லி 48 பந்துகளில் 1 சிக்ஸர், 4 பவுண்டரிகளுடன் 55 ஓட்டங்கள் சேர்த்து 9 ஆவது விக்கெட்டாக வெளியேறினார். இறுதியில் 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து தோல்வி கண்டது பெங்களூர்.

புனே தரப்பில் இம்ரான் தாஹிர் 4 ஓவர்களில் 18 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 3 விக்கெட்களை சாய்த்தார். பெர்குசன் 4 ஓவர்களில் ஓர் ஓட்டமில்லாத ஓவருடன் , 7 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 2 விக்கெட் வீழ்த்தினார். டிவில்லியர்ஸ் உள்ளிட்ட இரு முக்கிய விக்கெட்டுகளை வீழ்த்திய பெர்குசன் ஆட்ட நாயகனாகத் தேர்வு செய்யப்பட்டார்.

இதுவரை 9 ஆட்டங்களில் விளையாடி 5 ஆவது வெற்றியைப் பெற்றுள்ள புனே அணி 'பிளே ஓவ்' சுற்றுக்கு முன்னேறும் வாய்ப்பைத் தக்க வைத்துக் கொண்டது. அதேநேரத்தில் 10 ஆட்டங்களில் விளையாடி 7ஆவது தோல்வியை சந்தித்திருக்கும் பெங்களூர் அணி, அடுத்த சுற்று வாய்ப்பை இழந்திருக்கிறது.

## மோசமாக விளையாடிவிட்டு அணித் தலைவராக நிற்க வெட்கம்

## விராட் கோஹ்லி பெரும் மன வருத்தம்




மோசமாக விளையாடி விட்டு அணித்தலைவராக இங்கு நின்று பேசுவதற்கு கஷ்டமாக உள்ளது என்று புனே அணிக்கெதிரான தோல்விக்குப் பின், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணித்தலைவராக விராட் கோஹ்லி கருத்துக் கூறியுள்ளார்.

ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் - ரைசிங் புனே சூப்பர் ஜெயன்ட் அணிகளுக்கு இடையிலான போட்டி புனேயில் நேற்று நடைபெற்றது. இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய புனே அணி 20 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 157 ஓட்டங்கள் சேர்த்தது. பின்னர் 158 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய பெங்களூர் அணியால் 20 ஓவர் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

விராட்கோஹ்லி ஒருவர் மட்டுமே நிலைத்து நின்று 48 பந்தில் 55 ஓட்டங்களைச் சேர்த்தார். மற்ற வீரர்கள் ஒற்றை இலக்க ஓட்டத்தோடு ஆட்டமிழந்தனர். ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணி வீரர்கள் சொதப்பல் ஆட்டம் நீடித்துக் கொண்டிருக்கிறது.

போட்டிக்குப்பின் பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. அப்போது விராட் தோல்வி குறித்துப் பேசினார்.

''இது போன்று மோசமாக விளையாடி விட்டு, அணித் தலைவராக இங்கே வந்து பேசுவதற்கு மிகவும் கஷ்டமாக உள்ளது. ஆனால், இந்தத் தோல்வி விளையாட்டின் ஒரு பகுதி என்று நான் நினைக்கிறேன்.

இதுபோன்ற தோல்வியில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டு, வரும் போட்டிகளில் சிறப்பாக விளையாட அனைத்து பொறுப்புகளையும் நான் எடுத்துக் கொள்வது அவசியம். நாங்கள் மிகச்சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயற்சி செய்கிறோம். ஆனால் சிறந்த முறையில் அது வெளிப்படவில்லை.

''தொடர் தோல்விகளுக்குப் பிறகு வீரர்கள் பயத்தில் உள்ளனர். இதனால் வெற்றிக்கான நோக்கத்தில் குறைபாடு உள்ளது. வீரர்களிடையே சிறந்த உணர்வு காணப்படவில்லை.''

''புனே அணி வெற்றி பெற்றது என்பதை விட நாங்கள் தோல்வியடைந்தோம். ஏறக்குறைய 'பிளே ஓவ்' சுற்றுக்குத் தகுதி பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால், தோல்வி குறித்து எந்தவித பதற்றமும் இல்லாமல் மகிழ்ச்சியாக மீதமுள்ள நான்கு போட்டிகளில் விளையாட முடியும்.'' -என்றார்.



### ஓட்ட எண்ணிக்கை சமநிலையில் முடிந்ததால்

# 'சூப்பர் ஓவர்' ஆட்ட முறையில் மும்பையிடம் குஜராத் தோல்வி

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் 35-ஆவது லீக் ஆட்டத்தில் சூப்பர் ஓவர் முறையில் குஜராத் லயன்ஸை தோற்கடித்தது மும்பை இண்டியன்ஸ்.

முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் லயன்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 153 ஓட்டங்களைச் சேர்த்தது. பின்னர் ஆடிய மும்பை அணியும் 20 ஓவர்களில் 153 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழக்க, ஆட்டம் சமநிலையில் முடிந்தது.

இதையடுத்து, வெற்றியைத் தீர்மானிக்க 'சூப்பர் ஓவர்' முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி, ஜேம்ஸ் ஃபாக்னர் ஓவரில் 11 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணியால், பூம்ரா ஓவரில் 6 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டில் சனிக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் நாணயச்சுழற்சியில் வென்ற குஜராத் அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார். இஷன் கிஷானும், பிரெண்டன் மெக்கலமும் அந்த அணியின் இன்னிங்ஸை தொடங்கினர்.

மெக்லீனாகான் வீசிய முதல் ஓவரில் பவுண்டரி அடித்து ஓட்டக் கணக்கைத் தொடங்கிய இஷன் கிஷான், மலிங்கா வீசிய அடுத்த ஓவரில் ஒரு சிக்ஸரை பறக்கவிட்டார். அதே ஓவரில் பவுண்டரி அடித்த மெக்கலம், அடுத்த பந்தில் ஸ்டெம்பை பறிகொடுத்தார். அவர் 4 பந்துகளில் 6ஓட்டங்கள் எடுத்தார்.

இதையடுத்து அணித்தலைவர் சுரேஷ் ரெய்னா களமிறங்க, மெக்லீனாகான் வீசிய 3 ஆவது ஓவரில் ஒரு சிக்ஸர், இரு பவுண்டரிகளை விளாசினார் இஷன் கிஷான். தொடர்ந்து வேகம் காட்டிய இஷன் கிஷான் ஹர்பஜன் சிங் வீசிய அடுத்த ஓவரில் மேலும் இரு பவுண்டரிகளை விரட்ட, 4 ஓவர்களில் 46 ஓட்டங்களை எட்டியது குஜராத்.

பூம்ரா வீசிய அடுத்த ஓவரில் சிக்ஸர் அடிக்க முயன்ற ரெய்னா, போலார்ட்டிடம் பிடி கொடுத்தார். அவர் ஓர் ஓட்டம் மட்டுமே எடுத்தார். பின்னர் வந்த ஆரோன் ஃபிஞ்ச் ஓட்டக் கணக்கைத் தொடங்குவதற்கு முன்னதாகவே, மலிங்கா பந்துவீச்சில் விக்கெட் இழந்தார். அவரைத் தொடர்ந்து வந்த தினேஷ் கார்த்திக் 2 ஓட்டங்களில் நடையைக் கட்ட, 8.1 ஓவர்களில் 56 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது குஜராத்.

இதையடுத்து வந்த ரவீந்திர ஜடேஜா, சிக்ஸரை விளாசி ஓட்டக் கணக்கைத் தொடங்கினார். மறுமுனையில் தொடர்ந்து வேகம் காட்டிய இஷன் கிஷான் 2 ஓட்டங்களில் அரைச் சதத்தை நழுவ விட்டார்.

> *கடைசிப் பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பாண்டியா அந்தப் பந்தில் ஆட்டமிழந்தார். இதனால் இரு அணிகளினதும் ஓட்டங்கள் சமநிலையில் நின்றன.*

அவர் 35 பந்துகளில் 2 சிக்ஸர், 6 பவுண்டரிகளுடன் 48 ஓட்டங்கள் சேர்த்து ஹர்பஜன் சிங் பந்துவீச்சில் போலார்ட்டிடம் பிடி கொடுத்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஜடேஜா 21 பந்துகளில் ஒரு சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 28 ஓட்டங்கள் எடுத்த நிலையில் கிருனால் பாண்டியா பந்து வீச்சில் அவரிடமே பிடி கொடுத்தார். இதன்பிறகு வந்த இர்ஃபான் பதான் 2 ஓட்டங்களில் நடையைக் கட்ட, கடைசிக் கட்டத்தில் ஆண்ட்ரூ டை 12 பந்துகளில் 2 சிக்ஸர், 2 பவுண்டரிகளுடன் 25 ஓட்டங்களும், ஜேம்ஸ் ஃபாக்னர் 27 பந்துகளில் 21 ஓட்டங்களும் சேர்த்து வெளியேற, குஜராத் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 153 ஓட்டங்களைச் சேர்த்தது.

மும்பைத் தரப்பில் கிருனால் பாண்டியா 4 ஓவர்களில் 14 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார். பின்னர் ஆடிய மும்பை அணியில் பார்த்திவ் படேல் அதிரடியாக ஓட்டம் சேர்க்க, ஜோஸ் பட்லர் 9 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இதையடுத்து நிதிஷ் ராணா களமிறங்க, தொடர்ந்து வேகம் காட்டிய படேல் 32 பந்துகளில் அரைச் சதம் கண்டார்.

இதன்பிறகு நிதிஷ் ராணா 19, ரோஹித் சர்மா 5 ஓட்டங்களில் நடையைக் கட்ட, பார்த்திவ் படேல் 44 பந்துகளில் ஒரு சிக்ஸர், 9 பவுண்டரிகளுடன் 70 ஓட்டங்களைச் சேர்த்து ஆட்டமிழந்தார். இதன்பிறகு போலார்ட் 15 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, கிருனால் பாண்டியாவுடன் இணைந்தார் ஹார்திக் பாண்டியா.

கடைசி 2 ஓவர்களில் மும்பையின் வெற்றிக்கு 15 ஓட்டங்கள் தேவைப்பட்டன. பாசில் தம்பி வீசிய 19 ஆவது ஓவரின் முதல் பந்தில் ஹார்திக் பாண்டியா 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்க, அதே ஓவரில் ஹர்பஜன் சிங் (0), மெக்லீனாகான் (1) ஆகியோரும் ஆட்டமிழந்தனர். இதனால் கடைசி ஓவரில் 11 ஓட்டங்கள் எடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது.

இர்ஃபான் பதான் வீசிய அந்த ஓவரின் முதல் பந்தில் சிக்ஸரை விளாசிய பாண்டியா, அடுத்த பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தார். 3 ஆவது பந்தில் பூம்ரா (0) ஆட்டமிழக்க, 4 ஆவது பந்தில் 2 ஓட்டங்களும் அடுத்த பந்தில் ஒரு ஓட்டமும் எடுத்தார் பாண்டியா. கடைசிப் பந்தில் ஒரு ஓட்டம் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பாண்டியா 20 பந்துகளில் 29 ஓட்டங்களில் ஆட்மிழந்தார். இதனால் மும்பை அணி 20 ஓவர்களில் 153 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தது.

இதையடுத்து சூப்பர் ஓவர் முறை கடைப்பிடிக்கப்பட்டது. அதில் மும்பை வெற்றி கண்டது. குஜராத் தரப்பில் பாசில் தம்பி 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

### பார்சிலோனா ஓபன் டென்னிஸ்:

# இறுதிச் சுற்றில் நடால், டொமினிக் தீம் ஆண்டி முர்ரே அதிர்ச்சித் தோல்வி



பார்சிலோனா ஓபன் டென்னிஸ்போட்டியில் ஸ்பெயினின் ரஃபேல் நடால், ஆஸ்திரியாவின் டொமினிக் தீம் ஆகியோர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

நேற்று நடைபெறவிருந்த இறுதிச் சுற்றில் நடால் வெல்லும்பட்சத்தில், பார்சிலோனா ஓபனில் அவர் வென்ற 10-ஆவது பட்டமாக இது அமையும்.

ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் நடைபெற்று வரும் இந்தப் போட்டியில் சனிக்கிழமை நடைபெற்ற அரையிறுதியில் உலகின் முதல் நிலை வீரரான முர்ரே 2-6, 6-3, 4-6 என்ற 'செட்' கணக்கில் ஆஸ்திரியாவின் டொமினிக் தீமிடம் அதிர்ச்சித் தோல்வி கண்டார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த அரையிறுதியின் முதல் செட்டை 6-2 என்ற கணக்கில் டொமினிக் தீம் கைப்பற்ற, அடுத்த செட்டை 6-3 என்ற கணக்கில் முர்ரே கைப்பற்றினார்.

இதையடுத்து நடைபெற்ற வெற்றியைத் தீர்மானிக்கும் 3-ஆவது செட்டின் ஆரம்பத்தில் தனது சர்வீஸை முர்ரேவிடம் இழந்த டொமினிக் தீம், பின்னர் சரிவிலிருந்து மீண்டார். அவர், தொடர்ந்து அபாரமாக ஆட, முர்ரேவுக்கு நெருக்கடிக்கு ஏற்பட்டது.

அதை சரியாகப் பயன்படுத்திக் கொண்ட டொமினிக் தீம், முர்ரேவின் மூன்று சர்வீஸ்களை முறியடித்து 6-4 என்ற கணக்கில் மூன்றாவது செட்டைக் கைப்பற்றி வெற்றி கண்டார்.

முர்ரேவுக்கு எதிராக டொமினிக் தீம் பெற்ற முதல் வெற்றி இது. தோல்வி குறித்துப் பேசிய முர்ரே, இது சவால் மிக்க ஆட்டம் என்றார்.

### நடால் வெற்றி:

மற்றொரு அரையிறுதியில் நடால் 6-3, 6-4 என்ற நேர் செட்களில் ஆர்ஜென்டினாவின் ஹொராஸியோ ஸபல்லோஸை தோற்கடித்தார்.

காலைக்கதிர் Kalaikkathir



## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தந்தை செல்வாவின் 40 ஆவது நினைவு தின நிகழ்வு நேற்று மட்டக்களப்பு - களுதாவளை கலாசார மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக் கிளை ஏற்பாட்டில் இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு :-

பல இனங்களைச் சோர்ந்த மக்கள் வாழ்கின்ற நாடுகளில் ஆட்சி ஒழுங்குகள் அதற்கு ஏற்புடையனவாக இருக்க வேண்டும்.

தந்தை செல்வா 1947 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டார். பின்னர் அவர் இந்நாட்டின் அரசியல் ஆட்சி முறை ஏற்றுக் கொள்ளக்கூடியது அல்ல என்ற வாதத்தை முன்வைத்து இலங்கைத்தமிழரசுக்கட்சியை ஆரம்பித்துஓர்அரசியல்பயணத்தைத் தொடக்கினார். அந்தப் பயணம் இன்றும் தொடர்கின்றது. அந்த விதத்தில்தான் நாங்களும் பயணித்துக் கொண்டிருக்கின்றோம்.

விசேடமாக 1956 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பல ஆக்கபூர்வமான விடயங்களில் தந்தை செல்வா ஈடுபட்டார். பண்டாரநாயக்கா-செல்வா ஒப்பந்தம் 1956 ஆம் ஆண்டு, டட்லி-செல்வாஒப்பந்தம் 1965 ஆம் ஆண்டு, சமஷ்டிக் கோரிக்கை 1949 ஆம் ஆண்டு, இவை எல்லாவற்றையும், ஜீ. ஜீ. பொன்னம்பலம் எதிர்த்து வந்தார். அந்த எதிர்ப்பினால் தன்னுடைய இலக்கைத் தந்தை செல்வா அடைய முடியாதிருந்தார். இவர்கள் இருவரும் தமிழ் தலைவர்கள். ஒரு தலைவரின் கொள்கைகளையும். கோட்பாடுகளையும் தொடர்ச்சியாகப் பொன்னம்பலம் எதிர்த்துக் கொண்டிருந்தார்.

அப்போதிருந்த தந்தை செல்வா அவர்களின் பயணத்தில் தற்போது பயணித்துக் கொண்டிருக்கும் இந்நிலையில் அதனையும் எதிர்த்து செயற்படுகின்றவர்கள் இருக்கின்றார்கள். இப்படிப்பட்டவர்கள் அமரர் பொன்னம்பலத்தின் வாரிசுகளா? பொன்னம்பலத்தின் சைக்கிள்களில் ஓடிக்கொண்டிருப்பவர்களா? இந்தக் கேள்விகளுக்குப்பதில்கொடுக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும்.

பண்டா - செல்வா ஒப்பந்தத்தின் மூலம் நிலத்தைப் பாதுகாக்கும் பொருட்டு பிராந்தியங்கள் இணைக்கப்பட்டு பிராந்தியச் சபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டு மக்கள் வாழ வேண்டும் என அந்த ஒப்பந்தம் செய்யப்பட்டது.

சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்து நாட்டில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும், போதிய சுயாட்சி வடக்கு, கிழக்கிற்கு வழங்கப்பட்டு அது செயற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை தந்தை செல்வா முன்வைத்தார். மாவட்ட சபைகளை உருவாக்கிக் காணி அதிகாரத்தை முழுமையாகக் கைப்பற்றி வடக்கு, கிழக்கைத் தமிழ் பேசும் மக்களுடைய பிராந்தியமாகச் செயற்படுத்த வேண்டும் என அவர் அவாக் கொண்டிருந்தார். இவற்றையும் அமரர் பொன்னம்பலம் எதிர்த்தார். தற்போதும் பொன்னம்பலத்தைப் பின்பற்றி அரசியலில் ஈடுபடுகின்றார்கள். தற்போதும் ஒவ்வொரு விடயத்தையும் எதிர்த்துக் கொண்டு வருகின்றார்கள். நாங்கள் பேச்சுக்களில் ஈடுபடுவதை இவ்வாறானவர்கள் விரும்பவில்லை.

எமக்குத் தேவை எமது மக்களின் ஒற்றுமையாகும். எமது மக்கள் அனைவரும் ஒருமித்து நிற்கவேண்டும். நாங்கள் ஒரு அரசியல் தீர்வைப் பெறுவதற்கு முயற்சிக்கின்றோம்.

சனிக்கிழமை நடைபெற்ற தமிழரசுக் கட்சியின் கூட்டத்தில் இவ்விடயங்கள் தொடர்பில் மிகவும் தெளிவாகப் பேசினோம்.

கருமங்கள் முன்னெடுக்கப்படுகின்போது அனைவரினதும் ஆதரவைப்பெற்றுபகைமையை வளர்க்காமல், இந்நாட்டிலுள்ள மக்களும் அதனை ஆதரிக்கக் கூடிய வகையில், நிதானமாக, நீண்ட நோக்குடன் சர்வதேசத்தில் தடம் பதிக்கக் கூடிய விதத்தில் நாங்கள் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

உருவாக்கப்படுகின்ற அரசியல் சாசனம் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையால் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவேண்டும். பின்னர்நாட்டு மக்களிடம் சர்வசன வாக்கெடுப்புநடத்தப்பட்டு, அது அங்கீகரிக்கப்பட வேண்டும். இது ஒருசாதாரணமான விடயமல்ல; நடைமுறைச் சாத்தியமற்ற விடயமுமல்ல; எம்முடைய அரசியல் சூழலில் அதனை அடையக் கூடிய நிலைமை இருக்கின்றது. அதற்காக நாங்கள் அனைவரினதும் ஆதரவைப் பெற்றுச் செயற்பட்டு வருகின்றோம். அதற்காக நாங்கள் பிடிகொடுக்கும் அளவிற்கு நடந்து கொள்ளக் கூடாது.

எமது மக்களுக்கு ஏற்பில்லாத தீர்வை நாங்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம்; ஏற்கவும் முடியாது; ஏற்கப்போவதுமில்லை. அது உறுதி. தீர்வு ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பில் மக்களுக்குச் சமர்ப்பிப்போம், மக்களின் ஆலோசனைகளை நாம் பெறுவோம், மக்களின் கருத்துக்களுக்கு உட்பட்டுத்தான் நாங்கள் இறுதி முடிவெடுப்போம். இந்நிலையில் ஏற்பட்டுள்ள வாய்ப்பை நாங்கள் உதாசீனம் செய்யக் கூடாது. இப்படிப்பட்ட வாய்ப்பு இதற்குப் பின்னர் வரும் என நாங்கள் எதிர்பார்க்க முடியாது.

பல சந்தர்ப்பங்களை - இந்த நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்னரும், அதற்குப்பிறகும் ஏற்பட்ட வாய்ப்புக்களை - நாங்கள் இழந்திருக்கின்றோம். இந்தத்தடவை நாங்கள் இழக்க முடியாது.

தற்போதைய நிலைமையிலும் எமது மக்கள் நாள் தோறும் காணி விடயங்கள், மீள் குடியேற்றங்கள் தொடர்பில் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றார்கள். இவை முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டும். எமது மக்கள் தங்களது இறைமையின் அடிப்படையில் அதிகாரங்களைத்தாங்கள் கைப்பற்றி, அதனைத் தாங்கள் பயன்படுத்தி, அதன் மூலம் தங்களுடைய அபிலாசைகளையும், உரிமைகளையும் அனுபவிக்கக் கூடிய நிலைமை ஏற்பட வேண்டும்.

உரிய விதத்தில், பல வழிகளில் அரசியல் தீர்வைப் பெறுவதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றோம். இவை அனைத்திற்கும் எமது மக்கள் மத்தியில் ஒற்றுமை இருக்கவேண்டும். இற்றவரையில் மக்கள் ஒருமித்து தமிழரசுக் கட்சியின் பின்னால் நின்றுள்ளார்கள். அதுதான் அவர்களின் அரசியல் சாசனம்.

மக்களை ஆட்சி புரிவதற்கு அம்மக்களின் ஒப்புதல் இருக்க வேண்டும். அந்த மக்கள் ஜனநாயக ரீதியாக அந்தச் சம்மதத்தைத் தெரிவித்திருக்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்ஸிலில் சொல்லப்பட்டுள்ளது. எனவே, எமது விருப்பத்திற்கு மாறாகத்தான் நாங்கள் ஆட்சி செய்யப்படுகின்றோம், ஆகவே, எமக்குரிய சரியான ஆட்சி முறைமையை சர்வதேசத்தின் ஆதரவுடன் பெற்றுக் கொள்ள வேண்டும். - என அவர் மேலும் தெரிவித்தார்.

## ஈழத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செல்வாவின் 40ஆவது நினைவுதினநிகழ்வுநேற்று மட்டக்களப்பு - களுதாவளை கலாசார மண்டபத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பட்டிருப்புத் தொகுதிக் கிளை ஏற்பாட்டில் இடம்பெற்றது.

'ஜெனீவாத் தீர்மானமும் ஈழத் தமிழர் அரசியலும்' எனும் தலைப்பில் அங்கு சுமந்திரன் உரையாற்றினார். அப்போது அவர் மேலும் கூறியவை வருமாறு :-

இப்பொழுது சில ஊடகங்கள் - குறிப்பாகத்தமிழ் ஊடகங்கள் - தேவையில்லாமல் இல்லாதவை; பொல்லாதவை எல்லாவற்றையும்சொல்லிமக்களைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன.

பொய், புரட்டு, உண்மை இல்லாத சங்கதிகளையும் மக்களுக்குச் சொல்லி எமக்கு அநியாயம் புரிந்தவர்களுக்காக அவகாசம் கொடுத்துக் கொண்டிருக்கின்றன.

தொடர்ச்சியாக இத்தகைய செய்திகளை - விசேடமாகத் தமிழ் ஊடகங்கள் - செய்து துணை போய்க்கொண்டிருக்கின்றன.

கருத்துப்பரிமாற்றம்நல்லதுதான். ஆனால், தெளிவாகவே இல்லாத விடயத்தை இருக்கிறதென்றும், இருக்கிறதை அதன் சாரமே இல்லையென்றும் ஊதிப் பெருப்பித்துச் சொல்லுவது ஊடக தர்மத்துக்குப் பொருந்தாத ஒன்று.

ஊடகவியலாளர்கள், ஊடகங்கள் தாம் வெளியிடும் விடயங்களின் உண்மைத் தன்மையை ஒன்றுக்குப் பலமுறை ஒப்புநோக்கிப்பார்த்துவெளியிட வேண்டும்.

தீர்மானங்களை, பரிந்துரைகளை, அறிக்கைகளை அலசி ஆராய்ந்து ப்டித்துப் பார்க்க வேண்டும்.

ஒருவர்சொல்லிவிட்டார்என்பதற்காக அதுதான் உண்மை என்றிருந்து விடக் கூடாது, அவரது கருத்தோடு சேர்த்து உண்மையையும் மக்களுக்கு ஊட்ட வேண்டும். இதுதான் ஊடகங்களினதும் ஊடகவியலாளர்களினதும் பொறுப்பு வாய்ந்த கடமையாகும்.

எல்லாரும் எங்களைக் கைவிட்டு விட்டார்கள் என்கின்ற ஒப்பாரி இப்பொழுது நடந்து கொண்டே இருக்கின்றது.

ஆனால், உண்மை அதுவல்ல. யாரும் எங்களைக் கைவிடவில்லை. எங்களுக்குச் சாதகமான எத்தனையோ விடயங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன.

50ஆம், 51ஆம் ஆண்டிலே ஆரம்பித்த அந்தப் பயணம் படிப்படியாக இன்றைக்கு இந்த அளவுக்கு வந்து முன்னேற்றம் கண்டிருக்கின்றது.

மிக முக்கியமாக - அரசியல் தீர்வொன்று வழங்கப்படவேண்டும், புதிய அரசமைப்புச் சட்டம் உருவாக்கப்படவேண்டும், உருவாக்கப்படும் என்ற விடயத்தை இலங்கை அரசாங்கம் 2015 ஒக்ரோபர் 15ஆம் திகதி ஐ. நா. மனித உரிமைகள் கவுன்ஸிலிலே உத்தரவாதமளித்துள்ளது.

இலங்கையிலே இதற்கு முன்னர் இடம்பெற்ற அத்தனை விடயங்களும் மீண்டும் நிகழாமல் இருப்பதற்கான உத்தரவாதமும் தரப்பட்டிருக்கிறது.

புதிய அரசமைப்பிலே தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கான தீர்வு பற்றியும் உத்தரவாதப் படுத்தப்பட்டிருக்கிறது.

இது இலங்கை அரசு சர்வதேச சமூகத்திற்குக் கொடுத்த வாக்குறுதிகளாகும். இலங்கை இவற்றை ஏற்று, அங்கீகரித்துக் கையெழுத்திட்டிருக்கின்றது.

முன்னர் நடந்திருக்காத இந்த விடயங்கள் சர்வதேச மட்டத்திலே நடந்தேறியிருக்க, இங்கே ஒன்றுமே நடக்கவில்லை என்று கூப்பாடு போடுவது சரியல்ல.

இத்தகைய முன்னேற்றங்களோடு ஈழத் தமிழர் அரசியல் நகர்வு திருப்பு முனையில் சென்று கொண்டிருக்கின்றது.

உலகம் எங்களைக் கைவிட்டு விடக் கூடாது. தந்தை செல்வாவின் வழியிலே வந்த சம்பந்தன், தமிழர்களுக்குத் தலைவராகக் கிடைத்திருப்பது ஒரு பெரும் பாக்கியம் என்றே கருத வேண்டும். - என்றார்.

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் தலைவரான ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் பொரளை கெம்பல் மைதானத்தில் மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளது. பேரணி பிற்பகல் 2 மணியளவில் மாளிகாவத்தையில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மே தினக் கூட்டம் கண்டி கெட்டம்பே மைதானத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் நடைபெறவுள்ளது. கன்னொருவ மற்றும் கண்டி மகளிர் உயர் கல்லூரி ஆகிய இடங்களிலிருந்து இரு பேரணிகள் கண்டிக்கு வரவுள்ளன.

பொது எதிரணியின் மே தினக் கூட்டம் கொழும்பு காலி முகத்திடலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையிலும், மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) மே தினக் கூட்டம் அந்தக் கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவின் தலைமையில் கொழும்பு பீ.ஆர்.சி. மைதானத்திலும் நடைபெறவுள்ளன.

முன்னிலைசோஸலிசக்கட்சியின்மேதினப்பேரணிகோட்டை தனியார் பஸ் நிலையத்தில் இருந்து ஆரம்பமாகும்.

ஜாதிக ஹெல உறுமய கட்சியின் மே தினக் கூட்டம் அதன் தலைவரும் அமைச்சருமான பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தலைமையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தின் முன்னால் நடைபெறவுள்ளது.

ஏனைய அரசியல் கட்சிகளின் பேரணிகளும் கூட்டங்களும் நாட்டின் பல்வேறு பாகங்களில் நடைபெறவுள்ளன.

## மே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலையில், அரசாங்கம் எந்த விதமான பதிலையும் வழங்கவில்லை என்றும், இந்த நிலையிலேயேதாங்கள் மேதினத்தை துக்கதினமாக அனுஷ்டித்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்தப் போகிறார்கள் எனவும் அவர்கள் கூறியுள்ளனர்.

குடும்பத்தில் உழைப்பவர்களான எமது உறவினர்கள் காணாமல்போயுள்ளனர். இந்த நிலையில் யாருக்காக நாங்கள் உரிமைகளைக் கேட்டு மேதினத்தை அனுஷ்டிப்பது எனவும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்திற்கு முன்பாகக் கூடாரம் அமைத்து நேற்றுடன் 54ஆவது நாளாகப் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களே மேதினத்தை துக்கதினமாக அனுஷ்டிக்கப்போவதாக அறிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-81)

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களது புனர்வாழ்வு, வாழ்வாதாரம், அரசியல் வாழ்க்கை ஆகியவற்றைக் கவனத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய செயற்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே சுமந்திரன் இதனைக் கூறியுள்ளார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தின் மேலும் தெரிவிக்கையில் -

புனர்வாழ்வுப் பயிற்சிகளை பெற்ற போராளிகளின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்த வேண்டும் என்பதுடன் சமூகத்தின் சாதாரண மக்களாக அவர்களை உரிய முறையில் பராமரிக்கப்படவும் வேண்டும்.

உரியகாலத்தில் அவர்களின் அரசியல் வாழ்க்கைக்கான கதவைத்திறக்க வேண்டும் என தமிழரசு கட்சியின் மத்திய செயற்குழு தீர்மானித்துள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட முன்னாள் போராளி கள் சிலர் பேச்சுநடத்தினர். எனினும், அது வெற்றியளிக்கவில்லை.

இதன் பின்னர், அவர்கள் சுயேச்சைக் குழுவாக தேர்தலில் போட்டியிட்ட போதிலும் நாடாளுமன்றத்திற்கு எவரும் தெரிவு செய்யப்படவில்லை.

யுத்தம் காரணமாக நீண்டகாலமாக இடம்பெயர்ந்து வாழும் மக்கள் குறித்து ஆராய அமைச்சு மட்டத்தில் உப குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன. எனினும் அந்த குழுவில் தமது கருத்துக்களை முன்வைக்க மக்கள் தயங்கி வருகின்றமையைக் காணமுடிகிறது.

இது சம்பந்தமாகப் பிரதமர் நேரடியான கவனத்தைச் செலுத்தவேண்டும் எனவும் மத்திய செயற்குழு தீர்மானம் ஒன்றை எடுத்துள்ளது.

நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்கள் சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட உப குழுக்கள் ஓர் இனத்திற்கு மாத்திரம் வரையறுக்காமல், உரிய தினத்திற்கு முன்னர் சகல மக்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். - என சுமந்திரன் எம்.பி. கூறினார். (ம)

## கேப்பாபிலவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீட்புப் போராட்டம் நேற்று 61 ஆவது நாளாகத் தொடர்ந்தும் இடம்பெற்று வருகிறது.

இன்று சர்வதேச தொழிலாளர் தினம். தொழிலாளர்களின் உரிமை வேண்டிப் போராடும் நாளில், நாம் தொழில் புரியும் இடங்களை இழந்த நிலையில் வாழ்கின்றோம். எனவே எமது சொந்தக் காணிகளை, வயல் நிலங்களை, கடல் வளத்தை ஆக்கிரமித்துள்ள படையினரால் எமது தொழில் வாய்ப்புக்கள் பறிபோயுள்ளன.

இந்நிலையில் தொழிலாளர்களின் உரிமைக்காக போராடும் இந்த நாளில், எமது தொழில் உபகரணங்களோடு வீதியில் ஒப்பாரிப் போராட்டமொன்றை நிகழ்த்தி எமது உரிமைக்ளைக் கோரவுள்ளோம். - என்று அவர்கள் தெரிவித்தனர். (உ-81)

# இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது!

## இராஜாங்க அமைச்சர் டிலான் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 01

இராணுவத்தைச் சேர்ந்தவர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.

சரத் பொன்சேகாவை போன்று முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இது பொருந்தும் என்று பதுளையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கரலத்துக்குக் காலம் முன்னாள் அரசியல்வாதிகள் அரசியலில் ஈடுபடும்போது பல்வேறு பிரச்சினைகள் தோற்றம் பெறுகின்றன.

அரசியல் மற்றும் இராணுவ நிர்வாகம் ஆகிய இரண்டும் வெவ்வேறானவை. அதன் காரணமாகவே சரத் பொன்சேகா ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட போது அதில் தோல்வி அடைந்திருந்தார்.

அதன் காரணமாகத்தான் மற்றுமொரு தேர்தலிலும் சரத் பொன்சேகாவுடன் அவரின் கட்சியும் தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இராணுவத்தில் இருக்கும் போது இராணுவத்துக்காக மாத்திரம் பணியாற்ற வேண்டும். சரத் பொன்சேகா, கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் இராணுவத்தில் உள்ள அனைவருக்கும் இது பொருந்தும்.

இராணுவத்தில் பணியாற்றும் போது விதிவிலக்காக சிலர் இருப்பார்கள். அவர்கள் அரசியலில் ஈடுபடும்போது தோல்வி அடைகின்றனர் .

ஆகவே, செய்ய முடியாதவற்றில் தலையிடாமல் செய்ய முடியுமான விடயங்களை மாத்திரம் அவர்கள் செய்ய வேண்டும்.-என்றார். (ஐ)



## இலவச தையல் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம், மே 01

பெதஸ்தா விஷன் மாற்றுத் திறனாளிகள் தொழிற்பயிற்சி கூடத்தினால் இலவசத்தையல் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பயிற்சிநெறியைப் பயில விரும்பும் மாற்றுத் திறனாளிகள் மற்றும் ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை இல.14, கருவேலடி ஒழுங்கை, ஆடியபாதம் வீதி கொக்குவில், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்புமாறு பெதஸ்தா விஷன் மாற்றுத் திறனாளிகள் தொழிற்பயிற்சி நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

மேலதிக விவரங்களுக்கு 0779543012 அல்லது 0773609005 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு விவரங்களைப் பெற முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



## கருப்பைக் கழுத்துப் புற்றுநோய் தொடர்பில் பயிற்சிப் பட்டறை

கிளிநொச்சி, மே 01

கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்க்கு எதிரான தடுப்பு ஊசி வழங்குதல் தொடர்பில் சுகாதார அமைச்சால் சுகாதார வெளிக்கள உத்தியோகத்தருக்காக விசேட பயிற்சித் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சித் திட்டம் இலங்கையின் சகல மாவட்டங்களிலும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவால் நடத்தப்பட வுள்ளது.

அதன் அடிப்படையில், கருப்பைக் கழுத்துப் புற்றுநோயைத் தடுப்பதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாவது பயிற்சி வகுப்பு கிளிநொச்சியில் இடம்பெற்றுள்ளது.

வெள்ளிக்கிழமை கிளிநொச்சி பழைய வைத்தியசாலை மண்டபத்தில், சுகாதார அமைச்சின் தொற்றுநோய் விஞ்ஞானப் பிரிவின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த சுகாதார வைத்திய அதிகாரிகள், தாதியர்கள், குடும்பநல உத்தியோகத்தர்கள், பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு இந்தப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோய் விஞ்ஞான பிரிவின் தொற்று நோய் விஞ்ஞான விசேடவைத்திய நிபுணர் தீபா கமகே இது தொடர்பில் கருத்துக்களை வழங்கினார்.

இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள சுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்கள் இந்தப் பயிற்சியைப் பெற்றவுடன், ஜூலை மாதம் தொடக்கம் கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்த் தடுப்பு ஊசியானது இலங்கையின் தேசிய நீர்ப்பீடனத் திட்டத்தில் இணைக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-70)

## ஆலய திருவிழாக்கள்

கிளிநொச்சி, மே 01

கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகைக் குளம் அம்மன் ஆலயத்தின் வருடாந்தத் திருவிழா இன்று திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், மறுநாள் செவ்வாய்க் கிழமை தேர்த்திருவிழாவும், 10 ஆம் திகதி புதன்கிழமை தீர்த்தத் திருவிழா என்பனவும் நடைபெறவுள்ளன. (ச)

* * *

கோண்டாவில் ஸ்ரீமகா காளி அம்பாள் ஆலய மஹோற்சவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, 10 தினங்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும், மறுநாள் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (ச)

* * *

கைதடி, மே 01

கைதடி ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மஹோற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும்.

எதிர்வரும் 22 ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், மறுநாள் சப்பைரதமும், தொடர்ந்து 24 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் முற்பகல் 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும், மாலை ஆறு மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறவுள்ளன. (ச)

## வர்த்தகர்களுக்கு இன்று விடுமுறை

உலக தொழிலாளர்கள் தினத்தை அனுஷ்டிப்பதற்காக அனைத்து தொழிலாளர்களுக்கும் விடுமுறை வழங்குகிறது என்று வவுனியா வர்த்தகர் சங்கம் அறிவித்துள்ளது.

வவுனியாவிலுள்ள வியாபார நிலையங்களில் பணிபுரியும் அனைத்துத் தொழிலாளர்களுக்கும் இன்று விடுமுறை வழங்கப்படவுள்ளது.

இதனடிப்படையில் வவுனியாவிலுள்ள அனைத்து வியாபார நிலைய உரிமையாளர்களும் தொழிலாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. (ஐ)

# ஆஸ்திரேலிய நவுருதீவு நரகம்!

## சாட்சியம் அளித்துள்ளார் புகலிடக் கோரிக்கையாளர்

கொழும்பு, மே 01

ஆஸ்திரேலியாவின் நவுருதீவு ஒரு நரகம் என்று புகலிடம் கோரியுள்ள இலங்கைத் தமிழர் ஒருவர் சாட்சியம் அளித்துள்ளார்.

சட்டவிரோதமாக படகுமூலம் சென்றவர்கள் ஆஸ்திரேலியாவின் நவுருதீவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தடுப்பு முகாமில் இருந்து தெரிவு செய்யப்பட்ட இளைஞன் கடந்த ஏப்ரல் 22 ஆம் திகதியன்று விக்டோரியாவில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றினார். இந்த நிகழ்வு அகதி நடவடிக்கை தொடர்பான அமைப்பு ஒன்றால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது கடல் மார்க்கமாக ஆஸ்திரேலியா சென்ற இலங்கைத் தமிழ் புகலிடக் கோரிக்கையாளரான அவர் கருத்துத் தெரிவிக்கையில்:-

22 நாள் படகு பயணத்தில் தப்பித்த பின்னர் நவுருவில் இரண்டு வருடங்கள் எவ்வாறு செலவிட்டேன் என்று தெரியவில்லை.

இலங்கையில் முன்னாள் அரசியல் கைதிகள் என்ற ஒரு நரகத்திலிருந்து தப்பிய பின்னர் நவுரு என்ற மற்றொரு நகரத்துக்கு நான் அனுப்பப்பட்டேன்.

மனிதர்களின் மூச்சுக் காற்றுதான் சுதந்திரம். நீண்டகால தடுப்புகள் நம்பிக்கையை இழக்கச் செய்கின்றன.

புகலிடக் கோரிக்கையாளர்கள் தொடர்பான கொள்கைகள் மக்களை கொன்றுள்ளது என்று அவர் ஆதங்கம் வெளியிட்டார்.

கடந்த ஆண்டு ஏப்ரல் 27 ஆம் திகதியன்று தீ வைக்கப்பட்ட நிலையில், அண்மையில் உயிரிழந்த தனது நண்பர் ஓமெய்ட் என்பவரை அவர் உதாரணமாக இதன்போது குறிப்பிட்டுள்ளார்.

புகலிடம் கோருவோர் மற்றும் தஞ்சம் கோருவோர் தடுத்து வைக்கப்படுவதன் மூலம் மனித உரிமை மீறப்படுவது குறித்தும் சுட்டிக்காட்டியுள்ளார். இது ஆஸ்திரேலியாவில் தொடர்கிறது என்றும் அவர் கூறியுள்ளார்.

ஆஸ்திரேலிய சமூகத்தில் இணைந்து பங்களிப்பு வழங்க விரும்புகிறேன் எனவும் தனது உரையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். (ஐ)

# 32 வெளிநாட்டுப் பிரஜைகள் வடக்குக் கடற்பரப்பில் கைது

## 30 மியன்மார் நாட்டவர்; இருவர் இந்தியர்



காங்கேசன்துறை, மே 01

மியன்மாரில் இருந்து கடல் வழியாக வெளிநாடொன்றுக் குத் தப்பிச்செல்ல முற்பட்ட சட்ட விரோத குடியேற்றவாசிகளான 16 சிறுவர்கள் உட்பட 32 பேர் காங்கேசன்துறைக் கடற்படை யினரால் கைது செய்யப்பட்டுள் ளனர்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 10 மணியளவில் சர்வ தேசக் கடற்பரப்பில் இருந்து இலங்கைக் கடற்பரப்பிற்குள் நுழைய முற்பட்டபோதே தாங் கள் அவர்களைக் கைது செய்த னர் எனக் கடற்படையினர் தெரி வித்தனர்.

தாங்கள் வழமையான ரோந் துப் பணியில் ஈடுபட்டிருந்த போது அதிக எண்ணிக்கையான பொதுமக்களுடன் இலங் கைக் கடற்பரப்பிற்குள் நுழைய முற்பட்ட மேற்படி கப்பலை மறித் துச் சோதனையிட்டனர் எனவும் அதன்போதே அவர்கள் சட்ட விரோதமாகப் பயணித்தனர் என்பது கண்டறியப்பட்டது என வும் கடற்படையினர் தெரிவித்த னர்.

அந்தப் படகில் மியன்மார் நாட்டைச் சேர்ந்த 32 பேர் பய ணித்தனர். அதில் 16 பேர் சிறுவர் கள். அதிலும், பிறந்து 15 நாள்க ளேயான சிசு ஒன்றும் 4 மாதங் களே ஆன குழந்தை ஒன்றும் உள்ளடங்கும். 7 பேர் பெண்களா வர். மற்றைய ஏழு பேரில் ஆண் கள் இருவர், அவர்களைக் கப்ப லில் அழைத்துச் சென்றவர்கள் இந்திய மீனவர்களாவர்.

அவர்களைக் கைது செய்த தாங்கள் அவர்களுக்கு மருத் துவ உதவிகளை வழங்கினர் எனவும் பின்னர் பொலிஸாரிடம் அவர்கள் கையளிக்கப்பட்டனர் எனவும் கடற்படையினர் தெரி வித்தனர். (ம-40)




# பிரதேச செயலாளர்களுக்கு வடக்கில் இடமாற்றங்கள்

## உடனடியாக நடைமுறைக்கு வருகின்றதாம்

யாழ்ப்பாணம், மே 01

யாழ். மாவட்டத்தில் உள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளில் சில பிரதேச செயலர்களுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச செயலராக கடமையாற்றிய சிறி பருத்தித் துறை பிரதேச செயலராகவும், ஊர்காவற்றுறைப் பிரதேச செய லராகக் கடமையாற்றிய திருமதி எழிலரசி நல்லூர் பிரதேச செய லராகவும், சங்கானைப் பிரதேச செயலராகக் கடமையாற்றிய எஸ்.சோதிநாதன் வேலணைப் பிரதேச செயலராகவும், கோப் பாய் மேலதிக பிரதேச செயல ராகக் கடமையாற்றிய பிரேமினி சங்கானைப் பிரதேச செயல ராகவும், பருத்தித்துறைப் பிர தேச செயலராகக் கடமையாற் றிய த.ஜெயசீலன் வட மாகாண சபைக்கும், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலராக திருமதி மஞ் சுளாதேவியும், தெல்லிப்பழைப் பிரதேச செயலராகக் கடமை யாற்றிய எஸ்.சிறீமோகன் கர வெட்டிப் பிரதேச செயலராகவும், கரவெட்டி பிரதேச செயலராகக் கடமையாற்றிய த.சிவசிறி தெல் லிப்பழைப் பிரதேச செயலராக வும் இடமாற்றம் செய்யப்பட்டுள் ளனர்.

இந்த இடமாற்றம் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சி னால் நேற்றுமுன் தினம் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# தமிழக மீனவர்களின் படகுகளை படிப்படியாக விடுவிக்க அரசு முடிவு

சிறைபிடிக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களின் படகுகளை விடுவிக்க வேண்டுமானால் மீனவர்கள் இனி எல்லை தாண்டி வரமாட்டோம் என்று உறுதி அளிக்க வேண்டும் என்று இலங்கையின் மீன்பிடித்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

மீன்பிடி அமைச்சர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு, சேதமான படகுகளைத் தமிழக மீனவர்களே திருத்திக்கொள்ள வேண்டும் என்றும் இந்த நிபந்தனை களின்படி பகுதி பகுதியாகத் தமிழக மீன வர்களின் படகுகள் விடுவிக்கப்படும் என் றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அதன் பிரகாரம், முதலில் 20 படகு களை விடுவிப்பதற்கு முடிவு செய்துள் ளதாக அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார்.

இந்த அறிவிப்புக்கு தமிழக மீனவர் சங்கத் தலைவர்களான என்.ஜே.போஸ், எமரிட், தேவதாஸ் ஆகியோர் வரவேற்பும், நன்றியும் தெரிவித்துள்ளனர். அத்தோடு, ஏழை மீனவர்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற் கொண்டு இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 143 படகுகளையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பில் தாக்கப்படுகின்றமையை நிறுத்திக் கொள்ளவேண்டும் என்றும் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர் களின் 143 படகுகளையும் விடுவிக்க வேண்டும் எனவும் அண்மையில் இந் தியாவிற்கு விஜயம் செய்திருந்த இலங் கைப் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிடம், இந்தியப் பிரதமரும் வெளியுறவுத்துறை அமைச்சரும் கோரிக்கை விடுத்திருந் தனர். அதன் பின்னணியில் இந்த அறி விப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத் தக்கது.

# தாம் நினைத்திருந்தால் ஆட்சியை ஒரே இரவிலேயே பிடித்திருப்பாராம்!

## பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா இப்படிக் கூறுகின்றார்

தான் இராணுவத்தளப தியாக இருந்தபோது தனக்கு தேவை இருந்தி ருந்தால் ஒரே இரவில் கொழும்பைச் சுற்றி வளைத்து ஆட்சியைத் தாம் கைப்பற்றியிருப்பார் என அமைச்சர் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

அப்போது தனக்கு இருந்த அதிகாரங்களுக்கு அமைய, தான் அதைச் செய்வது இலகுவாக இருந் திருக்கும் எனத் தெரிவித்த பொன்சேகா, ஒழுக்கத்தை மீறி அவ்வாறு செயற்ப டும் பழக்கம் தனக்கு இல் லை எனவும் கூறினார்.

பேலியகொட பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன் றில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட பின்னர் ஊடகவியலாளர்களுக் குக் கருத்துக் கூறுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதேவேளை, "உங்க ளுக்கு பாதுகாப்பு துறை யில் உயர் பதவி வழங்கப் படும் என அண்மையில் தெரிவிக்கப்பட்ட கருத்து, ஜனாதிபதியால் கேலியா கக் கூறப்பட்டது என அமைச்சர் எஸ்.பி. திஸா நாயக்க கூறியிருக்கி றாரே?" என பொன்சேகா வைப் பார்த்து ஊடகவி யலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் பொன்சேகா, எஸ்.பி.திஸாநாயக்க அமைச்சர் என்பதால் தான் அவரை மதிக்கிறார் எனவும் அவர் அனைத் தையும் கேலியாக மாற் றிக்கொண்டுள்ளார் எனக் கூறினார். (ம)

# மரண அறிவித்தல்

மண்ணில்
12
★
11
★
1928



விண்ணில்
29
★
04
★
2017

## அமரர் சுப்பிரமணியம் திருநாவுக்கரசு (சாமியார்)

(யாழ்ப்பாணம் பழைய வர்த்தக சங்கத் தலைவர், பிரபல பாக்கு வியாபாரி, சிவதொண்டர்)

யாழ்ப்பாணம் - கஸ்தூரியார் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் திருநாவுக்கரசு அவர்கள் 29.04.2017 சனிக்கிழமை அன்று சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சின்னாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - காசிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பார்வதிப்பிள்ளையின் பாசமிகு கணவரும், பாலாம்பிகை, உமாமகேசன் (கனடா), ஞானாம்பிகை ஆகி யோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் துஷ்யந்தினி (கனடா), சிவபாஸ்கரன் (உரிமையாளர் சாரங்கா நகைமாடம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், கௌரிதேவி (கனடா), ஸ்ரீரங்கன் (பிரான்ஸ்), மாதங்கி, பிருந்தாயினி, பிருந்தா, அனித்தா, சேயோன் (கனடா), சாரங்கன் (பொறியியல் பீடம் - SLIIT), வைஷ்ணவி, வைதேகி (யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாட சாலை), சஞ்சீவன், தனுஜா, சுரேன், அருண்புஜன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேரனும், பிரகீர்த், ஜெனுஷ் (கனடா) ஆகியோரின் பாசமிகு பூட்டனும், காலஞ் சென்ற இராசரட்ணம் மற்றும் முத்துக்குமாரசுவாமி (லண்டன்), நாகரட்ணம், தங்கரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற தங்கரட்ணம் மற்றும் இராசமணி (லண்டன்), இராசேந்திரம், காலஞ்சென்ற சிவானந்தம், வள் ளிப்பிள்ளை, காலஞ்சென்ற சிவனடியான் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.05.2017) திங்கட்கிழமை பிற் பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத் துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

374, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட் டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.05.2017 இல் அச்சிட்டப்பட்டுவெளியிடப்பெற்றது.